ஓம்
"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—௬. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹூ கார்த்திகைமீ ௨௨ (17-11-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—௧௧.

## தோத்திரம்

காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற கண்ணிலாக் குழவி யைப்போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாங் காப்பிட் டதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல் பெலக்கவிளை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற பெரியவிளை யாட்ட மைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பில் நமனைவிட் டடருற வுறுக்கி யிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில் இசைந்து துயில்கொண்மின் என்று
சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே சின்மயா னந்த குருவே.

—தாயுமானசுவாமிகள்.

# காதல்மணக் கனிவுரை கழறல்.

(வேலணை, திரு. சி. இராசரத்தினம் அவர்கள்)

(கும்மிமெட்டு)

காதல்ம ணமெனும் போதினி லேகவி
காதம்பி றக்குதெங் காதினிலே
தீதிம ணமென்ற பேச்சள வேபெண்கள்
கேயமு திக்குது மூச்சினிலே 1.

"ஈருட லோருயிர்" போலுங்கா தலுள
மொத்தவர் கூடியி யலுங்காதல்
சேரும்வி னையிறைத் தெய்வக்கா தறமிழ்ச்
செல்விய ரோம்பிவ ளர்த்தகாதல் 2.

கம்பர்க விசயங் காட்டுங்கா தறமிழ்
கற்றவ ரோதித்து திக்குங்காதல்
நம்பியெ டுத்துரை காடுங்கா தனெறி
காடிக்கல் லாடர்க விலுங்காதல் 3.

வள்ளுவர் வாய்மொழி பேசுங்கா தல்வகை
வாய்த்ததொல் காப்பிய ரோதுங்காதல்
கொள்ளுமி றையனுர் கூறுங்கா தறிருக்
கோவையெ டுத்துரை யாடுங்காதல் 4.

'கள்ளம்ப யின்றுகற் பாகுங்கா தல்'கறைக்
கர்த்தனு மீதெனக் காணுங்காதல்
'உள்ளங்க னிந்தற மோங்கும்'கா தலுள
மொத்தவ ருடிம கிழுங்காதல் 5.

"கொடுப்பார டுப்பாரின் றாகுங்கா தல்"குணங்
கொண்டவர் கூடிக்கு லாவுங்காதல்
வடுக்கார்வ ருத்திட வாடுங்கா தல்வரி
வாங்குகா மன்படை காடுங்காதல் 6.

ஈரமி லவெரி வீசுங்கா தலின்ப
மீனுஞ்சாக் தக்கினி யாகுங்காதல்
ஆரவடங்தன லாகுங்கா தலதி
அன்பர்பு லக்துகொண் டாடுங்காதல் 7.

"யாரினுங் காதல" மென்றகா தலாடி
"யாரினும் யாரினு"மென்னு காதல்
சேரினுக் 'தும்மச்செ பூக்கும்'காத றமிழ்ச்
சேயிழை யாரொடு சேருங்காதல் 8.

"பசப்பெனப்" பைதலு ழக்குங்கா தல்பருப்
பட்டகண் ணீரொழுக் காகுங்காதல்
வசப்புற மாலைவ ளருங்கா தல்'வளை
வண்ணங்க ருகிட' வாடுங்காதல் 9.

சொல்லும்போ தின்புசு ரக்குங்கா தலன்பு
சேர்ந்தவ ருள்ளங்க ழிக்குங்காதல்
அல்லலுற் றுழும ருகாக்கா தன்முறை
அன்புகெ ழீஇமத மூறுகாதல் 10.

விலைபேசிச் சீதனம் வேண்டிப்பெண் கொள்பவர்
வேதனை கண்ணுறக் கண்டறிந்தோம்
தலையாய காதலைப் போற்றிடு வோமது
தானற மாமெனச் சாற்றிடுவோம் 11.

அன்புமணங்கண்டிங் கானந்தங் கொள்ளுவோ
மாசைக்கா தலைய கத்தினிற் கொள்ளுவோம்
துன்பம ணத்தினைத் தூரத்த கற்றிநால்
செப்புத்த மிழ்மணஞ் செய்திடுவோம் 12.

(வரும்)

ஆறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும், பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே.

## உடுவில் ஞானவைரவ சுவாமிகோயிலும் பெரியபுராண படனமும்.

ஐயன்மீர்!

மேற்படி கோவிலில் யுவ வருஷம் ஐப்பசிமாசம் 2ந்தேதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்குள் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் இவ்வூர் சைவ நன்மக்களின் வேண்டுகோளுக்கு இசைந்து பிரம்மஸ்ரீ ஐ. முத்துச்சாமிக்குருக்கள் அவர்களால் தொடங்கப்பட்டு செவ்வனே புராணம் நடைபெற்று வருகின்றன. ஏழாலை வாசரும் சிவ பக்தி அடியார்பக்தியில் சிறந்தவருமாகிய வே. தம்பையா உபாத்தியாயர் அவர்கள் பயன் விரித் துரைப்பவராக நியமிக்கப்பட்டுத் தினந்தோறும் பகல் 1மணி தொடக்கம் 4மணி வரையிலும் நாயன்மார்களுடைய புராணங்களைப் படனம்பண்ணிவருகின்ற கிரமங்களும் அங்கு புராணத்திருமுறையை வாசிப்பவர்கள் பொருள் சொல்பவர்கள் ரக்ஷாபந்தனம் ஆசாரியர் முன்னிலையில் தரித்து பவித்திர தாரணர்களாய் பஞ்சாட்சர உபதேசம் பெற்றவர்களாய் விளங்குகின்றனர். நாள்தோறும் முடிவிலே நாயன்மார்களின் கதைகளின் சாராம்சங்களை தேவார திருவாசகங்களை ஆதாரமாகக்கொண்டு மேற்படி குருக்களவர்களால் சுருக்கமாக உபதேசிக்கப்பட்டு வருகின்றன. உடுவில் வாசிகளும் அயற்கிராமத்திலுள்ள சனங்களும் ஆண் பெண் என்னு மிருபாலாரும் பக்திரசத்தில் ஈடுபட்டு அமிழ்ந்தினவர்களாய் இறைவ னானந்தம் பெற்று வருகின்றார்கள். இடையிடையே மிருதங்க வீணாவேணு பக்கவாத்திய சகிதமாயும் கதாப்பிரசங்கமாயும் போதிக்கப்படுகின்றன. அங்கு வந்து குழுமிக்கேட்டு ஆனந்திக்கும் சிவனடியார்கள் புராணத் திருமுறையைப் பூசித்து வழிபடுவதற்காக பால் பழம் கற்கண்டு புட்பம் முதலிய பூசைக்கு உரிய உபகரணங்களைக் கொடுத்து மகிழ்கின்றனர். சுருங்கக்கூறுமிடத்து இவ்வாலயத்தில் நடக்கும் புராணபடன விதியைப் போல் மற்றைய தரும நிலையங்களில் அவ்வவ் இடங்களுக்கு அதிகாரியாயுள்ளவர்கள் புராணபடனத்துக்கு வேண்டாதனவாகிய சதுர்க்கச்சேரி மேளக்கச்சேரி வாணவேடிக்கை முதலியவற்றை நீக்கி சமய வளர்ச்சிக்கு ஏதுவாகிய சத் விஷயங்களைமாத்திரம் நடத்திச் சிவபிரானுடைய திருவருளைப் பெற்று உய்யும் படி இவ்வியாசத்தை வெளியிடுகின்றேன்.

சைவ அபிமானி.

## நெடுந்தீவு மகாசனசபை

### புங்குடுதீவு—வேலணைப்பாலத்துக்கு ஆதரவு.

நிகழும் 1935-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9 ம் திகதி சனிக்கிழமை மாலை 6-மணியளவில் மேற்படி மகாசனசபைக் கூட்டம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் கூடியது. திரு. சு. நாகேந்திரர் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

அத்தருணம் கூட்டத்தின் நோக்கத்தையிட்டும் வேலணை புங்குடுதீவுப் பாலத்தினால் 700 குடிசனமுள்ள நெடுந்தீவு வாசிகளுக்குக் கிடைக்கும் நன்மைகளைக் குறித்தும் திரு. V. J சின்னையா, R. சுவாமிநாதன், G. D. தம்பையா, J. சவிரிமுத்து ஆதியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் சபையின் ஆலோசனையின்படி பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறியன.

1. ஆடவரும் பெண்டிரும் பிள்ளைகளும் பிரயாணத்தி லனுபவிக்கும் கஷ்டங்களை நிவிர்த்தி செய்வதற்கு வேலணை புங்குடுதீவுப் பாலம் அத்தியாவசியமா யிருத்தலினால் அதுவே முதன்மையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது.

2. இத்தீர்மானம் தேசாதிபதியவர்களுக்கும் போக்குவரத்து மந்திரியவர்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டுமென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

பின்னர் புது அங்கத்தவர் தெரிவு நடைபெற்றது. திருவாளர் N. S. H. ஸ்ரனிஸ்லோஸ் அக்கிராசனராகவும் திரு. S. நாகேந்திரர், V. J. சின்னையா, R. சுவாமிநாதன் உப தலைவர்களாகவும் திரு. A. D. தம்பையா காரியதரிசியாகவும் N. J. சின்னத்துரை உப காரியதரிசியாகவும் திரு. S. சின்னப்புநாயகம் தனாதிகாரியாகவும் இன்னும் 30 அங்கத்தவர்கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பெற்றது.

ஈற்றில் அக்கிராசனருக்குத் துதிகூறியதும் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

—கடித.

# "யாழ்ப்பாணம் 'யூ. டீ. சீ.' ஒழியவேண்டும்" அல்லது திருத்தி யமைக்கப்படல்வேண்டும்.

## சுண்டிக்குளி மகாசனசபையில் தீர்மானங்கள்.

### சக்கடத்தாரின் குற்றச்சாட்டும் தலைவரின் ஒருதலைச் சார்பும்

### பதில் சொல்லத் தெரியாத அங்கத்தவர்.

(நமது நிருபர்.)

கடந்த 9-11-35 சனிக்கிழமை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகாசன சபையின் 6-வது வருடாந்தக்கூட்டம் மேற்படி சபை மண்டபத்தில் கூடியது. சபை சம்பந்தமான விஷயங்கள் முடிந்ததும், தற்போதுள்ள 'யூ. டீ. சீ. என்னும் நகரசங்கத்திற்குப் பதிலாக ஓர் 'முனிசிப்பல்' சங்கம் அமைக்கப்படல் வேண்டுமென இம் மகாசபை அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறது என்று' ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"ஒரு தலைச்சார்பான ஓர் போலி விசாரணையின்பின்னர், தனது சக்கிடுத்தாராயிருந்தவரை 'யூ.டீ.சீ.' உடனே இளைப்பாற்றியமையை இச்சபை பலமாகக் கண்டிக்கிறது. எதிரியான மிஸ்ரர் ஹிச்கொக் தமது நிலைமையை விளக்குவதற்காகச் சமுகமளிப்பதற்குத்தானும் 'யூ. டீ. சீ.' அவரை அனுமதிக்கவில்லை. இற்றைக்கு இரண்டு வருடங்களின்முன் குறித்த சக்கிடுத்தார், தமது சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென மநுச்செய்தபோது, அவர் மிகுதியும் தகுதிவாய்ந்தவர் என, இப்போது குற்றம்பாரிக்கும் தலைவரே சிபாரிசு செய்திருக்கிறார். எனவே சக்கிடுத்தார் திறமையற்றவர் என்கிற குற்றச்சாட்டுப் பொருந்தாது என்பது இச்சபையின் அபிப்பிராயமாகும். மேலும், சக்கிடுத்தார்மீது சாட்டப்பட்ட குற்றங்களை ஒரு தலைச்சார்பின்றி ஆராய்ந்து விசாரணைபுரிதல் வேண்டுமென்று இச்சபை ஸ்தல சுயாட்சிநிலைய அதிகாரியை வேண்டிக்கொள்ளுகிறது." என்ற இத்தீர்மானத்தைக் கொணர்ந்த மிஸ்ரர் C. நீயூற்றன் இதன்மேல் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"சிரங்குமுற்றிப் பவுந்திரமானதுபோல எமது 'யூ. டீ. சீ' நிர்வாகம் மிகவும் ஈன ஸ்திதியை யடைந்துகொண்டே வருகிறது. அதன் அங்கத்தவர்கள் சிலரையொழிந்த மற்றையோர் யாவருக்கும் இந்த ஸ்திதி நன்கு விளங்கும். 'யூ. டீ. சீ. நிர்வாகத்தைப்பற்றி ஸ்தல சுயாட்சி ஸ்தாபனக் காரியாலயத்திலுள்ள ஒருவர் விசாரணைசெய்ய வேண்டுமென திரு. இ. சிவகுருநாதர் இன்றுகாலை நிகழ்ந்த 'யூ. டீ. சீ'க் கூட்டத்தில் பிரேரித்தபோது அப்பிரேரணை நிராகரிக்கப்பட்டது. முழுப்பூசினிக்காயை சோற்றில் மறைக்க முயலுபவர் போல 'யூ. டீ. சீ' நிர்வாகத்தில் ஊழல்கள் இல்லை என்கிறார்கள்.

தற்போது நமது 'யூ. டீ. சீ. அப்புக்காத்துமாரையும், பிறக்கிறாசிமாரையுமே அதிகமான அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கிறது, இவர்கள் நீதி, நியாயம் யாவற்றையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டார்கள். ஒருவர்மீது குற்றம்பாரித்தால் நீதிபதியாயுள்ளவர் எதிராளியின் வாய்ப்பிறப்பைக் கேட்டபின்பே குற்றமிருந்தால் தண்டிக்கவேண்டியது. ஆனால், ஹிச்கொக் சக்கிடுத்தார் விஷயத்தில் 'யூ. டீ. சீ' தலைவரே முறைப்பாட்டுக்காரனாயும், தீர்ப்பளிக்கும் நீதிபதியாயும் விளங்கினார். எதிரி வெளியே போகும்படி உத்தரவிடப்பட்டார். அவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை. இது பெரும் வெட்கக்கேடான விஷயம். இது யாழ்ப்பாணத்திற்கு அவமானத்தை வாங்கிக்கொடுத்துவிட்டது."

மூன்றும்வட்டாரப் பிரதிநிதியான மிஸ்ரர். V. A. துரையப்பாவும் அங்கு சமுகமாயிருந்தார். அப்போது மிஸ்ரர். C. M. அல்பிரட் அவரைச் சுட்டிக்காட்டி "இதோ எங்கள் பிரதிநிதி மிஸ்ரர். V. A. துரையப்பா நிற்கின்றார். இவரும் சக்கிடுத்தார் இளைப்பாறுவதற்கு வாக்குச்சம்மதம் கொடுத்தார். ஏன் அப்படி வாக்குச்சம்மதங் கொடுத்தார் என்பதை அவர் தம்மைத் தெரிந்தனுப்பிய எங்களுக்கு விளக்குதல் அவரின் கடமையாகும்" என்றார். உடனே தலைவராயிருந்த மிஸ்ரர். A. M. புராடி, மிஸ்ரர். துரையப்பாவை நோக்கி, "உமது நிலைமையை விளக்கும்" என்று கேட்டதும், அவர் தம்மால் ஒன்றுங்கூறமுடியாதென்றுதெரிவித்தார்.

இதன்பின்பு மிஸ்ரர். அல்பிரட்டின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. அப்போது அங்கு சமுகமளித்திருந்த நாலாம்வட்டாரப் பிரதிநிதி திரு. பொன்னம்பலம், தாம் அத்தீர்மானத்தை அங்கீகரித்து வாக்களிக்கவில்லையென்று உரத்துக் கூறினார்.

"வரி வசூலிக்கும் J. G. இராசா என்பவரிடமிருந்து சக்கிடுத்தார் பணம் பெற்றார் எனபதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. குறித்த இராசா தாம் பணங் கொடுத்ததாக ஒத்துக்கொண்டிருக்கிறார். இது பாரதூரமான குற்றம். எனவே அந்த இராசா என்பவர் மீது கிறிமினல் வழக்குத் தொடர்தல் விருப்பமில்லையென்றால் தக்க நடபடிக்கைகளையாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என இச்சபை தலைவருக்கு அறிவிக்கிறது" என்ற தீர்மானமும் நிறைவேறியது. இத்தீர்மானத்தின் மீது திரு C. பொன்னம்பலம் பின்வருமாறு பேசினார்:—

"யூ. டீ. சீ. உத்தியோகத்தர் விஷயமாக நான் முன்னர் ஓர் பிரேரணையை எடுத்துள்ளேன், மேற்படி உத்தியோகத்தர்களைப்பற்றிய கேள்விகள் கேட்பதற்கு அங்கத்தவர்களுக்கு உரிமையில்லை. அதற்குப் பொறுப்பு தலைவராகிய தம்முடையதேயாகும் என்று எனது பிரேரணையைத் தலைவர் நிராகரித்துவிட்டார். அன்று அங்கத்தினர் என்னுடன் ஒத்துழைக்காமையால் நான் அத்தீர்மானத்தை அத்தோடு நிறுத்திவிட்டேன். ஆயினும், மூன்றும்வட்டாரப் பிரதிநிதி இதுவிஷயத்தை யூ. டீ. சீக்குக் கொண்டுவருவாரானால் நான் அவரை ஆதரிக்கிறேன். இனி, ஹிச்கொக் சக்கிடுத்தார் விஷயமாய்ச் சொல்லும்போது நான் செய்தமை பிழையென்று என்னைத் தெரிந்தனுப்பியவர்கள் கூறுவார்களேயானால் நான் எனது பதவியை விட்டு நீங்கத் தயார்."

மிஸ்ரர். அல்பிரட் கூறியதாவது:—

"இது மிகவும் கேவலமான நிலைமை. தலைவரைப் பின்பற்றி அவர் பாடும் பல்லவிக்கு ஆடுவதற்காக நாம் பிரதிநிதிகளை யூ. டீ. சீக்கு அனுப்பவில்லை. உத்தியோகத்தரின் நடத்தைக்குத் தலைவர்தான் பொறுப்பாளியாகுமேல் அவர்களை நியமிப்பதில் யூ. டீ. சீ. ஏன் பொறுப்பெடுக்கவேண்டும். எமது பிரதிநிதிகள் தம்மால் ஏதுஞ்செய்ய முடியாதெனக் கண்டால் உடனே மானமுடையவர்கள் போலத் தத்தம் பதவிகளை விட்டு நீங்கவேண்டும். அப்பதவிகளில் ஏன் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருத்தல்வேண்டும்? இவர்கள் விலகவேண்டும்—நாங்கள் யூ. டீ. சீயைப் பகிஷ்கரிக்கவேண்டும்—ஒன்று யூ. டீ. சீ. திருந்தவேண்டும்—அல்லது அது அழிந்து ஒழியவேண்டும்."

பின்னர் ஸ்ரீ இராசநாயகம் கூறியவை பின்வருமாறு:—

"யூ டீ. சீ. மின்சாரப்பகுதியிலுள்ள சில ஒழுங்கீனங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவின்போது யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஒலி பரப்பும் கருவி ஒன்று யூ. டீ. சீத் தலைவரின் மருகரால் வைக்கப்பட்டது. அக்கருவியின் பொருட்டு குறித்த மருகருக்கு உதவிய மின்சாரத்திற்கு 'மீற்றர்' என்னும் அளவுகருவி யாது காரணத்தினால் வைக்கப்படவில்லை. அதற்கு எவ்வளவு மின்சாரம் உபயோகிக்கப்பட்டது என்பதை எவ்வாறு அறிந்தனர்? இராமலிங்கமுதலியார் வீட்டில் ஓர் கொண்டாட்டம் நடந்தபோது உதவப்பட்ட மின்சாரத்தின் கணக்கென்ன?"

கடைசியாக இம்மகாசபையின் சார்பில் ஓர் தூதுக்கோஷ்டி ஸ்தல சுயாட்சி நிலைய அதிகாரியிடஞ் சென்று இங்குள்ள நிலைமையைப் புலப்படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## நாவலர் திருநாள்

### சைவ மகாசபை, காரைநகர்

நிகழும் கார்த்திகை மீ ௩ ந உ (18-11-35) திங்கட்கிழமை மாலை 6½ மணிமுதல் ஆறுமுகநாவலர் திருநாட கொண்டாட்டம் சி. க. இராசசிங்கம் B. A. அவர்களின் தலைமையில் மேற்படி சபை மண்டபத்தில் ஆரம்பமாகும்.

அத்தருணம் பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களால் நாவலரும் அவர்சேவையும் என்னும் விஷயம்பற்றி உபந்நியாசம் செய்யப்படும்.

—கடித.

பத்திரக்கிரயம்
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 5.

# ஈழகேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கா்ற்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—கூ. யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ ஸூ கார்த்திகை மீ உ௨ (17-11-35) ஞாயிற்றுக்கிழமை பகுதி—கக.


## உடல் நூல்.

(சாவைநகர், ஆசிரியகலாசாலைப் பிரசாரகர் திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

### கடவுள் வாழ்த்து

சத்தவகைத் தாதுவாற் சார்ந்தநம் தேகத்
தைச், சித்தமுறக் கூறவந்தேன் சீராக—
பத்தியொடு, என்றுஞ் சிதைவுறாது எல்ல
வரும் போற்றிநிற்ப, ஒன்றான நாதனடி
யோது.

ஒருவர் பலவகையான துறை பலசென்று கலை பல கற்றாலும், அவைகளிற் பாண்டித்தியம் படைத்தாலும், தன் தேகசுகங் கெடின் முன்னவையாலான பலதிறப்பயனும் எப்பயனுடைத்து. ஆகையால் மனித தேகத்தையும், அதன் பலவகை உறுப்புக்களின் தொழிலையும், அவைகளின் சுகத்தையுங் கற்றறிந்து "கண்ணை யிமைகாப்பதுபோல்" அதன்வழி நிற்றலே மானிடர் போற்றும் மாபெருங்கலையாம். இதனைத் தெள்ளிதிலோர்ந்த சிறியேன் என் சிற்றறிவுக் கெட்டியபடி சிறு புத்தகமாக்கக் கருதி அதன்கண் யான் கூறவிருப்பவைகளை முற்போந்து நம்மீழகேசரி வாயிலாகப் பாகம் பாகமாகக் கூற வந்துள்ளேன். அவைகளுள் குற்றமிக்குளதென்றாலுங் குணமழைக் தொழுகல் வாசகர்களாம் நுங்கள் கடன்.

### தேக அமைப்பு

நந்தேகம் சப்த தாதுக்களாலானவோர் பிண்டம் என்று பன்னூல் பல ஓர்ந்த பாவலர் நாவலரின் கூற்று. வைத்திய நிபுணர் அது சப்த தாதுவாலன்று; சப்த தாதுவின் சதமடங்கான கூறுவகையாலாக்கப்பட்டதொன்று என்று கூறுகின்றனர். தேகாரோக்கிய நூலைத் தம்மொழியில் அதி சிறப்பாகத் தந்துள "லிஸ்ரர்" எனனுமோர் மேல்நாட்டாசிரியர் இப் பல்வகைத் தாதுக் கூறுபாட்டினையுடைய நந்தேகத்தை இரு பெருங் கூறுகளாய்த் தொகுத்துப் பின் அவைகளை வகுத்தும் விரித்துங் கூறுகிற்பர். அவர் கோட்கிணங்கி நாமும் நந்தேகம் என்பு, முருந்துபோன்றதிடபதார்த்தத்தாலும, தசை, நார்போன்ற மிருதுவான பதார்த்தத்தாலும் ஆனவோர் பிண்டமெனக் கூறுவான் துணிந்தனம். அத்தேகம் நாமெடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்கியைய ஆறு பெருங் கூறுகளாக வைக்கப் பட்டிருக்கின்றன. அவையாவன: திடபதார்த்தமாகிய என்பாலான கங்காளம், நொய்த பதார்த்தங்களாலான பேசி மண்டலம், சீரண மண்டலம், இரத்த சுவாச மண்டலம், நரம்பு மண்டலம், கழிவு சம்பந்தமான உறுப்புக்கள் என்பவைகளே.

### கங்காளம்

கங்காளம் அல்லது எலும்புக்கூடு (Skeleton) இது நந்தேகத்தின் மிருதுவான பாகம் நீங்கிய பாகத்தைச் சுட்டுகிறது. நம் மனுஷ கங்காளத்தில் இருநூற்றெட்டு என்புகளிருக்கின்றன. (208) அவை யிவையென ஆராயுமுன் அவைகள் எவைகளாலாக்கப்பட்டிருக்கின்றன, அவைகளின் கூட்டுத்தொழில் எவையென அறிவது நமக்குமிகுந்த உபயோகத்தையளிக்கும். கங்காளமாகிய என்புக் கோர்வையில் ஓர் என்பை நாமெடுத்து அதைச் சிறிதுநேரத்திற்கு அமிலத்தி (acid) லிட்டு வைப்போமாகில் அது எப்பக்கத்துக்கும் வளையுமென்பது புலப்படவரும். அதிலுள்ள சுண்ணாம்பு அமிலத்திற் சிணித்ததுவே அதன் வளைவுக்குக் காரணம். இன்னோர் என்பைச் சிறிதுநேரத்துக்கு அக்கினிச் சுவாலையில் இட்டுவைத்தால் அது நீறாகி நொறுங்கிவருவதைக் காணலாம். இப் பின் அனுபவத்தால் அக்கினியி லிடப்பட்டபோது என்பிலுள்ள செலதிம் என்னும் பசை (Gelatine) அற்றுப் போயினது என்பது புலனாகவரும். ஆகவே இவ்விரு அனுபவ அப்பியாசங்களினாலும் என்பு சுண்ணாம்பினாலும், செலதிபினாலுமானது என்பது புலப்படுகின்றது. இவ்வகை என்புகளினாலான கங்காளத்தின் தொழில்தானெவையென ஆராயுமிடத்து அது இருவகைத்தொழிலை ஆற்றுகின்றது. மிருதுவான தசை நார்போன்ற பாகங்களைத் தாங்கி நிற்பதொன்று, இராச உறுப்புகளாகிய மூளை, இரத்தாசயம், சுவாசாசயம் போன்ற உள்ளிந்திரியங்களைக் காத்துக்கொள்வதின்னொன்று.

### கங்காளத்தின் பேரம்சங்கள்

பல வென்புக்களாலாகிய இக் கட்டுக்கோப்பை (Skull) முண்டம் (abdomin) உற்காயம (upper extremitees) அதக்காயம் (Lower extremitees) என நான்கு பெரும் பிரிவுகளாய் வகுக்கலாம். ஒவ்வோர் பிரிவிலும் பல பேதமான ரூபமமைந்த என்புகள் பல ஒன்றாகப பந்திக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் தொகையை யதி சிரத்தையுடன் நாம் கணக்கிடுவோமாகில் அத்தொகை இருநூற்றெட்டு என அறியலாம்.

(1) தலை என்புகள்: ஓர் உயிர் நீத்த மனுஷனின் கபாலத்தையெடுத்து நாம் பரிசோதித்துப் பார்ப்போமாகில் கரோகைகளென்னுங் கருக்கு விளிம்பினாற் பிணைக்கப்பட்ட எட்டு என்புகளும், செவியொவ்வொன்றிலும் நான்காக எட்டு என்புகளும், முகத்திற் பதினன்கெலும்புகளும் ஆக மொத்தம் 30 என்புகளெனக் காணலாகும்.

(2) முண்டஎன்புகள்: பழுவென்புகள் (ribs) இருபத்தினான்கும், முள்ளந்தண்டிலுள்ள முள்ளென்புகள் (Vertebrabes) இருபத்தினான்கும், கூபகத்திலுள்ள கூபக என்பு (Pelvics) நான்கும், நெஞ்சென்பு ஒன்றுமாக மொத்தம் ஐம்பத்துநான்கென அறியலாகும்.

(3) உற்காயத்தில் அறுபத்துநான்கு என்புகளுண்டு. அவைகளை விரிக்கிற் பெருகுமென விடுத்துச் சுருக்கமாய்க் கூறுகிறேன்.

(4) அதக்காயத்தில் அறுபதென்புகளுண்டு. அவைகளையு மாராய்ந்து பரிசத்தாற் காணவும்.

### பொருத்துக்கள்

என்பாலான சட்டக்கோப்பு பல இடங்களில் பந்திக்கப்பட்டிருக்கின்றது. இப் பந்தனைகளின் அலலது பொருத்துக்களின் தொழில் தானெவையென ஆராயுங்கால் அவைகள் அசைவைப்பற்றியனவாயும், பற்றுதனவாயும் விளங்குகின்றன. அப்பொருத்துக்கள்தானெவையென இலக்கணை கூறுங்கால் என்பும் என்பும் சந்திக்குமிடங்களென்பன தெளிவாகின்றன. இவைகள் தொகையில் அநேகமாய் ஏன் அமைந்திருக்கின்றனவென நினைக்குங்கால் ஓர் புகைரதஸ்தானத்தின் கைகாட்டி பல தடைகளுடன் வீழ்த்தப்பட்டாலன்றி அதன் அசைவு ஏற்படக்கூடுமென்றாலும் இலகுவிற் பழுதடையும். அக்கிகழ்ச்சிபோன்று நம கை, கால்களின் விரல்களை நாம் நம் சித்தத்தின்படி முடக்கும்போது அவை பற்றப்பட்டிருக்கும் மறு அவயவங்களும் முடங்கப்பார்க்குமல்லவா? அன்றியும் இயக்கச் சடத்துவமதிகமாய் ஈற்றிற் குறித்த அவயவங்கள் பாதிக்கவும் படக்கூடும். ஆகவே பொருத்துக்கள் பலவாயிருப்பது அவசியமெனக் கண்டுகொண்டோம்.

### பொருத்துக்களின் வகைகள்

பொருத்துக்கள் பலவகை அசைவுகளுக்குத தக்கதாய் பலவகையாயின. சில பொருத்துக்கள் விரற் பொருத்துப்போல அசைவுள்ளனவாயும, வேறு சில தலையோட்டுப் பொருத்துப்போல அசைவற்றனவாயும் இன்னுஞ் சில முழந்தாட் பொருத்துப்போல் இருபக்கம் அசைவனவாயும், இன்னுஞ்சில தோட் பொருத்தும் தொடைப்பொருத்தும்போல நாலுதிசைக்கு மசைவனவாயும் விளங்குகின்றன. தொகுத்துக்கூறுகில் நந்தேகத்திற் காணப்படும் பொருத்துக்கள அசையும் பொருத்துக்கள், அசையாப் பொருத்துக்கள், நாலுபக்கத்துக்கும் அசையும் உழலைப் பொருத்துக்கள் என நான்குதிறத்தன.

(தொடரும்)


கிராதார்ச்சுனீயம்

1936-ம் ஆண்டிற்குரிய
சிரேட்ட பாடசாலைத் தராதரபத்திர
வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தினலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்


## உதிர்ந்த மலர்கள்.

சட்டமறுப்பியக்கம் நிற்பாட்டப்பட்டபடியால் சுயராச்சியப்போர் நின்றுவிட்டதென எண்ணவேண்டாம். இந்தியா சுயராச்சியத்தை அடைந்தபின்னரே சுதந்தரப்போர் நிறுத்தப்படும். அல்லது சுயமதிப்பையுடைய ஒரு இந்தியன் இருக்கும்வரையும் அப்போர் நடந்துகொண்டேவரும். ஒருவர் தான் சுயமதிப்புடன் இருப்பாரா? அன்று. அப்படியான நிலை ஏற்படாது. ஆகையால் இந்தியா சுயராச்சியத்தை அடைந்தபின்தான் உண்மையான சமாதானம் ஏற்படும்.

இந்தியரின் சமுதாய வாழ்வில் எவ்வளவோ பெலவீனங்கள் இருக்கின்றன. அவைகளை நீக்கிக்கொண்டே சுயராச்சியப் போரைச் செய்யவேண்டும். ஒற்றுமையில்லாமையே எங்கள் பெருங் குறையாகும். பல்வேறு வகுப்பினரும் ஒற்றுமையில்லாமலிருப்பதற்குக் காரணம் பரஸ்பரநம்பிக்கையின்மையே. காங்கிரஸ்சபை ஆரம்பிக்கப்பட்ட காலந்தொடங்கி ஒற்றுமையை நாடியே உழைக்கின்றது. பன்முறை முயன்றும் சித்தியெய்தாதாயும் மென்மேலும் காங்கிரஸ் சபையினர் ஒற்றுமையை நாடியே உழைக்கின்றனர்.

ஹரிஜனங்களின் நிலை முன்னரிலும் எவ்வளவோ நன்மையடைந்துளது. அவசரப்படுவதால் ஒரு நன்மையும் ஏற்படப் போவதில்லை. சமீபத்தில் நாஸிக் நகரில் நடந்த விஷயங்கள் பெரும் துக்கத்தை உண்டுபண்ணக்கூடியன. அம்பேத்காரின் புதியவழியை நீங்கள் நன்குணர்வீரென எண்ணுகிறேன். நான் அறிந்தளவில் அவரைத் தமிழ்நாட்டில் யாராவது பின்பற்றுவரென எண்ணவிடமில்லை. ஹரிசனங்கள் பொறுமையுடனும் பிடிவாதத்துடனும் தமது கடமையை ஆற்றில் நன்மை எப்படியாவது வந்தேதீரும். எல்லாவகுப்பிலுமுள்ள உண்மையாளர்கள் ஹரிஜன முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ளார். முன்னேற்றம் சடுதியில் கைகூடவேண்டுமா அல்லது சிறிது சிறிதாக ஏற்படவேண்டுமா என்பதிற்றான் அபிப்பிராய பேதம். எப்படியாயினும் சமீபத்தில் மாற்றங்கள் ஏற்படுமென்பதில் சந்தேகமின்று.

இப்போது நாம் நாடுவது யாது? இங்கிலாந்தில் ஆங்கிலேயர் வசிப்பதுபோல் நாங்கள் இந்தியாவில் வசிக்க விரும்புகிறோம். வேறதிகமொன்லும் நாம் கேட்கவில்லை. இதனிலும் குறைய எதாவது எங்கட்கு வழங்கப்படின் நாம் அதனை ஏற்கமாட்டோம். இதைப்பெற நாம் முயற்சிசெய்தால் அது சன்மார்க்கத்துக்கு மாறாகுமா?

—பாபு இராசேந்திரப்பிரசாத்.

## முஸோலினியின் களிப்புரை

### இத்தாலியரின் யுத்தவன்மை

### இப்போது கண்டது அற்பமே.

### இனித்தான் உண்மையை அறிவர்.

"இத்தாலியரின் போர்வன்மையின் பெருமையில் ஆயிரத்தில் ஒருபங்கே இப்போது யாவருங் கண்டனர். இனிக்காணவிருப்பதே பெரிதாகும். நாங்கள் ஐரோப்பாவிலும் ஆபிரிக்காவிலும் மற்றைய எந்த இடத்திலும் எங்கள் பெருமையைப் பாதுகாக்க எப்போதும் ஆயத்தம். ஒருமாதத்துள் அபிசீனியாவின் பழைய இருகணக்கால் போகவேண்டியதைக்கொடுத்து கணக்குகளைப் பாக்கியின்றித் தீர்த்துவிட்டோம்" என இத்தாலிய சர்வாதிகாரியாகும் முஸோலினியின் பிறந்ததினக் கொண்டாட்டத்தன்று கெம்பீரத்துடன் உரைத்தனர்.

# மழைவிட்டுந் தூவானம் மாறவில்லை.

## ஆசிரியர்கள் தொகையே காரணம்.

### சராசரித்தொகை குறைக்கப்படுதல்வேண்டும்.

சுயமொழி ஆசிரியர்கள் சிலகாலமாகத் தம் உழைப்புக்குப் பலன் பெறுதலிற் பெரிதுங் கஷ்டப்பட்டனர். அரசினர் வருடமுடிவில் உதவிநன்கொடைப் பணத்தைக் கொடுத்து வந்ததினுல், மனேஜர்மார் அதிலொருபகுதியைத் தாம் கைப்பற்றிக்கொண்டு மிகுதியை உபாத்தியாயர்கட்குக் கொடுத்துவந்தனர். இக்குறைபாட்டைப் பல்லாற்ருனும் உணர்ந்து அரசினர், உபாத்தியாயர்கட்குத் தாமே நேர்முகமாக மாசந்தோறும் வேதனங்கொடுக்கும் ஏற்பாட்டைச்செய்தனர். இவ்வழியாரம்பமாய் ஐந்து மாசங்கள் சென்றுவிட்டன. சென்றுமென்! உபாத்தியாயர்களுட் பெருட்பாலார் தாமே தபாற்கந்தோர் மூலம் பணம்பெற்ற விடத்தும், அதிலோர் பகுதியைப் பாடசாலை முகாமைக்காரருக்குக் கொடுத்து வருகின்ருர்கள். முகாமைக்காரரும் எக்காரணம் பற்றியோ உபாத்தியாயர்கள் கொடுக்கும் பணத்தினைப் பெற்றுவருகின்ருர்கள். உபாத்தியாயர்கள் பணம் கொடுத்தற்கும் முகாமைக்காரர் பணம் பெறுதற்கும் பல காரணங்கள் கூறப்படுகின்றன. காரணங்கள் யாவையெனினும், அவை பகுத்தறிவுள்ள மக்களால் வெறுத்தொதுக்கப்படுவனவே. உபாத்தியாயர் தாம் தமது சம்பளத்திலொரு பகுதியை மனேஜருக்குக் கொடுக்காவிட்டால் தம்மை மனேஜர் நீக்கிவிடுவார் என்று பயங்கொள்கிருர். இஃதோரளவில் உண்மையே. இவர் கொடுக்குந் தொகையிலும் கூடிய தொகையை மனேஜருக்குக் கொடுக்கவும் ஆசிரியத்தொழில புரியவும் பலர் சுற்ருடலிலிருக்கிருர்களென்பது நாமறிவதே. எவ்விதநேர்மையுடன் பணியாற்றியபோதும், முகாமைக்காரருக்குக் கப்பங்கட்டாமை காரணமாக அஃதொழிந்த, ஏதுவல்லா ஏதுக்கள் மூலம் உபாத்தியாயர் நீக்கப்படுவதை யாம் பார்க்கின்றேம். உபாத்தியாயர் வித்தியாபகுதி அதிகாரிகட்கறிவித்த விடத்தும், அவர்கள் விசாரணைசெய்தவிடத்தும், முகாமைக்காரர் தவறை அறிந்தும் அறியாதார் போற் சென்றுவிடுகின்றனர். இந்நிலையில் இச்செயற்கு யாது புரியலாமென்பதை உணர்ந்து ஆவனசெய்தல் கல்வியறிஞர்கடனென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

உபாத்தியாயர்களாற் கொடுக்கப்படுவதும் மனேஜரால் வாங்கப்படுவதுமான பணம் பாடசாலைவளர்ச்சியின் பொருட்டுச் செலவிடப்படுவதாயின், அது அறிஞருலகால் விரும்பப்படுவதொன்ரும். அங்ஙனமின்றி மனேஜர் வயிற்றுப்பாட்டுக்கே செல்வதெனின் இதன் நிலையை யாமென்னென்பேம்! மனேஜர் தமது பணத்தில் பாடசாலையைக கட்டினுரென வும், அவருக்கு வரும்படி வேண்டாமோ எனவும், உபாத்தியாயர்கள் தம் சம்பளத்தில் ஒரு பகுதியை மனேஜருக்குக் கொடுத்தல் தகுதியெனவும், சில உபாத்தியாயர்கள் சொல்ல யாம் கேட்டிருக்கின்றேம். வியாபாரத்துக்கு முதலிடுவதுபோல், உபாத்தியாயர்கள் சம்பளமூலம் லாபம் பெறலாமென்ற கருத்தோடு பாடசாலைக்கட்டிடம் இட்டமனேஜரின் மனக்கருத்திருந்தவாறென்னை! இவ்விதகருத்துடன் எந்த மனேஜராவது பாடசாலை அமைத்திருப்பாரென்று யாம் சற்றேனும் கருதவில்லை. ஆசிரியரல்லா உபாத்தியாயர்கள் தம் உத்தியோக அரணுக்காகச் சொல்லுஞ் சாட்டன்றிவேறல்லவென்பதே நமது கருத்து.

அவ்வாறு நடைபெறுவதாக வைத்துக்கொள்வோம். அதனுல் இழுக்குண்டெனக் கருதுபவனுயினும், இழுக்கில்லையென வைத்துக்கொள்வோம. என்னை? சில நூற்றுக்கணக்கான ரூபாய்களைப் பாடசாலையின்பொருட்டுச் செலவழித்து, அதனைச் சிறுதொகைப்பணமாகச் சிலகாலத்துக்கே வாங்கிவருபவர்களாதலின். பாடசாலையின் நலனுக்கென ஒருசதமேனுஞ் செலவுசெய்யாது மாசந்தோறும் ஐம்பது ரூபாவுக்குக் குறையாத தொகையை உபாத்தியாயர்களிடம் பெற்றுக்கொண்டு முகாமைவேலையைப் பார்ப்போர்தன்மையை யாமென்னென்பேம்! சுமார் ஈராயிரம் ரூபாவரை பாடசாலைப் பணமாயிருப்ப, அக்காலத்து முகாமைப் பதவியை ஏற்று, பாடசாலைப் பணத்துடன் இன்னும் ஈராயிரம் ரூபாவை முற்பணமாகச் செலவுசெயது, நாலாயிரம் ரூபாவையும் தாமே முதற் செலவுசெயததாகக் கணக்குக்காட்டி, அரசினர் உதவிப் பணம்பெற்ற உடன் பணமுழுவதையும் கபழீ இகாஞ்செய்துகொண்டு ரூபா ஆயிரம்வரை தமக்கு நட்டமேற்பட்டுவிட்டதாக வாய்ப்பறையறைந்து திரிவதோடு, முகாமைப்பதவியையும் விட்டேகிய நண்பர் தன்மையை யாமென்னென்பேம்!

இவ்வாறு முகாமைக்காரர்கள் செய்தனவுஞ் செய்கின்றனவுமான குறும்புகள் பல. அவற்றையெல்லாம் யாமிங்குக் கூறவிரும்பவில்லை. அவ்வாறு செய்வோர் திருநாமங்களைப் பகிரங்கஞ்செய்யவும் விரும்பவில்லை. இவைகளைக் கல்வியுலகமறிந்து ஆவனசெய்தல் வேண்டுமென்பதே தமியேன் கருத்து. ஆயினும் அவையொழித்தற்காய் நாம செய்யக்கூடியன யாவையென்பதையுஞ் சிறிதுகூற விரும்புகின்றேம்.

உபாத்திமைத்தொழில்புரிவோர் தம்முட் கூட்டுறவுடையாராயும், எத்துணை இடுக்கண் வந்தவிடத்துங் கலங்காத உள்ளமுடையராயும், நேர்மையுடையராயும் இருத்தல் வேண்டும். தம் உத்தியோகம் போகநேரினும் மனேஜருக்குக் கப்பங் கட்டாமைவேண்டும். உபாத்தியாயர்கள் தம் இழிதொழிலால் தம்கீழ், கற்கும் பல நலன்களும் உடைய பல மாணவரைப் பழுதுறச்செய்கிருர். கல்வியின் நோக்கம், மனிதனை மனிதனுக வாழச்செய்வதே. அதாவது நேர்மையும் ஒழுக்கமும் உடையனுக வாழ்தலே. மேலதிகாரிகட்குக் கைக்கூலி கொடுத்தலே கல்வியின் பேருய்க் காணப்படுகிறது. அது இலதாதல்வேண்டும். பாடசாலை நலனுக்காய் உபாத்தியாயர் கொடுப்பதையும் மனேஜர் வாங்குவதையும் நாம் மிக மிகப் போற்றுகின்றேம். ஆயின் பாடசாலைக்கு எவ்வித பணியுமாற்ருது முகாமைக்காரர் ஏழை உபாத்தியாயர்களின் பணத்தினை வாங்கியுண்பதையே யாம் பெரிதும் வெறுக்கின்றேம். பாடசாலைமாத்திரமன்று, நமது சமயசம்பந்தமானபிற பொது ஸ்தாபனங்களும்ஒருசிலரின் வயிற்றுவளர்ப்புக்காக இருக்கின்றனவென்பதை மிக மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேம்.

இதனை ஒருவாற்ருன் குறைத்துக்கொள்ளவும், கல்வி நிலைநலம்பெறவும் உபாத்தியாயர்கள் அளவைக் குறைக்கும் சராசரித்தொகை குறைக்கப்படுதல் வேண்டும். சராசரித்தொகை குறைக்கப்படுவதால் வேலையில்லாதிருக்கும் உபாத்தியாயர்கள் வேலை பெறுவர். அதனுல் முகாமையாளர் உபாத்தியாயர்களிடத்திற் பணம் பெறுதற்குச் சிறிது தடையுளதாகும். அன்றியும் சிருஅரின் கல்விநிலை பெரிதும் அபிவிருத்தியடையும். ஆங்கில பாடசாலைகளில் 15 சராசரிக்கு ஒரு உபாத்தியாயரென அறியக்கிடக்கிறது. ஆயின் சுயமொழிப் பாடசாலைகளில் முன்பின் 29 சராசரிக்கொரு உபாத்தியாயரே நியமிக்கப்படுகிருர் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை நோக்குமாறு அன்பர்களைப் பெரிதும் வேண்டுகிறேம். ஒரு பாடசாலையில் 58 சராசரி இருக்கிறது. இன்னேர் பாடசாலையில் 92 சராசரி இருக்கிறது. இருபாடசாலைகளிலும் கற்பிக்கும் உபாத்தியாயர்கள் தொகை மூன்றேயாம். இருபாடசாலைகளுக்கும 34 சராசரித தொகை வித்தியாசமாயிருக்கிறது. இதற்கு யாது செய்வது? ஒரு பாடசாலையில் ஒரு உபாத்தியாயர் 15 அல்லது 20 வரவுச் சராசரியுள்ள

# விதியை வென்ற சுப்பிரமணியன் காதை.

(மனுப்புலியார்)

(முற்ருெடர்.)

தினந்தோறும் மாடும் நெல்லுஞ்
சேர்வதும் திருப்பி விற்று
அனம்பழம கொண்டு செய்யும்
அரும்விருந் ததுவு மாற்றி
மனம்மகிழ்ந திருந்தான் சுப்ர
மணியனும் அவனை விட்டுக்
கனங்குழற் றங்கை செய்தி
காணுவா னெண்ணி ஞனல். 39

தங்கையுன் ருேடிருந் தாள்
சங்கதி சாற்று கென்ன
மங்கையின் நடத்தை யண்ணு
மனத்தினை வருத்தும் யாமுே
அங்குறேன் கற்புக் கெட்டா
ளடுத்தவூர் வசிக்கின் ருளால்
நங்குலம் நசிக்க வந்தாள்
நாயினுங் கடைய ளென்ருன். 40

கேட்டது செவியிற் கேளா
தானெனக் கேட்டுப் பின்னர்க்
கூட்டிடும் விதியின் வீறு
குறைக்குவ னவட்கு மென்னும்
நாட்டமோ டகன்ருெ னென்றும்
நவின்றிலன் நதிக ளாடும்
வேட்கையின் நடந்தா னென்ன
விளங்கின னதிகன் பெற்ருேன். 41

மாலையில் மஞ்சள் பூசி
மயிரினைச் சிக்க றுத்து
வாசநீர் படிந்து பின்பு
வடிவுற உடுத்துக் கண்ணுக்
காலநேர் மையு மிட்டாள்
அருந்துவ தருந்திப் பூண்டாள்
காலனைக் கவலை தன்னைக்
காட்டுவன் வருவோர்க் கென்ரு. 42

அப்பொழு தழகு வாய்ந்த
அவ்வயில் விழியாள் வீட்டைச்
செப்பிடு விதியை வெல்லுஞ்
சீரிய னடைந்தான் கண்டாள்
இப்படி வருவா ரில்லை
யென்பது மனத்துட் கொண்டாள்
அப்பனீ யாரோ வென்ருள்
அறிந்திலள் அய்யன் தன்னை. 43

ஆலடி அமர்ந்த காலை
ஆற்றிய பணியும் பின்பு
சீலமாந் தவத்தை யுன்னிச்
சென்றதும் செப்பக் கேட்டு
மால்தரும் வாழ்க்கை செய்யும்
மங்கையும் மனத்துள் வாடி
வேல்விழி வெட்டு விட்டு
விருப்பின்றி நோக்கி ஞளால். 44

சுப்பிர மணிய னென்று
சொல்லுமெம் அண்ணு வோநீ
யெப்படி யறிந்தாய் வீடு
ஏதிவண் ணுற்ற தென்னத்
தப்பிதஞ் செய்த போதுந்
தப்பலா மவற்றி னீங்கின்
இப்படி யுன்னைக் காணற்
கேற்குமோ பிள்ளை என்ருன். 45

மதிதவழ் மலையின் சாரல்
மாதவஞ் செய்த நீயும்
விதிவழி விலக்க வெண்ணி
வேலைசெய் குதியோ எந்த
மதிவிதி யோடு நிற்கும்
மற்றினி வருவோர் கண்டால்
அதிபழி யாகு மன்றே
அகலுதி கடிதி னென்ருள். 46

பழிவரும் அச்சம் சாரும்
பாவமும் பகையும் ஆக்கும்
இழிதொழிற் கிடனுய் உன்றன்
இல்லினை வைத்தல் நன்றே
வழிவரு தொழிலு மல்ல
வருவதும் அற்பம் போலும்
கிளிமொழி மடந்தாய் என்ன
கேடிது கிளர்த்து கென்ன. 47

(தொடரும்)

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க, மென்று மிடும்பை தரும்.

# →பெண்கள் பகுதி.←

### பெண்கள் அறியவேண்டிய பத்துக் கற்பனைகள்

(1) நீ பிறந்தசாதியை மறவாதே.

(2) பரம்பரையாக நோயற்றவரின் வழித்தோன்றலாயின் விவாகஞ்செய்யாது தனியே இராதே.

(3) உடம்பினைச் சுத்தமாக வைத்திரு.

(4) மனதினையும் ஆத்மாவினையும் களங்கமின்றிப் பேணிக்கொள்.

(5) உன் சாதிக்கேற்ற கணவனை வரித்துக்கொள். வேறு சாதியினருடன் கலவாதிருப்பின் இயற்கையான அமைதியும் ஒற்றுமையும் நிலைபெறும்.

(6) நாயகனைத் தெரியுங்கால் அவர் பரம்பரையை விசாரணைசெய். நீ விரும்பின ஒருவரையன்றி அவர் முன்னேரையும் நீ விவாகஞ்செய்து கொள்ளுகின்றாய்.

(7) வெளித்தோற்றத்தின் அழகுக்குத் தேகாரோக்கியமும் இன்றியமையாதது.

(8) காதலின்நிமித்தம் விவாகஞ்செய். பணத்துக்காக விவாகஞ்செயயாதே. அது நிலையற்றது. நீடித்த சந்தோஷத்தை அது கொடுக்காது.

(9) பாவைகளைப் பெறவிரும்பாதே. சீவியத்தில் உனக்குத் துணையாகக்கூடிய நாயகனைத் தேடிக்கொள்.

(10) உனக்கு விருப்பனமான அளவு பிள்ளைகளைப் பெறக்கடவாய்.

* * * (Nazi)

### நான்கு புதல்வரை ஒரேமுறையில் பெற்ற தாய்

லண்டன்நகரில் விக்டோரியா ஹாம்ஸ்வேத் என்னும் மாது நான்கு புத்திரர்களை ஒரேமுறையில் பெற்றனள். வைத்தியசாலையில் இப்பிள்ளைகள் மிகப்பவுத்திரமாக வளர்க்கப்படுகின்றனர். இப் புதல்வர்களைப் பெற்ற தாய்க்கு வயது 34. அவள் நாயகனுக்கு வயது 36. அவன் வாரந்தோறும் 50 ரூபா சம்பாதிப்பவன். அப்பிள்ளை

---

வகுப்பில் வேலைகொள்கிறார். இன்னோர் பாடசாலையில் 60 வரை சராசரியுள்ள அதேவகுப்பை ஒரு உபாத்தியாயர் வேலைகொள்கிறார். இவ்விரு பாடசாலை வகுப்புகளினதும் வேலை ஒழுங்கு எவ்வாறிருக்குமென்பதை அறிஞர்களே உய்த்துணர்க. ஏறக்குறைய 20 மாணவருள்ள வகுப்பொன்றை நல்ல முறையில் ஒரு உபாத்தியாயர் கற்பித்தல்கூடுமென்பதை அறிஞர்களறியாதிருக்கமாட்டார்கள். ஏறக்குறைய 60 மாணவருடைய வகுப்பில் அரைவாசிக்கு மேற்பட்டோர் தேர்விற் சித்தி பெறுதும், வகுப்பிற் குறைவுடையாராயும் காணப்படுதலையாம் பலகாற் பார்த்திருக்கின்றேம். அது காரணமாய் அவ்வகுப்பில் வேலைகொண்ட உபாத்தியாயரைக் குறைகூற யாம் ஒருபோதும் முன்வரமாட்டோம். இக்குறை யார் பாலதாகுமென்பதைக் கல்வியறிஞர்கள் உய்த்துணர்வார்களாக 20 சராசரிக்கொரு உபாத்தியாயராக மாற்ற முறின், பாடசாலைகளில் மாணவர் ! தேர்ச்சிநிலை மிகமிக விருத்தியடையு மென்பது சொல்லவும் வேண்டுமோ? ஆனால்?....

..........................

இங்ஙனம்
ஆசிரிய மாணவன்
காரைநகர்

---

**ஈழமண்டல திருத்தல தேவார திருப்புகழ்**
(குறிப்புரையுடன்)
விலை சதம் 5
தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.

களின் மொத்தநிறை 13 இருத்தலாகும். ஆனால் சாதாரணமாகப் பிறக்கும் ஒரு பிள்ளையின்நிறை 6 இருத்தல். * * *

லண்டன்நகரில் 131 பெண்கள் சங்கப் பிரதிகள்கொண்ட மகாநாடொன்று சமீபத்தில் கூடப்பட்டது. அக்கூட்டத்தில் அனேகதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதலாவதாக நிறைவேற்றிய தீர்மானம் அபிசீனிய யுத்தத்தை யொட்டியது. அதிகமுன்னேற்றமடையாத சிறுசாதியினராகும் அபிசீனியர்க் கெதிராக பூரண ஆயுதபாணிகளாகும் இத்தாலியர் யுத்தத்திற்குச் சென்று அதிககொடுமைகளைச் செய்கின்றமை மிக உறுதியாகக் கண்டிக்கப்பட்டது. இந்தயுத்தத்தைத் தடுக்கச் சர்வதேச சங்கத்தினர் கையாளும் முறைகளும் இச்சங்கத்தாரால் மிகவும் பாராட்டப்பட்டன. வேலைத்தலங்களில் ஆண்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் பெண்களுக்கும் கொடுக்கப்படவேண்டுமென ஓர் தீர்மானம் கோண்டுவரப்பட்டது. * *

டென்மார்க்தேசத்தில் ஆண்களிலும்பார்க்க 78000 பெண்கள் கூடவசிப்பதாகக் கூறப்படுகின்றது. பொதுசனவாழ்வில் பெண்கள் அங்கே சம உரிமைகள்பெற்று வாழ்கின்றனராம். வேலைத்தலங்களில் வேலைசெய்யும் பெண்களும் பிள்ளைகளும் அரசினரால் நன்கு பாதுகாக்கப்படுகின்றனர். கைத்தொழில், வியாபாரம், கமத்தொழில் என்பனவற்றிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட்டு உழைக்கின்றனர். டென்மார்க்தேசத்தில் 25 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கே வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியற்சபைகளில் அநேக பெண்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். அவருட் சிலர் ஆண்களிலும் அதிகம் கீர்த்திவாய்ந்தவராம்.

டென்மார்க்தேசத்தில் பெண்கள் தேசபக்தி கடவுள்பத்தியில் மிகுந்தவராம். தெரிவுகாலங்களில் இத்தேசத்தில் கைலஞ்சம் கொடுப்பது வழக்கமில்லையாம். * *

தற்போது இந்தியாவில் ஒரு அமரிக்கப்பெண் வந்து சுற்றுப்பிரயாணஞ்செய்கின்றனர். அப்பெண்ணின் பெயர் மாக்கிறற் சாங்கர். பெண்கள் அவசியம்அறியவேண்டிய சில விஷயங்கள் அவரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு;—

பெண்கள் 18-ம் வயதுக்கும் 20-ம் வயதுக்குமிடையில் விவாகம் செய்வது மிக நல்லது. ஒரு பிள்ளையை மாத்திரம் பெற்றுற் போதாது. பெறும் பிள்ளைகளின வயதுக்கிடையில் மூன்றுவருட வித்தியாசமிருக்க வேண்டும். அதாவது பெண்கள் மூன்றுவருடத்துக்கொருமுறை பிள்ளைகளைப் பெறுவதே வேண்டற்பாலதென்பது. இளமையில் விவாகம்செய்யலாம். பிள்ளைப்பெறுங் காலத்தைச் சிறிது பின்போடுவது நல்லது. இவ்விஷயங்களைப்பற்றி இளம் குடும்பத்தினர் முன்னரே நனகு அறியவேண்டும். இளமையிற் கல்யாணஞ்செய்து பிள்ளைகளையும் மூன்றுவருடத்துக்கொருதரம் பெறப் பெண்கள் முடிவுசெய்யின் உலகில் விவாக நீக்க வழக்குகள் ஏற்படக் காரணமில்லை. இந்தியாவில் பிள்ளைகள் அதிகம் பெறுவதைத் தடுக்கப் பிரசங்கஞ்செய்ய நான் வரவில்லை. ஒரு குடும்பத்தினர் தமது தகுதிக்கும் வயதிக்கும் ஏற்கப் பிள்ளைகளை யுடையராவதை யாவர் தடுப்பார்? செயற்கைமுறையில் பிள்ளைப்பேற்றைத் தடுக்கும்முறை (Birth Control) குடிசனம் அதிகரி

---

ப்பதைத் தடுக்காவிடினும் தேசமக்களுக்கிடையில் ஆரோக்கியத்தை வளரச்செய்யும். * *

### பாலிய விவாகம்

இந்தியாவில் பாலிய விவாகம் நூற்றுக்கு இத்தனையென்பது பின்வரும் விபரத்தாலறியலாம். இது 1931-ம் வருடச் சனமதிப்புத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டது:—

| வயதுப் பிள்ளைகள் | விவாகம் நூற்றுக்குவிகிதம் |
|---|---|
| 0—1 | -8 |
| 1—2 | 1-2 |
| 2—3 | 2-0 |
| 3—4 | 4-2 |
| 4—5 | 6-6 |
| 5-10 | 19-3 |
| 10-15 | 38-1 |

அதாவது ஒருவயதுடைய நூறு பெண்களுக்கு ஒரு பெண்குழந்தைக்குக் கல்யாணம் நடக்கிறது. மற்றைய வயதுக் குழந்தைகட்கும் அப்படியே விவாகம் நடக்கிறதை மேற்படி குறிப்பே காட்டுகிறது.

* * *

### பாலிய கைம்பெண்கள்

இந்தியாவில் சிறுவயதில் தொடங்கிக் கைம்பெண்ணுயிருக்கும் சிறுபிள்ளைகள் அநேகர்.

| வயது | தொகை |
|---|---|
| 0—1 | 1515 |
| 1—2 | 1758 |
| 2—3 | 3485 |
| 3—4 | 9076 |
| 4—5 | 15019 |
| 5—10 | 105482 |
| 10—15 | 185339 |

இக்காலத்தில் பாலிய விவாகம் அதிகமாய் நடப்பதில்லை யாயினும் மேற்காட்டிய விபரங்கள் யாவர்க்கும் திகிலை வருவிக்கக்கூடும். இந்திய அரசினரும் மற்றையோரும் இவ்விஷயத்தையொட்டி வேண்டிய நடபடிக்கைகளைக் காலந் தாமதிக்காது கையாள்வது அவசியம். மேற்படி விபரங்கள் 1931-ம் வருடச் சனமதிப்பினின்று பெறப்பட்டன.

* * *

பிரசவங் காரணமாக ஏற்படும் நோயால் வருடா வருடம் இந்தியாவில் நூற்றுக்கு 24 பேர் இறக்கின்றனர். ஆனால் இங்கிலாந்தில் அப்படியாக இறப்போர் தொகை நூற்றுக்கு 4 பேரே. வருடா வருடம் 200000 பேர் இப்படியாக இறக்கின்றனர். பாலிய விவாகம் தாய்மாரையன்றிப் பிள்ளைகளையும் வருத்துகின்றது. இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு 1000 பிள்ளைகளிலும் 181 பிள்ளைகள் இறந்துவிடுகின்றனர். இந்தியாவில் சில குறிக்கப்பட்ட பாகங்கள் இருக்கின்றன. அங்கே 1000 பிள்ளைகள் பிறந்தால் 400 பிள்ளைகள் வரையில் இறந்துவிடுகின்றனர்.

## துணுக்குகள்.

இத்தாலிய சர்வாதிகாரியாகும் முசோலினியைக் கண்டு பேசுவதென்பது பெருங் கஷ்டமான காரியம். இதுவே அபிசீனிய யுத்தம் தடுக்க வியலாமற்போனதற்கும் காரணமெனலாம். இவருக்கு அனுப்பும் செய்திகள் சடுதியில் இவரையடையா. இத்தாலி ஒழிந்த மற்றைய நாட்டினர் முசோலினியைப்பற்றியும் இத்தாலியரைப் பற்றியும் கூறுவன எழுதுவன இவரைக் கிட்டிச் சேரா. தான் தொடக்கியவற்றைத் தானே உறுநண்பரின்றிச் செய்துநிற்பர்.

இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் ருஷியாவிலிருந்த ஜார் அரசர்களும் இப்படியே யிருந்ததுண்டு. மற்றையோரை நம்பாது தமது ஆற்றலிலேயே நம்பிக்கையுடையவராகின்றனர். ஜார் அரசர் தாம் ஒரு பத்திரிகையைப் பிரசுரிப்பித்து வாசித்துவந்தனர். தம்மை மற்றையோர் குறை

கூறுவதைப் பொறுக்கார். முசோலினியும் இத்தாலிய பத்திரிகைகளை அப்படியே செய்துள்ளார். o o

இலங்கைத் தேசாதிபதியின் மனைவியார் இந்த மாதம் 15ந் தேதி லண்டனிலிருந்து புறப்பட்டுள்ளார். விரைவில் கொழும்புவந்து சேருவாராம். தேசாதிபதியின் இளைய குமாரன் நோய்வாய்ப்பட்டிருந்தமையால் தான் லேடி ஸ்றப்பஸ் தமது நாயகருடன் கூடிவர வியலாதாயிற்று. இப்போது பூரண சுகமடைந்து மைந்தன் வித்தியாசாலைக்குப்போக ஆரம்பித்துவிட்டான். அவரின் வயது 14. தேசாதிபதியின் 25 வயதுள்ள மூத்தகுமாரன் பரிஸ்டர்வேலை பார்க்கிறாராம். இரண்டாவதுமகன் அடுத்த வருடம் ஹொங்கொங் வங்கியில் உத்தியோகம் பெறுவாராம். o o

கொழும்புக் கணித்தாகவுள்ள றற்மலானை என்னுமிடத்தில் அமைக்கப்படும் ஆகாயக்கப்பல் வந்திறங்கும் இடத்தினை இந்தியாவிலிருந்துவந்த மெஸ். S. A. கப்பே என்பவர் பார்வையிட்டனர். இவர் இன்னும் சில நாள் இலங்கையில் தங்கி மேற்படி இடத்தைப் பாவிபபதற்கு ஏற்றதாகச் செய்வார்.

தைமாதத்திற்குமுன் ஆகாயக்கப்பல் போக்குவரத்து ஆரமபிக்கப் படுமெனச் சொல்லப்படுகிறது. இதுவரையும் ஆகாயக்கப்பல் போக்குவரத்து சென்னைக்கும் கொழும்புக்கும் ஏற்படுமென யாவரும் எண்ணியிருந்தனர். சென்ற சில வாரங்களாக பம்பாய்க்கும் திருவனந்தபுரத்துக்குமிடையில் ஆகாயக்கப்பல் போக்குவரத்து நடக்கினறது. திருவனந்தபுரத்துக்கும்கொழும்புக்குமிடையில்தான் இனி ஆகாயக்கப்பல் போக்குவரவு ஆரம்பிக்கப்படுமென நிச்சயமாகக் கூறப்படுகிறது. o o

தென்னிலங்கையில் காட்டுச் சுரம் ஏற்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகின்றது. அங்கேயுள்ளவர்கட்கு அரசினர் கஷ்டநிவிர்த்தியின்பொருட்டு இன்னும் பணம் உதவிக்கொண்டேவருகின்றனர். கஷ்ட நிவர்த்திக்கு திரு. நீயூன்ஹாம் எனபவர் அபிப்பிராயப்படி மாதவீதம் 5 லட்சம் ரூபா தேவையாகும். அடுத்த பங்குனி மாசம்வரையும் செலவு ஏற்படுமெனவும் இதற்கென 30 லட்சம் ரூபா அரசாங்கசபையினர் ஒதுக்கிவைப்பது அவசியமெனவும் கூறியுள்ளார். இதுவரையும் அதாவது சென்ற தை மாசம் தொடக்கம் புரட்டாதி மாசம் முடிய கஷ்ட நிவர்த்திக்குச் செலவுசெய்யப்பட்டபணம், 45லட்சம்ரூபாவாகும். o

கொச்சி சமஸ்தானத்தில் வசித்துவந்த லோனப்பன் என்பவன் அங்கே ஒரு கொலைசெய்துவிட்டு இலங்கைக்குள் வந்து ஒழித்து வசித்துவந்தனன். கொச்சிப் பிரதேசப் பொலிசார் சென்ற பத்து வருடமாகத் தேடியும் அகப்பட்டிலன். இப்போது நீர்கொழும்பில் ஒரு மலையாளத்தானது தேநீர்க்கடையிலபிடிக்கப்பட்டான். o

கொழும்பு, காலி என்னுமிடங்களில் விசர்நாயால் கடிக்கப்பட்டு வைத்தியம்பெறுவோர் தொகை மிக அதிகமாகிவிட்டது. சென்றமாதம் 9 பேர் கொழும்பில் கடிக்கப்பட்டனர். காலியிலும் சிலர் கடியுண்டனராம். அலாரில் திரியும் நாய்கள் கொல்லப்படுகின்றன. சென்றமாதம் மாத்திரம் 250 நாய்கள் பிடிக்கப்பட்டனவாம். சென்ற 10 மாதங்களிலும் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட நாய்களின் தொகை 2000 ஆகும். o o

இலங்கையிலிருந்து 100 புத்தயாத்திரிகர்கள் வட இந்தியாவிலுள்ள புத்த ஆலயங்களைத் தரிசிக்கப் புறப்பட்டுள்ளார். இவர்களுள் 24 பேர் புத்தகுருமாராவர். இவர்கள் கயா, காசி முதலியவிடங்களைத் தெரிசித்துக்கொண்டு நேர்பாளஞ் செல்வர். அங்கிருந்து இலங்கைக்குத் திரும்புவாராம்.

---

# அரசாங்கசபைத் தேர்தல் நாடகவிழா வரப்போகிறது

(தேர்தல் நிருபர்)

இலங்கை அரசாங்க சபையின் ஆயுள்காலம் வரும் டிசம்பர் மாதம் ஏழாந் திகதியுடன் முடிவடைகிறது. அடுத்த பொதுத்தேர்தல் பிப்ரவரிக் கடைசிப்பகுதியில் நடைபெறுமென எண்ணப்படுகிறது. ஆகவே, அபேட்சகர்கள் தங்கள் ஆயத்தங்களுடன் புறப்படுவதற்குச் செய்யவேண்டிய முயற்சிகள் செய்ய வாரம்பித்துவிட்டனர்.

இலங்கையின் ஏனையபாகங்களிலும் தேர்தல் விஷயமாகப் பலத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. இத் தேர்தலில் முன்னரிலும் பார்க்கப் பெண் அபேக்ஷகர்கள் அதிகமாக முன்வரக்கூடுமென எதிர்பார்க்கலாம். அரசாங்கசபை குலைக்கப்படும்பொழுது அங்கத்தவர்களுக்கு—அவர்கள் செயற்கருஞ் செயல்களைச் செய்து முடித்த திறமைக்கு—விருந்து நடத்தப்படுமாம். அத்துடன் அவர்கள் பகுதி பகுதியாகப் பிரிந்து விளையாட்டுகளிலும் பங்குபற்றுவார்களாம்.

தங்கள் தங்கள் ஸ்தானங்களைக் கஷ்டமின்றித் திரும்பவும் பெற்றுக்கொள்ளக்கூடுமென்ற நிலைமையிலுள்ளவர்கள் இவ்விருந்தை மணவிருந்தாகவும், நம்பிக்கையற்றவர்கள் கடைகிவிருந்தாகவும் அருந்தவேண்டியிருக்கிறது.

டொனமூர் அரசியல் அமைப்பின் முதலாவது சகாப்தம் முடிவடைந்ததுடன் இலங்கையில் தோன்றியுள்ள அரசியல்கிளர்ச்சிகளும் வேரற்று விழுந்துவிட்டன. இனி வரப்போகுந் தேர்தலுக்கு முன்வரும் அபேக்ஷகர்கள் ஒருகொள்கையுமற்றவர்களாயிருந்தாலும் பணம் செலவிட்டால் வெற்றியடையலாமென்ற எண்ணம் பலப்பட்டிருக்கிறது. சர்வசன வாக்குரிமையின் பெறுபேறு இதுதான்போலும்.

வடமாகாணத்திலுள்ள ஐந்து ஸ்தானங்களைப்பற்றியும் பலவிதமாகக் கூறப்படுகின்றது. எவராவது முன்வருவதாக இன்னும் உறுதியாய்த் தெரிவிக்காதிருப்பினும் இப்பொழுது அங்கத்தர்களாயிருப்பவர்களே போட்டியின்றித் தெரியப்படுவாரென ஊகிப்பதற்கு இடமில்லை.

யாழ்ப்பாணம்—தென்மராட்சி

இப்பகுதிக்கு இப்பொழுது அங்கத்துவம் வகிப்பவர் திரு. அ. மகாதேவா. இவர் தேர்தலின்பொருட்டுச் சிலநாட்களாக யாழ்ப்பாணப்பகுதிகளில் நடமாடித்திரிகிறார். எனினும் இவர் அரசாங்கத்தில் ஓர் உயர்ந்த பதவியைப்பெற எண்ணி முயற்சி செய்வதாகவும், அதிற் சித்தியடையாவிட்டால் தேர்தலில் பங்குபற்றப் போவதாகவுங் கூறப்படுகிறது. உண்மை பொய் மட்டிடமுடியாதிருக்கிறது. குறித்தபகுதிக்குத் தாம அபேட்சகராக முன்வருவதென திரு. சந்திரசேகரா அவர்கள் முன்னமே அறிவித்தபடி தேர்தல் வேலையிலீடுபட்டிருப்பதாக அறிகின்றேம். முந்திய சட்டசபை உபதேர்தலில் திரு. சந்திரசேகராவுடன் போட்டியிட்ட திரு. இ. சிவகுருநாதர் அவர்களும் யாழ்ப்பாணப் பகுதிக்கு அபேட்சகராக முன்வருவாரென நம்பத்தகுந்த விடத்திலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

ஊர்காவற்றுறை (தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறைப் பகுதிக்குப் பிரதிநிதியாக இப்போதிருப்பவர் திரு. நெவின்ஸ் செல்வத்துரைப் பிள்ளை அவர்கள். கடந்த உபதேர்தலில் திரு. செல்வத்துரை அவர்களுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு. செல்லையா – அமரசிங்கம் அவர்களும், முந்திய சட்டசபையில் பல வருடங்கள் அங்கத்தவராயிருந்தவரும் சிறந்த அறிவாளியுமாகிய திரு. வை. துரைசுவாமி அவர்களும் பொதுத்தேர்தலில் அபேட்சகர்களாக முன்வருவார்களெனத் திடமாகக் கூறலாம். திரு. செல்வத்துரை அவர்கள் முன் தெரிவித்தபடி பொதுத் தேர்தலுக்கு முன்வரமாட்டாரெனவும் மற்றைய இருவருமே முன்வரக் கூடுமெனவும் நம்பத்தக்கதாயிருக்கிறது.

காங்கேசன்துறை (வலிவட-கிழக்கு)

காங்கேசன்துறைப்பிரிவின் அங்கத்தவராக இப்போ திருப்பவர் திரு சு. நடேசபிள்ளை. இப்பகுதிக்கு இன்னும் பலர் அபேட்சகர்களாக முன்வரவிருப்பதாகக் கூறப்படினும், அவர்கள் யார் யார் என்பது திடமாகத் தெரியவில்லை. பிரபல வழக்கறிஞர் திரு தெ. சி. இராசரத்தினம அவர்களும் ஓர் அபேட்சகராக முன்வரக் கூடுமென எண்ணத்தக்கதாயிருக்கிறது.

பரித்தித்துறை (வடமராட்சி)

பரித்தித்துறைப்பகுதியினங்கத்தவராயிப்போதிருப்பவர் திரு G. G. பொன்னம்பலமவர்கள். இவர் முந்திய உபதேர்தலில் தமக்குச் சார்பாகவிருந்த ஒருவருக்கு, தாம் பொதுத் தேர்தலுக்கு வாவில்லையென வாக்குப்பண்ணியதாகவும் பொதுத்தேர்தலில் மன்னார்ப்பகுதிக்கு அபேட்சகராக முன்வருவதாகவும் கூறப்படுகிறது. அப்படியானல் பரித்தித்துறைப்பகுதிக்கு திரு R. கந்தையா அவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவாரா? அல்லது வேறு காரணங்களைக்கொண்டு திரு. பொன்னம்பலம் அவர்களே முன்வருவாரா என்பது இன்னும் சமுசயமாகவேயிருக்கிறது. திரு. பொன்னம்பலம் அவர்கள் மீண்டும் அபேட்சகராக முன்வந்தால் அவருடன திரு. பாலசிங்கமவர்களும், நியாயவாதி திரு. கிருஷ்ணபிள்ளை அவர்களும் போட்டியாக முன்வருவதாகவும் அறிகின்றேம்.

மன்னார்—முல்லைத்தீவு.

மன்னார் முல்லைத்தீவுப் பகுதியினங்கத்தவரான திரு. ஆனந்த மயர்கள் வயோதிபராயிருப்பதாலும் அவர் அரசாங்கசபையில் செய்யக்கூடியவற்றையெல்லாம் பாக்கியின்றிச் செய்துவிட்டபடியாலும் இனி அங்கத்துவம் வகிக்க விரும்பவில்லையெனத் தெரிகிறது. குறித்த பகுதிக்கே திரு. பொன்னம்பலமவர்கள் அபேட்சகராக முன்வருவாரென எண்ணப்பட்டது. ஆனல் இவருடன் உபதேர்தலில் பரித்தித்துறைப் பகுதிக்குப் போட்டிசெய்து தோல்வியடைந்த திரு R ஸ்ரீபத்மநாதன் அவர்களும் மன்னார்ப் பகுதியையே விரும்பியிருப்பதாக அறிகுறிகள் தென்படுகின்றன.

சரித்திரப்பகுதி [பதிப்புரிமை ஆசிரியர்க்கே உரியது]

## இலங்கைச் சரித்திரக் கதைகள்

[சுன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் எழுதியது]

### 6 "கேலியால்விளைந்த கேடு"

வாலகம்பாகு இறக்க இலங்கையின் அரசியலும் சீர்குலைந்தது. அரசர்களும் ஒருவரையொருவர் கொன்று கலகம் விளைத்தவண்ணமாகவேயிருந்தார்கள்.

கி. பி. 52-ம் ஆண்டுவரையில் யசலாளகதிசன் என்னுமோர் அரசன் இலங்கையைப் பரிபாலித்து வந்தான். இவனும் நீதியுள்ள ஒரு மன்னனன்று. தன் முன்னோனைக் கொன்றே இவன் அரசனானன்.

அரசியலில் இம்மியத்தனையும் இவனுக்குச் சிந்தனையில்லை. மற்றவர்களுடன் கேலிசெய்வதும் விளையாட்டாகக் காலங்கழிப்பதும் இவனுக்குப் பேருவகையாயிருந்தது. இதுவே இவனுடைய மரணத்துக்கும் ஏதுவாயிற்று.

யசலாளகதிசனுக்கு வாயில்காப்போனுகச் சுப்பன் என்னுமொருவன் இருந்தான். அவனும் அரசனும் உருவத்தில் ஒத்தவர்கள். நன்றாய்ப் பழகியவர்கள்கூட இருவரையும் பிரித்தறிதல் இயலாதிருந்தது.

அரசன் விளையாட்டுக்காகத் தன் உடைகளைச் சுப்பனை யணியச்செய்வான். பின் சிங்காசனத்தில் அவனையிருத்தித் தான் வாயில்காப்போனுடையணிந்து வாயிலைக் காவல்செய்வான். மந்திரிமாரும் பிரதானிகளும் சுப்பனை அரசனென நினைத்து வணங்குவார்கள். பின் அரசனும் சுப்பனும் தம்முடைகளைப்பெற்றுத் தத்தம் இடத்திலிருப்பார்கள். இப்படிப் பன்முறைகளிலும் அவர்கள் செய்துவருவது வழக்கம்.

இப்படியாக நடைபெற்றுவரும் நாளில் சுப்பன் அரசனைக்கொன்று தானே அரசனுகவேண்டுமென விரும்பினன்.

ஒருதினம் அரசன் வாயில்காப்போனுகவும், சுப்பன் அரசனுகவும் இருக்கும்போது மந்திரிமார் சுப்பனை அரசனென நினைத்து வணக்கஞ்செய்தார்கள். வாயில்காத்துநின்ற அரசன் அவர்களுடைய அறியாமையைக்குறித்துக் குலுங்கச் சிரித்தான். சுப்பன் இதைத் தருணமாகக்கொண்டான். மந்திரிமாரை நிந்தித்தான் என அரசன்மீது குற்றஞ்சாட்டி அவனைக் கொல்லும்படி கட்டளையிட்டான். அரசன் தானே உண்மையான அரசனென்றும் அரசனுகச் சிங்காசனத்திருந்தவன் வாயில் காப்போனான சுப்பனென்றும் நிரூபிக்கத் தன்னாலானமட்டும் பிரயாசப்பட்டான். ஆனல் மற்றவர்கள் அதை நம்பவில்லை. ஆதலின் அரசனுங் கொலைஞனின் வாளுக் கிரையானன்.

பிள்ளைகளே, கேலியினுல் விளைந்த கெடுதியை அறிந்தீர்கள். ஆதலின் நீவிர் ஒருபோதும் கேலிசெய்து கேடடையாதீர்கள்.

அரசன் கொல்லப்படச் சுப்பன் அரசனுகி ஆறுவருஷகாலமாக அரசாண்டான்.

ஆனல் இவனும் வசபன் என்னுமோர் அரசனுற் கொல்லப்பட்டான்.

# யாழ்ப்பாணத்தில் கடுங்காற்றும் விடாமழையும்

## மரங்கள், வீடுகள் விழுந்தன

### பனை வீட்டில் விழுந்ததால் உடன் மரணம்

யாழ்ப்பாணம் 15.

யாழ்ப்பாணத்திலேயுள்ள அனேக இடங்களில் பலமான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கே பலமான காற்றுடன்கூடிய மழை இரண்டு நாட்களாக இடைவிடாது பொழிந்தது. காற்று மிகவும் மும்முரமாக வீசியதால் அனேக மரங்களும், வாழைகளும், வீடுகளும் வீழ்ந்துவிட்டன. பலவிடங்களில் மாடு ஆடுகள் மாண்டன. பறைச்சேரிவெளிக்கருகேயுள்ள கல்ரோட்டின்மீதுபாயத்தொடங்கியது. தெருக்கரை யோரங்களிலுள்ள அனேகமரங்கள் மின்சார வெளிச்சக்கம்பிகள்மீது சாய்ந்தமையால் அக்கம்பிகள் அறுந்தன. அக்காரணத்தினுல்தானே அல்லது வேறெக்காரணத்தினுலோ சென்ற இரவு 9-30 மணிக்குமேல் பிரதானமான தெருவீதிகளிலுள்ள எலெக்டிரிக் விளக்குகள் ஏற்றப்படவில்லை. அதனுல் பட்டணம் முழுமையும் இருள்மயமாகவே இருந்தது. சென்ற இரவு 7 மணிக்குமேல் சனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை. பொதுவாக உற்று நோககினுல் இங்குள்ளவர்கள் இம்மழையுடன்கூடிய காற்றினுல் இடர்ப்பட்டிருக்கின்றனரென்றே கூறவேண்டும். ஒவ்வோர் வளவிலும் இருமரங்களாவது விழாமலிருக்கவில்லை.

சென்ற இருநாட்களாக ஊர்காவற்றுறைக்குப்போகும் தபாற் போக்குவரத்துந் தடைப்பட்டிருக்கிறது. இங்கிருந்துபோகுந் தபால்கள் முதலியவைகள் காரைதீவில்கிடக்கின்றன.

நேற்றைய இரவு ஆனைப்பந்தியடிச் சந்தியிலிருந்து கைலாசபிள்ளையார் கோவிலடிக்குப்போகுந் தெருவில் றிஜிஸ்ரார் இளையப்பா அவர்களின் வீட்டிற்கணித்தாக இருப்பவரும், சுருட்டுவேலை—கற்களுக்கு வெடிவைக்கும் வேலை முதலிய பல வேலைகள் செய்பவருமாகிய சிவனடியான் என்பவர் தனது வீட்டிலுள்ள தலைவாசலில் வாங்கின்மீது படுத்துறங்கினர். அவரது வயது ஏறக்குறைய 60 இருக்குமெனலாம். முற்றத்திலே நின்ற பனைமரமொன்று அத் தலைவாசலின்மேல் விழ அதனிலுள்ள வளையும் அதற்குமேல் மரமுமாக, படுத்துறங்கிய சிவனடியான்மீது வீழ்ந்தது. உடனேயே அவர்மரித்துவிட்டார். அந்நேரத்தில் ஒருவரேனும் உதவிசெய்ய வசதியில்லாது போய்விட்டதாம். ந. நி.

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்.

# இத்தாலி-அபிசீனிய மகாயுத்தம்

## மக்கலேநகர் இத்தாலியரால் பிடிக்கப்பட்டது

## இரு போர்முனைகளிலும் இத்தாலியர்க்கு வெற்றி

### கோரஹாய்நகர் சத்துராதிகள் வசமாயிற்று

### ஆகாயக் கப்பல்களின் பேருதவி

### ராஸ் குக்ஸா மக்கலேநகர்த்தேசாதிபதியாக நியமிக்கப்பட்டார்

### கோருஹாய்நகரில் அநேக யுத்த தளபாடங்கள் அகப்பட்டன

### இத்தாலிய பட்டாளம் குலைந்து ஓடுகின்றது

நவம்பர் 13.

இத்தாலியர் தெற்குப் போர்முனையிலுள்ள டக்கபூர், ஸஸபஞ ஆகிய இருநகரும் கைப்பற்றிவிட்டாரென வந்த புதினங்கள் யாவும் பொய்யாகும். இந்நகரை இத்தாலியர் மலையேறி என்னும் கவசந்தரித்த மோட்டார்மூலமாக எட்டத்திநின்று தாக்குகிறார்களென்பது உண்மையாகும். ஆனால் அபிசீனியர் ஒழித்திருந்து சடுதியில் இராக்காலங்களில் அவரைத் தாக்கித் துரத்திவிடுகின்றனர்.

வடக்குப்போர்முனையில் டானக்கில் வனாந்திரத்துக்கூடாகப் படையெடுத்துச் சென்ற துருப்புகள் எங்கேபோயினவென்று இன்னும் சொல்ல வியலாதாகின்றது. வனாந்தரம் விழுங்கிவிட்டதாவெனவும் கேள்வி ஏற்படுகிறது. இவர்களை டானக்கில் வாசிகளே அழித்துத் தொலைத்துவிட்டனரெனவும் கூறப்படுகிறது.

அபிசீனிய சக்கரவர்த்தி வடபோர்முனைக் கணித்தாகவுள்ள டெஸி என்னுமிடத்துக்காவது அல்லது தெற்குப்போர்முனையிலுள்ள ஹாரர் என்னும் நகருக்காவது எப்போது போவாரெனச் சொல்லமுடியாதிருக்கின்றது. மேலும் வடக்கே மேற்குக் கரையில் மாராவிக்ஞ என்னும் சேனைத் தலைவர் அதிகம் முன்னேறிவந்து தக்கஜி என்னும் நதியோரத்தை யடைந்துள்ளார். அந்நதியில் முதலைகள் அதிகமிருப்பதால் தாண்டுவது கஷ்டம். இத்தாலியர் திம்பியன்மாஸிப் என்னும் நகரை மூன்றுபக்கத்தாலும் சூழ்ந்துகொண்டனர். அபிசீனியர் ஓட்டம்பிடிப்பதற்கு ஒருபக்கமேயுளது. இவ்விடத்திலுள்ள அபிசீனிய சேனைகளின் தலைவர் ராஸ்சேயம் அவர்களே.

டானக்கில் பிரதேசத்தில் இத்தாலியரை அபிசீனியர் வேகமாய்த்தாக்கினாராம். உள்ளே நுழையவிட்டுப் பின் இத்தாலியரை அபிசீனியர் தாக்க எண்ணுகின்றனர். இனிமேல் நடக்கவிருக்கும் யுத்தங்களே முடிவான வெற்றிகளைக் கொண்டுவரக்கூடியனவென்று யுத்தமுனைகளில்நிற்கும் உத்தியோக நிருபர்கள் கூறுகின்றனர். அபிசீனியர் வடக்குப்போர்முனையில் மூன்றிடங்களில் போதிய பாதுகாப்புகளை ஏற்படுத்துகின்றனர். அபிசீனிய துருப்புகள் இவ்விடங்களில் அதிகமாக வந்து குவிகின்றன. இத்தாலிய துருப்புக்கள் வரத்தும் சிறிது தாமதிக்கப்படலாயின.

இத்தாலியர் தாங்கள் கைப்பற்றிய விடங்களில் நாகரீகமுறையில் அரசு செய்வதாகக் கூறுகின்றனர். அடிமைகளை விடுதலைசெய்ததாகவுங் கூறுகின்றனர். ஆனால் தாம் பிடித்த நாட்டில் தங்கட்குக்கீழ்ப்படியாதிருப்போரைச் சத்துராதிகளாகக் கவனித்துப் பெரும் தண்டனை விதிப்பதாகவும் பயமுறுத்துகின்றனர். குண்டுக்கு இரையாக்குவதா? அல்லது இத்தாலியர்க்குத் தலைவணங்குவீர்களா எனக் கேட்கின்றனர்.

அபிசீனியாவுக்கு யுத்த ஆயுதங்கள் அதிகமாக இப்போது கொணர்ந்து இறக்கப்படுகின்றன. சமீபத்தில் 5000 துப்பாக்கிகளும் 5 லட்சம் நச்சுப்புகை தாக்காத முகத்திலணியும் முகமூடியும் வந்து சேர்ந்தனவாம்.

தெற்குப்போர்முனையில் அபிசீனியர் அடைந்த வெற்றி உண்மையென மேலும் பின்வந்தசெய்தியால் உறுதிப்படுத்தப்படுகின்றது. இத்தாலியரில் 12 பேர் கொலைசெய்யப்பட்டனர். இத்தாலியர்பக்கத்தினின்று 1000 சுதேசத் துருப்புகள் கைதியாயினர். மலையேறும் கவசந்தரித்த ஆறு மலையேறி மோட்டார்களையும் அபிசீனியர் கைப்பற்றிக்கொண்டனராம். தென்மேற்கேயுள்ள யுத்தமுனையில் அபிசீனியசேனையின் தலைமையை வகிக்கும் ருஸ்டெஸ்ரு புதியகெனியா எல்லையையடுத்துப்புதியஓர் மார்க்கமாகச் செல்கின்றார். இத்தாலியரின் போக்குவரத்தைத் தடுக்கப்போகின்றாராம். மேலும்தெற்குப்போர்முனையில் ஜிஜில்காவுக் கணித்தாகவுள்ள அகர் என்னுங் கிராமத்தின்மீது இத்தாலிய விமானங்கள் குண்டுகள் போட்டன.

இத்தாலியர் ஈற்றில் தண்ணீர்ப்பஞ்சத்தால் யுத்தஞ்செய்யவியலாதவராய் தோல்வியடைவரென எகிப்துதேச சேனைத்தலைவராகும் வாஹிதபாஷா சொல்கின்றனர். இத்தாலியர் தம் 5 லட்சம் போர்வீரர்களையும் பறிகொடுத்தாயினும் ஒருபோது அபிசீனிய தலைநகராகும் அடிஸ் அபேபாவினை அடையக்கூடும். இத்தாலியர் தண்ணீரைப் போகுமிடங்களெல்லாம் கொண்டு செல்வது எப்படிக்கூடும்? நெடுங்காலமாக மிக ஊக்கத்துடன் எவ்வளவு ஆயத்தத்தை இத்தாலியர் செய்தாராயினும் தண்ணீர்ப் பஞ்சமே ஈற்றில்தோல்வியை வருவிக்குமாம். மேலும் இத்தாலியர் வெற்றியைப் பெறுதற்குவேண்டிய ஆட்களையும் பணத்தையும் வைத்திருக்கவில்லை.

நவம்பர் 12.

மக்கலே பிரதேசத்திற்கு இத்தாலியர் ராஸ்குக்சா (அபிசீனிய அரசரின் மருகர்) என்பவரைத் தேசாதிபதியாக நியமித்திருக்கின்றனர். மக்கலே பிரதேசத்திலுள்ள அடிமைகள் விடுதலையாக்கப்பட்டனர். அவர்கள் தமது பழைய எசமானரின்கீழ் வேலைசெய்ய விரும்பாவிடின் இத்தாலியர் அவர்களைத் தெரு அமைப்பதில் வேலைசெய்யும்படி கேட்கின்றனர். அதற்குப் பணம் சம்பளமாகக் கொடுக்கப்படும். மக்கலே பிரதேசத்தவர் இத்தாலியர்க்குத் தாம் கீழ்ப்படிந்து நடப்பதாகச்சத்தியஞ்செய்து கொடுத்தனர். ராஸ்குக்சா தமது தாயாரையும் பெண்சாதியையும் கண்டுகொண்டாராம்.

தெற்குப் போர்முனையில் கோருஹே இத்தாலியரால் கைப்பற்றப்பட்டதிலிருந்து அநேக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவாம். ஹாரர்ஜிஜிக்காவுக் கிடையிலுள்ள போர்முனைகளில யுத்தஞ் செய்யாது அபிசீனியர் ஓட்டம் பிடிக்கின்றனராம்.

வடக்குப் போர்முனைக்கும் தெற்குப் போர்முனைக்குமிடையில் அநேக வித்தியாசங்கள் உள. வடக்கே நாடுகளைப் பிடித்துத் தெருக்களமைத்தே பின் முன்னேறவேண்டும். இது சிறிது சிறிதாகவே செல்லவேண்டியதாகின்றது. தெற்குமுனையிலோ தெருக்களிருப்பதால் துருப்புகள் மோட்டாரில் இவர்ந்து ஆகாயக் கப்பல்களாலும் மலையேறி மோட்டாராலும் காவல்புரியப்பட்டு முன்னேறவேண்டியிருக்கிறது. போக்குவரவு வசதிகள் யுத்தம் நடாத்துதற்குப் பெருந்துணையாகின்றது.

முன்னர் அபிசீனியர் இத்தாலியரை வெற்றிகொண்டது டக்கபூர் நகருக் கருகாமையில்தான.

நவம்பர் 11

இடமாகநின்று எப்போது அபிசீனியர் யுத்தஞ்செய்யப்போகின்றனரென இத்தாலியர் கேட்கின்றனர். வடக்குப்போர்முனையிலும் தெற்குப்போர்முனையிலும் இத்தாலியர் கெதியாக முன்னேறுகின்றனராம். ஆனால் அபிசீனியர் இத்தாலியரிலும் பார்க்கக் கெதியாகப் பின்வாங்குகின்றாராம். அபிசீனியர் மிகத் தந்தரநோக்குடனேயே பின்வாங்குகின்றனரெனச் சொல்லப்படுகின்றது. உள்நாட்டிற்குள் போக்குவரவு வசதிகள் இல்லாத இடங்களுக்கு இத்தாலியரை இழுத்துச்சென்றபின் அபிசீனியர் இவர்கட்குப் பெருங்கெடுதிவிளைக்க எண்ணுகிறார்கள்போலும். வடக்குப் போர்முனையில் ஒருலட்சம்பேரும் தெற்குப்போர்முனையில் ஒருலட்சம்பேரும் இத்தாலியரை எதிர்க்க ஆயத்தமாகவிருக்கின்றாராம்.

கோரஹாய் நகரை இத்தாலியர் பிடித்தபோது இத்தாலியர் விரைவாக ஒடி ஹாரர் நகரை யடைந்தனராம். கோரஹாய் என்னும் நகருக்கு 60மைல் தூரத்துக்கப்பால் இத்தாலியர் முன்னேறியுள்ளார். அபிசீனியர் அநேகர் கைதிகளாக்கப்பட்டனர். யுத்த தளபாடங்களும் பெருந்தொகையாகப் பிடிக்கப்பட்டன. இத்தாலியர் அபிசீனிய சேனைத்தலைவராகும் ராஸ்சேயம் என்பவரைப் பிடிப்பாரென்பது சந்தேகத்துக் கிடமாகின்றது. அவர் 20 000 துருப்புகளுடன் றெம்பியன் என்னும் பகுதியில் நிற்பதாகக் கூறப்படுகிறது.

தெற்குப்போர்முனையில் இத்தாலியர் நெருங்கி முன்னேறுவது ஹாரர்நகரைக் கைப்பற்றுவதற்காகவே. ஹாரர் நகரைப் பிடித்து அதன் வழியாகச் செல்லும் தெருப்பாதையையும் கைப்பற்றினால் அபிசீனியர் அன்னியரிடமிருந்து ஒன்றும் பெறாமல் செய்துவிடலாமென்று இத்தாலியர் கருதுகின்றனர். ஹாரூர் நகரை இத்தாலியர் தாக்க ஆரம்பித்தால் சில அபிசீனிய பட்டாளங்கள் விரைவாக வடக்குப் போர்முனையிலிருந்து கொண்டுவரப்படக் கூடுமெனவும எதிர்பார்க்கப்படுகிறது.

அபிசீனியர் கோரஹாய் நகரை இழந்தமையால் அவர்கள் பலன் மிகவுங் குன்றிவிட்டதாம். அந்நகரில் காவல்புரிந்த சேனைகள் தோற்கடிக்கப்பட்டது பெருந்துயரை அபிசீனியர்க்கு உண்டுபண்ணிவிட்டதாகும். இந்நகரை ஆகாயக் கப்பலிலிருந்து குண்டுபோட்டே இத்தாலியர் பிடித்தனர். இடைவிடாது இருநாட்களாகக் குண்டுகள் போட்டமையாற்றான் அபிசீனியர் ஓட்டம்பிடித்தனர்.

வடக்குப் போர்முனையில் பிடித்த பட்டணங்கட்கு புகைரதப்பாதை திறக்க இத்தாலியர் முயற்சி செய்கின்றனர். புதிதாகப் பிடிக்கப்பட்ட மக்கலே நகருக்குள் இத்தாலிய சேனைத்தலைவராகும் டீபோனே நுழைந்தபோது ராஸ்குக்சா வெள்ளைக்குதிரையிலிவர்ந்து நின்று மிகமரியாதையுடன் வரவேற்றாராம்.

இருபதாம் நூற்றாண்டு முதற்பகுதியில் பிரிட்டிஷாருடன் போர்செய்த பைத்தியம் பிடித்த முல்லா என்பவரின் குமாரன் தெற்குப்போர்முனையில் அபிசீனியரின் பக்கத்திநின்று பட்டத்தலைவராகப் போர் செய்துவந்தனர். இப்போது இவர் இத்தாலியரிடம் சரண்புகுந்துவிட்டனரெனச் சொல்லப்படுகின்றது.

நவம்பர் 10

அபிஸீனியர் தெற்குப் போர் முனையிலும் வடக்குப் போர் முனையிலும் பின்வாங்குகின்றனர். வடக்கே இத்தாலியர் மக்கலே நகரைக் கைப்பற்றி மேலும்15 மைல் தூரம் முன்னேறி அன்ருலோ என்னும் நகரையும் கைப்பற்றினர்.

தெற்குப் போர்முனையில் கோருஹாய் நகரைக் கைப்பற்றி டக்கபூர் நகரையும் பிடித்துவிட்டனர். இவ்வெற்றிகளை இத்தாலியர் பெறுவதற்கு பெரிதும் துணையாயிருந்தன மலையேறியாகும் கவசமிட்ட மோட்டாரும், ஆகாயக் கப்பல்களுமே. மக்கலே நகரில் மிகச்சிறந்த ஓர் ஆகாயக்கப்பல்நிலையத்தை இத்தாலியர் அமைத்துவிட்டனர். ஆகாயக்கப்பல் தங்குமிடமாக இதை இனிப் பாவிப்பார்கள்.

தெற்கே ஒக்டன் மாகாணத்தில் மழை அதிகமாகப் பெய்கின்றது. தெற்குப் போர்முனையில் இரு சேனைத்தலைவர்க்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுளதாம். இருவரும் தமக்கே முதலிடம்வேண்டுமென்று வாதாடுகின்றாராம். ஆகையாற்றான் அபிசீனியர் தோல்வியடைகின்றனர்.

வடக்கேயுள்ள டிஸேநகருக்கு 2000 கழுதைகளில் குண்டுகள் முதலிய யுத்த உபகரணங்கள் ஏற்றி அனுப்பப்பட்டிருக்கின்றன. தெற்குப்போர்முனையிலுள்ள கோருஹாய் நகர்இத்தாலியரால் பிடிக்கப்பட்டபோது அபிசீனியர் பெருந்தொகையான பீரங்கிகளையும், சாமான் ஏற்றும் மோட்டார் லொறிகளையும், உணவுப் பொருட்களையும் விட்டுவிட்டு அபிசீனியர் ஓடினாராம். கோருஹாய் நகரை யடுத்துள்ள பாவான்நதி பிரவாகமாயிருந்தும், இத்தாலியர் அதைத் தாண்டிச்சென்று அபிசீனியரைத் துரத்திச்சென்றனர்.

வடக்கே மக்கலே நகரம் பிடிக்கப்பட்டு இரண்டுமணித்தியாலத்துள் ஓர் இத்தாலிய விமானம் அங்கு வந்திறங்கியதாம்.

தெற்கே அபிசீனியரைத் தோல்வியடையச்செய்தது விமானங்களாகும். டக்கபூர் நகர்மீது 1000 குண்டுகளை இத்தாலியவிமானங்கள் போட்டனவாம். டக்கபூர் நகரைப் பாதுகாத்த சேனைத்தலைவரும் குண்டுபட்டிறந்தனரெனக் கூறப்படுகிறது.

நவம்பர் 9.

இத்தாலிய விமானம் முதன்முறையாக அடிஸ் அபேபா நகர் மீது மிக உயரத்தில் பறந்ததாகக் கூறப்படுகிறது.

நவம்பர் 8.

மக்கலே நகரை இத்தாலியர் கைப்பற்றிவிட்டாரென்பதை அடிஸ் அபேபாவிலுள்ளோர் நம்பவில்லை எனினும் இது உண்மையே.

அபிசீனியரை விட்டுப்பிரிந்து சத்துராதியுடன் சேர்ந்த ராஸ்குக்ஸா மீது அபிசீனியர்க்குள்ள ஆத்திரத்துக்கு அளவின்று. மக்கலே நகரைவிட்டு அவர்கள் வெளியேறமுன் ராஸ்குக்சாவின் வீட்டினையும், அவர்பொருட்களையும் பரிகாசமாக்கினர். வீடுகளைத் தீக்கிரையாக்கினராம். இத்தாலியர் புகுந்தவுடன் ராஸ்குக்ஸாவும் அவரது பரிவாரங்களும் நகருள் புகுந்து தங்கள் இல்லங்களைப் பழுதுபார்த்துத் திருத்தியமைத்தனராம். பழைய தொழில்களையும் ஆரம்பித்தனராம்.

இத்தாலியர்மக்கலேயைபிடித்தவுடன் மறுபடிதாக்க ஆரம்பிக்கவில்லை. தாம் மெதுவாகச் சென்று திடமாகப் பிடிப்பதே தமது கொள்கையென இத்தாலியர் கூறுகின்றனர்.

இத்தாலியிலுள்ள கேப்பின்ஸ் நகரிலிருந்து 50 உத்தியோகத்தரும் 1600 போர்வீரரும் அபிசீனியாவை நோக்கிக் கப்பலில் புறப்பட்டனர்.

இத்தாலிய துருப்புக்கள் வெள்ளிக்கிழமை (8-11-35) காலை ஒன்பது மணியளவில் மக்கலே நகருக்குள் நுழைந்தன. உடனே தேசாதிபதியின் அரண்மனையின் கூரையில் இத்தாலிய கொடி நாட்டப்பட்டது. அதை எதிர்த்தார் எவருங்கிடையாது. இத்தாலிய அரசரின் பேரால் ராஸ்குக்ஸா என்பவர் மக்கலே பிரதேசத்தின தேசாதிபதியாக வைக்கப்பட்டபோது மக்கலே நகர்மீது 20 ஆகாயக்கப்பல்கள வட்டமிட்டுப் பறந்தனவாம். வெள்ளைக்கொடிகளை மலைகளின் உச்சியில் பறக்கவிட்டு அநேக அபிசீனியர் சமாதானத்துடன இத்தாலியரை வரவேற்றனர். மக்கலேநகரை நோக்கிச் செல்லும்போது அந்நகர் வாசிகள் கோழிகள், ஆடுகள், முட்டைகள் கொண்டுவந்து சேனைத்தலைவர்க்கு உபகாரமாகக் கொடுத்தனர். குருமார் அங்கிகளையணிந்து வெளியே சிலுவைகளுடன்வந்து யாவரையும் வரவேற்றனர். ராஸ்குக்சாவும் அவர் பரிவாரமும் அதன்பின் வந்தனர். அவர்கள் யாவரும் மிக மரியாதையாக வரவேற்கப்பட்டனர். இத்தாலியரடைந்த வெற்றியைக் கொண்டாடும் நிமித்தமாக மலைச்சிகரங்களிம் தீபங்கள் சுவாலையாக எரிந்தன.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டொருமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவ௵ கார்த்திகை௴ உ௨

# இலங்கை அரசியலமைப்பில் திருத்தங்கள்

டொனமூர்த்திட்டம் சென்ற நாலரை வருடங்களாக அனுட்டானத்திலிருந்து வருகின்றது. அதன் குறைநிறைகள் யாவையென பொதுவாக அரசியல் வாதிகள் யாவரும் அறிவர் விசேஷமாகப் போற்றக்கூடிய அம்சங்கள் இத்திட்டத்தில் சிலவேயுளவென்பதும் தேசநலத்துக்கும் விருத்திக்கும் தடையான அம்சங்கள் பலவுளவென்பதும் முன்னரே நன்கறியப்பட்டது. இவ்வளவு குறைகளிருந்தும் கூடிய தொகையினராகும் சிங்களர் இத்திட்டத்தை ஏற்று நடத்த முற்பட்டனர். அனுட்டானத்தில் அதை நடத்துங்கால், பற்பலகுறைகள்தோன்றியும், அவைகளை அதிகம் பொருட்படுத்தாது போற்றிக் கட்டிவந்தனர். இத்திட்டத்தில் சிலபல திருத்தங்கள் ஏற்படுத்தும் நோக்கமாக, இப்போது புத்தளப்பகுதியங்கத்தவராகும் மெஸ். கோறியா அவர்கள் ஒரு திட்டத்தை அரசாங்க சபையில் பிரேரித்துள்ளார். அது விஷயமாக சென்றவாரம் விவாதம் மிக உக்கிரமாக நடந்தது.

இலங்கையின் முன்னேற்றமொன்றையே இலக்காகக்கொண்டு தேசத்தொண்டுஆற்றுவோரை இப்போது காண்பது அரிதாகும். இச்சமயத்தில் ஏற்படுஞ் சங்கடங்களோ பல. சிங்களப் பிரதிநிதிகளோ தாம் பெருங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கையில், தேசிய நோக்குடையராக இருக்கவேண்டியதற்குப் பதிலாக வகுப்புவாதிகளாய்த் தங்கள் வகுப்பின நலன்மையையே நாடியவராகக்காணப்படுவதுபெருந் துக்கத்தை வருவிக்கின்றது கோறியாவின் திட்டத்திலுள்ள அம்சங்களை ஆட்சேபித்து யாழ்ப்பாணப் பிரதிநிதியாகும் திரு அ. மகாதேவா அவர்கள்பேசுகையில், சிங்களப் பிரதிநிதிகள் தமிழர்க்கு மாறாகச் செய்யும் அக்கிரமங்களை எடுத்துக்காட்டினர். இவைகளுக்குத்தகுந்த சமாதானங் கூறவேண்டியவர் சிங்களத் தலைவர்களே. மேற்படி விவாதத்தைநோக்கின், இலங்கை வாசிகள் இன்னும் அதிக சுதந்தரத்தைப்பெற அருகரல்லரெனவே எவருங் கூறுவர். பல்வேறு வகுப்பினர்க்கிடையில்விவாதம் கடுமையாக இருக்க, அரசியற் றிருத்தங்களை எப்படிப் பெறலாம்? கொடுக்க இருப்போரும் இத்தருணத்தில்அதை மறுத்துவிடுவதற்குப் போதிய நியாயங்கள் ஏற்படுகின்றனவே. சிங்களர் அதிகாரத்தைப் பெற்றுவிடின், சிறு வகுப்பினர்க்கு மென்மேலும் கஷ்டேம் விளைப்பாரெனச் சொல்லப்படுகிறது.

இலங்கையில் இப்போது அனுட்டானத்திலிருக்கும் அரசியலே ஏற்றதென, பிறிட்டிஷ் அரசியல்வாதிகள் அபிப்பிராயப்பட்டதுண்டு. சிறிய நாடாகும் இலங்கையில் மாகாணச்சுயாட்சியரசியல் ஏற்படுத்தின், ஒரு சிறிய தேசத்தில் இரு வகுப்பினர் இடைவிடாது பகையுடனும்விரோதத்துடனும் வாழவேண்டியதாகும். 25000 சதுரமைலைக் கொண்ட நாட்டிற்கு மாகாணச் சுயாட்சி எப்படி நன்மையைக் கொடுக்கும்? மாகாணச் சுயாட்சி ஏற்படின் வட இலங்கை யரசியலை நடத்தப் போதிய பணம் எங்கிருந்து கிடைக்கப்பெறும்? துறைமுக வரும்படி போதுமா? புகைரதவரும்படி யதிகமாயின், அது உரியமுறையில் பங்கிடப்படின் தென்னிலங்கை யரசினர்க்கே உரியதாகும். இவ்விதமாக வகுப்புவாதத்தையும் வகுப்புப் புகாரையும் நிலைநாட்ட எண்ணினன்றி மாகாணச் சுயாட்சிஏற்படக் காரணமின்று.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியற்றிட்டம் பல்வேறு வகுப்பினர்க்கும் பட்சபாதமின்றி நன்மையை விளைவிக்கக்கூடியதாக இருக்க வேண்டியது அவசியம். இதை எவரும் ஆட்சேபிக்கார். இலங்கையில் டொனமூர்க்குழுவினர் சர்வசன வாக்குரிமையை ஏற்படுத்தியது பல்வேறு வகுப்பினரதும் ஒற்றுமையை உறுதிப்படுத்தற் பொருட்டே. ஆனால், இத்திட்டம் அவ்வாறு செய்யாதுவகுப்புப்பிரிவினையைக் கொண்டுவரின், அதுபெரியதுர்அதிஷ்டமே. இக்குறை ஏற்படுவதற்குக் காரணம் திட்டமன்று. இத்திட்டத்தை உபயோகிக்கும் தலைவர்களே.

மேலும் குறைந்த சிறுதொகையினராம் வகுப்பினர்க்கும் நாம் சில வார்த்தைகள் கூறுவது இங்கே பொருத்தமுடைத்து. வகுப்பு வாதிகளாகும் சிலர்மீது ஆவேசங் கொண்டு இலங்கையின் பொது நன்மைக்கும் விருத்திக்கும் பாதகம் விளைப்பது சரியன்று. காலத்துக்குக் காலந் தோன்றும் சில மூடராகும் அரசியல்வாதிகளால் தேச முன்னேற்றம் தடைப்படுகின்றதென்பது உண்மையே. பொதுவாக இலங்கைவாசிகள் உண்மைச் சுதந்திரத்தை யடைய வேண்டுமாயின், வகுப்புவாதத்தை முற்றாக ஒழித்துத் தேசிய நோக்குடன் தேசத் தொண்டை இயற்ற வேண்டும். தமிழ்த் தலைவர்களிலும் சிலர் பிடிவாதமாகநின்று சிங்கள வகுப்புவாதிகளுடன் போட்டிசெய்கின்றனர். ஈற்றில்வெற்றிபெறுபவர் இருவருமன்று. இவர்கள்போட்டியின்பேறு இலங்கை கீழ்நிலையை அடையச்செய்வதே. எங்கள் எசமானராகும்பிறிட்டிஷார்புன்முறுவலெய்தி இருகட்சியினரும்பாடாகக்கலகம்மூட்டிநிற்பின், ஒருபோதுவந்து இணக்கஞ்செய்வர். பின் உடனே பின்வாங்கி, மறுபடியும்கலகம்விளைவதையே நோக்கிநிற்பர். இலங்கை விடுதலை யடையுங்காள் இக்கலகங்களால் பின்போடப்படுகின்றதென்பதைஎவர்தான்மறுப்பர்? இந்தியாவில்வகுப்புக்கலகம் ஏற்பட்டதனல் கண்ட பெறுபேறு யாதென அறிந்தும், இலங்கைவாசிகள் இன்னும் புத்தி எய்தப்பெறாதது பெருந் துக்கமே. சிங்களப் பிரதிநிதிகளும் உண்மையை உணர்வது அவசியம். வகுப்புவாதிகட் கேற்கத் திட்டங்கள் சமைக்கப்படுவதை நாம் ஆதரிக்கவியலாது.

## அடுத்துவரும் அரசாங்கசபைத் தேர்தல்

அடுத்தமாதம் ஏழாந்திகதி அரசாங்கசபைகுலைக்கப்பட்டுப் பின் மாசிமாத முதற்பகுதியில் தேர்தல் ஏற்படுமென அறிவிக்கப்படுகிறது. இதுவரையும் அரசாங்க சபையிலிருந்து தம்மை ஒருபோதும் அசைக்கவியலாதெனவெண்ணி, எவ்வளவோ அவமானத்தைக்கொடுக்கும் விஷயங்களைச் செய்துவந்த சில அரசாங்கசபையங்கத்தவரின் ஆட்டோட்டங்கட்கு எல்லைவந்துவிட்டது. அடுத்துவரும் தெரிவில் சித்தியடையும் நோக்கத்துடன் அநேகர் அபேட்சகராக வரக்கூடும். பழைய அங்கத்தவரன்றி புதிய அபேட்சகரும் பலர் முன்வருவார். தமக்கு இனி இடமில்லை. சனங்கட்குத் தம்மீது இனி நம்பிக்கை கிடையாது என்பதை நன்கறிந்த சிலர் இப்பதவியைக் கைவிட எண்ணுவர். தெரிவு காலங்களில் அளவில்லாத சத்தியங்களையும் வாக்குகளையும் ஒன்றன்பின்னொன்றாகச் சனங்கட்கு உறுதிப்படுத்திவிட்டுப் பின் தமது வாக்கினை நிறைவேற்றாது விட்டவருஞ் சிலருளர்.

அபேட்சகராகவர இருப்போரிடமிருந்து நாம் எத்தனையோ விஷயங்களில் திடமான உறுதிமொழிகளைப் பெறுவது அவசியம். எத்தனையோ ஊழல்கள் சென்ற நான்கு வருடங்களாக அரசாங்கசபை அமைப்பில் இருந்ததை யாவரும் அறிவர். அவைகளை நீக்கத் தாம் எவ்விதத்திலும் தொண்டுசெய்வதாக முன்வரும் அபேட்சகரிடமிருந்து உறுதிமொழி பெறவேண்டாமா? இப்போது நமது அரசாங்கசபையினர்க்குப் பணப் பொறுப்பின்று. தேசாதிபதி தாம் நினைத்தபடி பணத்தைச் செலவுசெய்யவுந் தத்துவமுடையர். உபயோகமும் அவசியமும் இன்றி மூன்று அரசாங்க உத்தியோகஸ்தர் அரசாங்கசபையில் இடம்பெறுகின்றனர். அவர்களால் பெருந்தடைகள் ஏற்படுகின்றனவேயன்றி நன்மைகள் கிடையா. அவர்களின் பதவிகள் அகற்றப்பட்டுச் சனப்பிரதிநிதிகள் அந்தஸ்தானங்களில் இருக்கச் செய்யவேண்டும். மேலும் அங்கத்தவர்கள் வேண்டுமாயின் தமது மரியாதையையும் தேசத்தின் கௌரவத்தையும் காத்தற்கு அரிய சந்தர்ப்பங்களில் தமது பதவிகளை விட்டுவிலக உடன்படவேண்டும். ஒருமுறை நுழைந்துவிடின் இறுதிவரையும் அப்பதவியைக் கட்டியணைப்பது பெரும் அவமானமல்லவா? எவ்வளவு உயர்ந்த பதவியாயினும் மானத்தைக் காக்கும்பொருட்டு விட்டுவிலகத் தயாராக இருக்க வேண்டும். இப்போதிருக்கும் அரசாங்கசபையினர் பொதுமக்களின் அபிமானத்தை யிழந்தமைக்குக் காரணமென்ன? தேசநலத்தைப் புறத்தே விட்டுத் தமது சுயநலத்தைப் பெரிதும் நாடி நின்றமையே. அடுத்த அரசாங்க சபையும் இவ்வாறு வாராவண்ணம் காப்பது வாக்குரிமை பெற்ற பொதுசனங்களின் கடமையாகும். இதைச் சிந்தையில்கொண்டு தெரிவினை நடத்தின் ஒரு கெடுதியும் வந்தெய்தக் காரணமின்று. தெரியப்படுவோர் பொதுநலத்தையே உள்ளத்தில் நாடிநிற்பாராக. ஏற்றவரைவரித்து வாக்குரிமையை அளிப்பது அவசியம்.

## தலைமைக்காரர் நியமனமுறை

தற்போது இலங்கையில் அனுசரணையிலிருக்கும் தலைமைக்காரர் நியமனமுறை ஆரம்பமாய், நூறுவருடங்களுக்கு மேலாகும். இம்முறையில் நியமனம்பெறும் தலைமைக்காரர் தமது கடமைகளை எவ்வாறு பொதுசன நன்மைக்கிணங்க ஆற்றுகிறார்களென்பதைச் சிறியார்தொடக்கம் பெரியோரீறாக யாவரும் நன்கறிவர். இம்முறை பலவருடங்களாக நிலைபெறுகின்றமையால், இதையொட்டி எத்தனையோ அநீதியான வழக்கங்களும் தீமைகளும் விருத்தியடைகின்றன. இந் நியமனமுறையில் இதுவரையும் மாற்றம் ஏற்படாதாக, இந்த அக்கிரமங்களெல்லாம் வரவர உறுதியாக நிலையூன்றிவிட்டன இந்த உத்தியோகத்துடன் இரண்டறக் கலந்துநிற்கும் தீமைகள் யாரைத்தான் பற்றாதிருந்தன. ஒழுக்கம், நேர்மை, உறுதிப்பாடு, திடசிந்தை முதலிய மேன்மையான குணங்களமைந்த சிலரும், தீயவழியை ஒருபோதும் பின்பற்றாரென நற்சாட்சிப்பத்திரம் பெற்ற அநேகரும் தலைமைக்காரனும் பதவியைப் பெற்றவுடன் அவ்வுத்தியோகத்தைச் சார்ந்துள்ள தீமைகட்கு ஆளானதையும் ஆளாவதையும் நாம் கண்ணாரக் காண்கின்றோம்.

ஆகையால், தலைமைக்காரர் நியமனமுறையில் முற்றாக மாற்றம் ஏற்படவேண்டும். பொதுசனங்களின் வாக்குரிமையால் நல்லவரென உறுதிப்படுத்தப்பட்டோரே தலைமைக்காரர் பதவியைப் பெறவேண்டும். அரசினர் நியமிப்பவர் பொதுவாகச் சனங்களின் அங்கீகாரத்தைப் பெற்றவராகார். இற்றைக்கு நாற்பது ஐம்பது வருடங்களுக்குமுன் நியமனம்பெற்ற தலைமைக்காரர் பலர், உயர்ந்த குணங்களுடையராய்ப் பொதுசன நன்மையை நாடினராக இருந்திருப்பின், அதற்குக் காரணரா யிருந்தவர் அக்காலங்களிலிருந்த மாகாணத் தலைவர்களே. அப்படியான மாகாணத் தலைவரை, சனங்களின் மத்தியிற் சென்று அவர்களின் குறைகளை நாடி இடைவிடாது விசாரிப்பவரை இப்போது காண்பதரிது. ஆகையால், தலைமைக்காரர் கிராமச்சபையினரால் நியமிக்கப்படக்கூடியதாக அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். முற்றாக இந்நியமனத்தை நாம் பொதுசனங்கள் பொறுப்பில் சடுதியில் விடும்படி கேட்கவில்லை. சிறிது சிறிதாகக் கிராமபரிபாலனம் கிராமத்தவர்கள் பொறுப்பில் விடப்படுவதே முறையும் ஏற்றதுமாகும். தலைமைக்காரர் நியமனவிஷயத்தை விசாரணைசெய்ய நியமிக்கப்பட்ட சபையினரின் அறிக்கைப்படி மாற்றங்கள் ஏற்படின், பெருந்தொகைப் பணம் அரசினர் செலவுசெய்ய நேரிடும். அவசரமின்றி உயர்தர உத்தியோகத்தர் தொகையும் அதிகரிக்கப்படவேண்டியதாகின்றது. ஆகையால், தலைமைக்காரர் நியமனம் ஊரவர்கள் பொறுப்பில் வரக்கூடியதாக வேண்டிய திருத்தங்களைக் கையாள்வது அவசியம்.

## வேறென்ன சொல்வர்?

முற்றாக மதுப்பாவித்தலை நாட்டிவிருந்து ஓட்டுவது கஷ்டம். ஆகையால், வேண்டிய வேண்டிய இடங்களில் தவறணைகளை ஏற்படுத்துவதே முறை. அவ்வாறே நடந்துவருகின்றதென உதவி மதுபரிபாலன உத்தியோகத்தர் தமது அறிக்கையில் கூறியுள்ளார். பொதுவாகச் சன்மார்க்கத்துக்கும்,கடவுளுக்கும்,சமயத்துக்கும் மாறான விஷயங்கள் நீக்கப்படவேண்டுமென்பதை எவரும் அங்கீகரிப்பர். இனி, நல்வழியையும் மேலான வாழ்க்கையையும் பின்பற்றாது, நீதிக்கும் சன்மார்க்கத்துக்கும் விரோதமாகச் செல்வோரே அநேகர் உலகிலுளர். அதற்காக அவர்கட்கு இயைய்ப் பாவங்கள் விருத்தியடைவதில் அரசினரும் பங்குபற்றவேண்டுமென்பது எவ்வளவு பாதகமானசெயல். பஞ்சமாபாதகங்கள் எப்போதுமேயுள. அவைகளைமுற்றாகநீக்குவதென்பது அரிது. ஆகையால் அவைகள் விருத்திக்கு அரசினர் உதவியாகச் சாதகமாக நிற்பா

ரா? பாதகமாக நிற்பாரா? பாதகமாக நிற்பாரென்பதே எமது அபிப்பிராயம். அவ்வாறே மது பாவித்தல் நாட்டிலிருந்து ஓட்டப்படவேண்டுமென்பதே அரசினரதும் மற்றையோரதும் நோக்கமாகவேண்டும். அப்படிச் செய்ய இயலாவிடினும் இயன்றளவில் செய்தே நிற்கவேண்டும். காரியம் சித்தியடையவில்லையேயென்று மாறுபாடாகத் திரும்பி அத்தீமையை விருத்தியடைய உதவி புரிவதா? அன்று. இப்படிச் செய்தல் பெருநோக்குடையார்க்கு இயல்பாகா. யாழ்ப்பாணத்தில் மது பாவிப்பதை நிற்பாட்ட எடுத்த முயற்சி விரும்பிய நன்மையைப் பயக்காவிடில், அதற்குப் பொறுப்பாளர் அரசாங்க உத்தியோகஸ்தரே. அவ்வுத்தியோகஸ்தர் தமது கடமையைத் துலாக்கோல் போல்நின்று நடத்திவந்திருப்பின் ஓரளவுக்காயினும் நன்மை ஏற்படாதா? இவ்விஷயங்களில் சித்தி எவ்வளவு என அளப்பது பேதமை. நன்மையைநாடி நேரியவழியில் கடமைசெய்வதேயன்றிப் பெறுபேற்றைக் கருதுவது ஏற்ற விஷயமன்று. மதுபரிபாலன பகுதியார் விஷயங்களை மாறுபாடாக விளங்குவதைக் கண்டு கவல்கின்றோம்.

## இது என்ன அநியாயம்

இலங்கையிலிருந்து வருடாவருடம் ஆயிரக்கணக்கான மாணவர் கேமபிறிட்ஜ் சீனியர் என்னும் பரீட்சைக்குச் செல்வதுண்டு. அவர்களில் சித்தியடைவோர் அரைவாசியிலும் குறைவு. இதற்குக்காரணம் யாதெனஎவராவது இதுவரையும் கூறினரில்லை. பற்பல கல்லூரியின் ஆசிரியர்களும் இப்பரீட்சைக்கு ஏற்ற மாணவர் கலவிவிருத்தியடையாமையால் தாம் அபஜெயமடைந்தனரென எண்ணிவந்தனர். இப்போது இப்பரீட்சையில் அநேகம் மாணவர் சித்தியெய்தாமைக்குக் காரணம் யாதென ஒரு கல்லூரிப் பிரதமாசிரியர் வெளிப்படையாகக் கூறியுள்ளார். இலங்கை வித்தியாபகுதியார் பரீட்சை கொடுக்க முன்வந்த மாணவருள் மூன்றிலொரு பங்கினர்க்குமேல் சித்தியடையச் செய்யாதிருக்கும்படி செய்யுமாறு கேம்பிறிட்ஜ சர்வகலாசாலையினர்க்கு இரகசிய அறிவித்தல் கொடுத்துள்ளாரெனவும் அப்படியே சர்வகலாசாலையினர் இதுவரையும் செய்துவருகின்றனரெனவும் சொல்லப்படுகின்றது. விஷயம் உண்மையாயின், இதிலும்பார்க்கப் பெரிய அநியாயம் வேறுயாதெனக் கூறுவாம்? இங்கிலாந்திலிருந்தும், மற்றைய நாடுகளிலிருந்தும் இப் பரீட்சைக்குச் செல்வோர்க்கு ஒரு விதமாகவும், இலங்கையிலிருந்து செல்வோர்கku இனனொரு விதமாகவும் தீர்ப்புககூறப்படின இதுஎவ்வளவு கொடுமையான செயலாகும். அப்படியாயின் இலங்கைவாசிகட்கென ஒரு பரீட்சை இலங்கையில் வைத்து அவர்களைத் தலைமட்டப்படுத்தலாமே. கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையினர் இலங்கையரசினர் சொல்லைக் கேட்டு இவ்வித நீதியீனமான விஷயத்தை எப்படிச் செய்துவந்தனர்? பெறும் பட்டத்துக்கோ வேற்றுமை கிடையாது. ஆனால், அப்பட்டம் பெறச செல்வோரைப் பலவாறாகப் பட்சபாதத்துடன் நோக்கின், அது எவ்வளவு கீழான செயலாகும். இலங்கை வித்தியாபகுதியினர் இவ்வித அறிவிற்குறைந்த கருமத்தில் இறங்கியதன் நோக்கம் யாதோ?

---

காலநிலை:—சென்ற இருதினங்களாக விடாமழையும் புயலும் காணப்பட்டன. நேற்றையத்தினமாகிய சனிக்கிழமை மழையில்லை. இடையிடையே மழைக்கோலங் காணப்படுகிறது.

# இத்தாலி-அபிசீனிய யுத்தம்.

## சர்வாதிகாரியினதும் சக்கரவர்த்தியினதும் கைரேகைகள் காட்டும் எச்சரிக்கை.

(நுகேகோடை, திரு. க. இராமச்சந்திரன்)

["ஈழகேசரி"க்கென எழுதப்பட்டது]

இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினிக்கும் அபிசீனியச் சக்கரவர்த்திக்கும் சாதகங்கள் கணித்துப் பலர் வெவ்வேறு விதமாக அவர்களிருவரதும், அவர்கள் தேசங்களினதும் பிற்கால வாழ்வைக் குறித்துச் சாத்திரஞ் சொல்லுகிறார்கள். தேசங்களைக் குறித்தும் அரசுகளைக் குறித்தும் சோதிடஞ்சொல்லல் (Mundane Astrology) சாத்தியமானகருமமல்ல. ஒவ்வொரு தேசத்தின் ஆட்சிக்கோளை நிச்சயித்தலே தற்போது மிகவுங் கஷ்டமாய் இருக்கின்றது.

நிற்க, இன்று கொடிய யுத்தம் பொருதும் இரு தேசங்களின் தலைவர்களின் பிறந்த இடமும் நேரமும் கண்டிப்பாகத் தெரியாமலிருக்கும் போது அவர்களுக்குச் சாதகஞ் சொல்லல் சாத்திரரீதியாகவும் வராது. ஆனால், அவ்விருவர்களின் கைரேகைகளை ஓர் ஆங்கிலப்பத்திரிகையில் காணும் பாக்கியம் சில நாட்களுக்குமுன் எமக்குக் கிடைத்தது. கைப்படங்களை எடுத்து அச்சிட்டவர் திரு. யோசேப் றனல்டு என்னும் ஓர் ஆங்கிலேயர். இவர் முசோலினியை 1922-ம் ஆண்டில் சந்தித்தாராம்.

முசோலினியின் கண்ணும் வாயும் காட்டும் அஞ்சா வன்மையையும் அகங்காரத் தன்மையையும் பிடிவாதக் குணத்தையும் அவரது கையும் வெளிப்படுத்துகின்றது. சீவியரேகை 55 வயசின்மேல் செல்லவில்லை. இதில் இரண்டு முறிவுகளும் அவற்றின் கெடுதியிலிருந்து ஆயுளைக் காப்பாற்றுவதற்கு இரண்டு சதுரக் கோடுகளும் இருக்கின்றன. புத்தி ரேகையிலும் அதேவித அடையாளங்கள் காணக்கிடக்கின்றன. புத்தி ரேகை சீவிய ரேகையுடன் சேராமல் பிரிந்திருப்பதனால், தான் எடுத்த கருமங் கைகூடுமென்ற அசைவற்ற நம்பிக்கையும், மற்றையவர்களது புத்தியிலும்பார்க்கத் தனது புத்தியே விசேடித்ததென்ற ஓர் தற்பெருமையும் முசோலினியின் வாழ்க்கையின் முக்கிய லட்சியங்களாய்விட்டன.

அவரது கையிலுள்ள விதிரேகை (சனிரேகை) 54 வயசளவில் கோணித் தேய்வுற்றிருக்கிறது. சூரிய ரேகை 22-ம் வயசின் பின்னே ஆரம்பமாகி புத்திரேகைக்கும் இருதய ரேகைக்குமிடையேயுள்ள பாகத்தில் (அதாவது 35 தொடக்கம் 54 வரையில்) நல்ல பிரகாசமுற்று 55 என்னும் எல்லைகிட்டவே சிறிது சிறிதாக மங்கி அழிகிறது. எனவே, 54-ம் வயசு முசோலினியின் மங்குதிசை ஆரம்பகாலமெனக் கூறல் மிகையாகாது. அன்னார்க்கு இப்போ வயசு 53. சீவியரேகை, சனிரேகை, சூரியரேகை மூன்றும் ஒரே காலத்தில் மங்கத் தொடங்குவது உண்மையில் பெரிய துரதிஷ்டமே. தனது தற்போதைய உன்னத நிலையை இழப்பதோடு நில்லாமல் ஆயுளுக்கும் ஏதாவதொரு அபாயத்தையும் தேடக்கூடும். வியாழமேடுபர்ந்து அதில் இரு நட்சத்திரங்கள் இருந்த பாக்கியத்தால் குடிசையில் பிறந்தும் தன்னூர் அரசனுக்கும் தலைவணங்காத் தலைவனாய் ஆட்சி செலுத்தும் பெருமையும், உலகமுழுவதின் கவனத்தை ஈர்க்கும் வீரமும் பராக்கிரமமும் கிடைத்தனவெனலாம். கைரேகை சாத்திரத்தின்படி தர்ம வழியையும், ஞானமார்க்கத்தையும் காட்டும் வியாழ மேடே அகங்காரத்திற்கும் உறைவிடமானது. ஆகையால் முசோலினியின் பிற்கால வாழ்வு மேற்சொல்லியவாறு அதிகம் இருள் அடைந்திருப்பதற்கு முக்கியகாரணம் அன்னவரின் கையில் காணக்கிடக்கும் அகங்கார ரேகையேயாம்.

இனி, அபிசீனிய சக்கரவர்த்தியின் கைரேகைகளைச் சிறிது ஆராய்வாம். அவரது சீவிய ரேகையானது ஒருவித தடைமுறிவு இன்றிப் பூரண ஆயுளைக் காட்டுகிறது. புத்திரேகையின் அந்தம் மூன்றுகிளைகளை உடைத்தாய் ஒருகிளை புதன்மேட்டைநோக்க, இரண்டாவது செவ்வாய் மேட்டுக்குச்செல்ல, மூன்றாவது சந்திரன் மேட்டைப்பார்க்கின்றது. இதிலிருந்தே அவர் நுண்ணிய அறிவுள்ள ஓர் அரசியல் நிபுணரெனக் கூறலாம். விதிரேகையில் இருமாற்றங்கள் தெரிகின்றன. ஒன்று முப்பத்தொன்பதாவது வயசுக்கணித்தாய், மற்றையது புத்திரேகைக்கும் இருதயரேகைக்கும சரி நடுவில். பிந்தியது இவ்வருஷத்தையும் அடுத்த ஒருவயசையும் குறிக்கின்றது. சக்கரவர்த்திக்கு இப்போ வயசு 44. 46-ன்மேல் விதிரேகை பழைய நல்ல நிலையைப் பெறுகிறது. அத்துடன் சூரியரேகை 32-ல் தொடங்கி ஆயுள் முடியும்வரையும் நல்ல ஒளியுடன் தோன்றுகிறது. இவை மாத்திரமன்றி வியாழமேட்டிலும் ஓர் சதுரக்கோடு இருக்கிறது. எனவே இச் சக்கரவர்த்தியின் சாயந்தர வாழ்வு, சாந்தி, பொறுமை, தர்மம், கீர்த்தி முதலியவைகளுடன் பொருந்தியதாய் இருந்து இறக்கும்போது புகழுடன் முடியவும் வேண்டும். 44 வயசு தொடக்கம் 46 வரையிலும் உள்ள இரண்டு ஆண்டும் பொருள் நஷ்டத்தையும் துக்கத்தையும் கிலேசத்தையுங் கொடுக்கும். ஆனால் அவரது உயிரையும் சக்கரவர்த்தியென்ற பட்டத்தையும் பாதிக்கமாட்டாது.

மேற்கூறியவற்றால், இப்போ நடக்கும் யுத்தம் ஈற்றில் இத்தாலியின் கேட்டிலும் முசோலினியின் அழிவிலும் முடியுமென்பது வெளிப்படை.

---

## விளக்கில்லா வண்டியுடன் மோதிய மோட்டார்

### மாடு மாண்டது; வண்டி நொருங்கியது

### இருவருக்குப் பலமான காயம்.

சுன்னாகம் 14.

சென்ற புதன்கிழமை 13-11-35 இரவு எட்டுமணியளவில் சுன்னாகம் பொலிஸ்விதானை வீட்டுக்குச் சமீபமாக ஒரு மாட்டுவண்டியுடன் கார் மோதியதால் உடனே மாடு மாண்டுபோனதுடன் வண்டியும் துண்டு துண்டாக முறிந்துவிட்டது. வண்டியிலிருந்த இருவர் காயமடைந்தனர். ஒருவரின் கையில் பலமான சேதமேற்பட்டது. யாழ்ப்பாணத்தை நோக்கிவந்த வண்டியில் வெளிச்சமில்லையென்றும், காங்கேசன்துறையை நோக்கிச்சென்ற காரில் வெளிச்சம் சரியாயிருக்கவில்லையென்றும கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். கார்ச் சாரதியும் கையுடன் பிடிக்கப்பட்டுப் பிணையில் விடப்பட்டார். ந—நி.

## "ஈழகேசரி" வழக்கு

யாழ்ப்பாணம் 14

"ஈழகேசரி"ப் பதிப்பாளர்மீது யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சென்ற 12-9-35ல் பொலிஸ் நீதிபதி திரு. K.ஆள்வாப்பிள்ளை முன்பாக விசாரிக்கப்பட்டு, மேற்படி பதிப்பாளர் குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்தமையால் 2 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. தீர்ப்புக்கு மாறாகவும், குறித்த சட்டத்தின்படி பொலிசாருக்கு வழக்குத் தொடர அதிகாரமில்லையெனவும் மேல்கோட்டாருக்கு மனுச் செய்யப்பட்டதின் பேரில், சென்ற 12-11-35 கொழும்பு பிரதம நீதிபதிமுன் அத்துவக்காத்து திரு. N. குமாரசிங்கம் அவர்களால் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின் பின் தண்டனை நிராகரிக்கப்பட்டதெனச் செய்தி கிடைத்திருக்கிறது. ந. நி.

## 200 வைத்தியர்கள் எதிர்பார்க்கின்றனர்

இலங்கையில் அரசினரின்கீழ் உத்தியோகம் பெறக்கருதி 200 வைத்தியர்கள் எதிர்பார்த்தவண்ணமாக விருக்கின்றனர். 1930-ம் ஆண்டிற்கு முன் உத்தியோகத்தை நாடுவோர் அரசினர்க்கறிவித்துத் தங்கள் நாமத்தை நாம அட்டவணையில் பதிவுசெய்வித்துக்கொள்ளவேண்டும். பின்னர் இடம் ஏற்பட ஏற்பட இடாப்பு வரிசைப்படி உத்தியோகம் வழங்கப்பட்டுவந்தது. இப்போது அந்த இடாப்பு நிராகரிக்கப்பட்டுப் புதிதாக ஓர் இடாப்பு ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது. அதில் உத்தியோகம் நாடுவோர் நாமம் பதியப்படும். ஆனால் பதியப்பட்ட கால ஒழுங்கின்படி உத்தியோகம் வழங்கப்படமாட்டாது. இடாப்பிலுள்ள பேர்களில் தமக்குப் பிரியமானோரை நியமிக்கும் உரிமை சுகாதாரமந்திரியார்க்குண்டு.

## வேகமுள்ள ஆகாயக்கப்பல்கள்

இப்போது ஆகாயக்கப்பற் போக்குவரத்து பிரதானமான நாடுகட்கிடையில் அதிகம் நெருக்கமாக நடக்க ஆரம்பித்துவிட்டமையால் கெதியாகச் செல்லக்கூடிய புதிய விமானங்கள் அவசியம வேண்டியனவாகின்றன. ஏகாதிபத்திய நாடுகளாகும் இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய தேசங்கட்குச் செலவதற்கென 29 விமானங்கள் புதிதாகச் சரிக்கட்டப்படுகின்றன. 5 தொன் நிறையுள்ள சாமான்களை அவ்விமானங்கள் கொண்டுசெல்லும்.

## அபிசீனிய யுத்தம்

நவம்பர் 14

இன்று இத்தாலிய பிரதம சேனைத் தலைவராகும் டிபோனு என்பவர் ரைக்கர் மாகாணம் இத்தாலியர்க்குச் சொந்தமானதெனப் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டனர். பெருந்திரளான சனக்கூட்டத்தில் இவ்விளம்பரஞ் செய்யப்பட்டது. இவரின் ஓர்பக்கலில் ராஸ் குக்சா நின்றாராம். மற்றப்பக்கத்தில் முசோலினியின் மருமகனை கவுன்சியானோ நின்றனர்.

இத்தாலியர் இதுவரையில் அபிசீனியருக்குச் சொந்தமாயிருந்த 12000 சதுரமைல் கொண்ட பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொண்டனர்.

தெற்குப் போர்முனையில் சேனைத் தலைவராகும் புறாசியும், கேணல் மலெற்றி என்பவரும் அபிசீனியர்க்குப் பெருங் கஷ்டமிழைக்கின்றனர். ஒழித்திருந்து யுத்தம் செய்யும் அபிசீனிய வீரரைத் தேடிக் கலைக்கின்றனர்.

தெற்குப் போர்முனையில் அபிசீனிய சேனாதிபதியாகும் ராஸ் நாஸிபு தமது துருப்புக்களை ஒக்டன்மாகாணத்தை விட்டு விலகும்படியும் ஹரூர் நகரைச் சென்று காக்கும்படியும் கட்டளையிட்டிருக்கிறார்.

மக்கலே பிரதேசத்தை இத்தாலியர் கைப்பற்றினாராயினும் அந்நகர்க்குச் சிறிது வடக்கே இன்னுஞ்சில இடங்கள் அபிசீனியர் கையிலேயே இருக்கிறது. அபிசீனியர் மறைந்திருந்து வந்து இத்தாலியரைத் தாக்கிப் பெரும் நட்டங்களை விளைக்கின்றனர்.

அபிசீனியர் மூன்றடி ஆழமுள்ள குழி தோண்டி யதற்குள் மறைந்திருக்கின்றனர். இத்தாலியர் வந்ததும் அவர்கள்மீது பாய்ந்து கொலைசெய்கின்றனராம். இவ்வாறே இத்தாலியசேனாத்தலைவராகும் மேஜர் டெல்மொன்ரோ என்பவரையும் கொன்றனராம்.

5,000 இத்தாலியர் மசோவா நகரில் இறங்கி மோட்டார் லோறிகளி லேறிச் சென்று யுத்தமுனையை அடைந்தனராம்.

---

உலகநடை கல்லாதவர்கள் பல நூலைக் கற்றுங் கல்லாதவர்களே.

# Order Nisi

In the DISTRICT COURT of JAFFNA

In the matter of the estate of the late V. S. Muttiah of Elalai

*Deceased.*

**Testamentary Jurisdiction: No. 178**

Paripooranam widow of V. S. Muttiah of Elalai

*Petitioner.*

Vs.

1. Muttiah Thevarajah
2. Muttiah Thurairajah
3. Saraswathi daughter of Muttiah
4. Muttiah Tharmarajah
5. Nageswari daughter of Muttiah
6. Sinnathamby Sanmugam all of Elalai.

The abovenamed 1st to 5th respondents are minors appearing by their guardian-ad-litem the 6th respondent.

*Respondents.*

This matter of petition of the abovenamed petitioner praying that she be declared entitled to Letters of Administration to the estate of the abovenamed deceased coming on for disposal before C. Coomaraswamy Esquire District Judge on the 31st day of October, 1935 in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the petitioner.

It is ordered that the abovenamed petitioner be declared entitled to Letters of Administration to the estate of the abovenamed deceased and that letters be issued to her accordingly unless that abovenamed respondents or any other persons shall on or before the 21st day of November, 1935 appear before this court and show sufficient cause to the satisfaction of this court to the contrary.

This 5th day of November 1935.

(*Sgd.*) **C. Coomaraswamy**
District Judge

(44) 17-11-35—2

## சர்வதேசசங்கத் தீர்மானமும் அவுஸ்திரியாவும்.

அவுஸ்திரியா தேசத்தின் புறநாட்டு மந்திரியார் பரன் பேகர் வால்டனெக் என்பவர் சர்வதேச சங்கத்தின் தீர்மானத்திற்கிணங்கித் தாமும் இத்தாலி தேசத்திற்குச் சண்டைக்குரிய பொருட்களை அனுப்பாது விடுவதாகத் தீர்மானஞ்செய்து விட்டதாக சென்ற 12-ந் திகதி நடைபெற்ற அரசியல் மந்திராலோசனைச் சபையில் வெளிப்படுத்தி யிருக்கின்றனரென அறிகின்றேம்.

சர்வதேச சங்கம் 18-ந் திகதி தொடக்கம் இத்தாலிக்கனுப்பும் பொருட்களைப் பகிஷ்காரஞ் செய்வதாகத் தீர்மானஞ்செய்திருக்க ஜெர்மன் தேசம் 16-ந் திகதி தொடக்கம் பின்வரும் பொருட்களை இத்தாலிக்கு அனுப்பாதுவிடத் தீர்மானித்திருக்கின்றதாம். அவையாவன :— வெண்ணெ, மாட்டிறைச்சி, றப்பர், எண்ணெவகை பெற்ரேல், பட்டு, கம்பளி, பருத்திப்பஞ்சு, இரும்புவகை, தகரம் முதலியன.

இதுவிஷயம் சர்வதேசசங்கத்தின் தீர்மானங்கருதி நடைபெறுவதல்லவெனவும், தமது பொருளாதார நிலையைக் கவனித்தே நடைபெறுவதாகவும் அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கின்றதாம்.

# இந்தியச் செய்திகள்.

## Dr. அம்பேத்காருக்கு வந்த பெருமை

நாஸிக்நகரில் அம்பேத்காரின் ஆதிக்கத்துள் ஹரிஜன மகாநாட்டில் செய்த தீர்மானம் யாவரையும் விழிக்கச்செய்துவிட்டது. இந்துக்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று அம்பேத்காரைப் பேட்டி கண்டு அவர் தீர்மானத்தைக் குறித்து விவாதிக்கின்றனர். மகமதியர், கிறீஸ்தவர் முதலிய மற்றைய சமயிகள் இத்தருணத்தை வழுவவிடாது தமது பட்டிக்குள் பெருந் தொகை ஆடுகளை ஒருங்கு சேர்த்துவிடலாமென எண்ணுகிறார்கள். நாஸிக்நகரில் ஹரிஜனங்களின் கூட்டத்தில் மகமதியர் பலர் சமுகமளித்தனர். கூட்டத்தில் பிரசங்கஞ்செய்த ஒருவர் இந்துக்களுக்கிடையில் ஏற்படும் விவாதத்தில் மகமதியர் கலந்துகொள்ளவேண்டியதில்லையென அவரை அகற்றினர்.

ஹரிஜனங்கள் எல்லாரையுஞ் சேர்த்து ஒரு புதிய வகுப்பை ஏற்படுத்துவதாகவும் அதற்கு வேண்டிய தீக்ஷை முதலியவற்றைத் தாம் செய்யச் சம்மதமென்று சங்கராச்சாரியர் ஒரு தூதுக்கோஷ்டியினரை அம்பேத்காரிடம் அனுப்பினர், அம்பேத்கார் அவர்கள் சொன்னவைகளைக் கேட்டு, சங்கராச்சாரியர் அப்படிச் செய்வதற்குத் தாம் தடைசெய்யவில்லையென்றுங் கூறினர். ஆனால் இவ்விஷயத்தைக் குறித்துத் தாம் பொறுப்பினை ஏற்கமுடியாதென்றனர். இந்து மகாசபையினர் இன்னும் இவருடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கும் வரவில்லை.

## மறுக்கின்றார்

ஹரிஜனங்களின் சார்பாக இப்போது கிளம்பியுள்ள Dr. அம்பேத்கார் அவர்கள், காங்கிரஸ்சபைக்கு மாறாகவும், மகாத்மா காந்தியடிகளைக் குறைகூறியும் சில அபவாதங்களைக் கிளப்பியுள்ளார். காங்கிரஸ் கட்சியினர் ஹரிஜனங்கள் விஷயத்தில் அக்கறைகொள்வதில்லையென்றும், காவிதா என்ற இடத்தில் ஹரிஜனங்கட்கு விரோதமாக நடந்த சம்பவத்தைக் குறித்து காங்கிரஸ் கட்சியினர் விசாரணைசெய்யவில்லையென்றும் கூறினர். மகாத்மாவும் இவ்விஷயமாக ஒன்றுஞ் செய்யவில்லையென்றனர்.

Dr. அம்பேத்கார் இவ்வாறு கூறியதை சர்தார் வல்லபாய்படேல் முற்றாக மறுக்கிறார். காவிதா விஷயத்தில் ஹரிஜனசேவை சங்கமும், காங்கிரஸ் தலைவரும் ஒருவித சமாதானத்தைக் கொண்டுவர முயன்றதாகவும், இவ்விஷயமாகவே ஹரிஜன சேவை சங்கக் காரியதரிசியாகும் திரு. A. V. தக்கர் அவர்கள் காவிதா சென்றதாகவும் கூறுகின்றார். மகாத்மா ஹரிஜனங்களின் முன்னேற்றத்தில் எவ்வளவு ஊக்கங் காட்டுகின்றாரென்பதை யாவரும் அறிவரெனப் படேல் கூறுகின்றார். வேண்டுமாயின் Dr. அம்பேத்கார் காங்கிரஸ் சபையில் சேர்ந்து ஏற்ற தொண்டினை நினைத்தபிரகாரம் செய்யலாமென்றும் படேல் கூறினார்.

## திருப்பிப்பெற்றுக்கொண்டனர்

மகாத்மாவினால் அமைக்கப்பட்ட குஜராத் வித்தியாபீடம் சட்டமறுப்பியக்கம் நடக்குங்காலத்தில் குலைக்கப்பட்டது. அப்போது அந்த வித்தியாபீடத்தினர்க்குச் சொந்தமானதும் 50000 ரூபாவுக்குமேல் பெறுமதியானதுமாகும் வாசிகசாலை குஜராத் நகரசங்கத்தினர்க்குக் கொடுக்கப்பட்டது. அவ்வித்தியாபீடத்தின் அத்தியட்சகர் பலர் அப்போது சிறையிலிருந்தனர். இப்போது அவர் அந்தப் புத்தகசாலையைத் தம்மிடம் விடும்படி கேட்டனர். மேற்படி நகரசங்கத்தினர் அதற்குடன்பட்டுப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்தனராம்.

## காங்கிரஸ் தலைவரின் தமிழ்நாட்டு யாத்திரை

காங்கிரஸ் தலைவராகும் பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் தமிழ்நாட்டில் மூன்று வாரங்களாகச் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு இப்போது தெலுங்குநாடு சென்றுள்ளார். தமிழ்நாட்டில் இவர் 14 ஜில்லாக்களைத் தரிசித்து 116 பிரசங்கங்கள் செய்துள்ளார். 20 நகர சங்கங்கள் இவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தன. மோட்டார் மூலமாக 2000 மைல்களும், புகைரத மூலமாக 800 மைல்களும் பிரயாணஞ்செய்தனர். காங்கிரஸ் நிதிக்காக இவர்க்குப் பலவிடங்களிலுமாக 21000 ரூபா சேர்த்துக் கொடுக்கப்பட்டது. முடிசூடா மன்னராக இவரை யாவரும கௌரவத்துடன் வரவேற்றனர். இவர்க்கு நடந்த மரியாதையையும் வரவேற்புகளையுங் கண்டு சக்கிரவர்த்திகளும் மன்னர்களும் பொறாமையடையக்கூடும். இவர் பலவிடங்களிலும் செய்த பிரசங்கங்கள் அமுதம்போன்றன. அரிய போதனைகள் பொதிந்துள்ளன. மகாத்மாவுக்கடுத்தபடியில் வைக்கப்படக்கூடியவர் இவரேயெனப் பலருங்கருதினர். நோய்வாய்ப்பட்டுத் தேகாரோக்கியங் குன்றியவராயிருந்தும் தமிழ்நாட்டில் பிரயாணஞ் செய்யுங்கால் நாளொன்றுக்கு ஏழு, எட்டுமுறை பிரசங்கங்கள் செய்தமை மிகவும்வியக்கப்படவேண்டியதே. கதர், விருத்தி, அஹிம்சை, காங்கிரஸ்தொண்டு என்பவற்றைக் குறித்து இவர் செய்தபிரசங்கங்கள் பெரிதும் ஓம்பப்படக்கூடியன.

## லண்டன் செல்வாராம்

இதுவரையும் சுபாஸ் சந்திரவஸு அவர்களை அரசினர் இங்கிலாந்துக்குச் செல்ல உத்தரவு கொடுத்தாரில்லை. இப்போது அத்தடை நீக்கப்பட்டது. இந்தமாதக் கடைசியில் சுபாஸ் சந்தரவஸு அவர்கள் லண்டன் நகர் சென்று அங்கே இந்திய மக்கள் பொதுக்கூட்டத்தில் தலைமைவகிப்பாராம். பின் இங்கிலாந்தில் சில விடங்களைத் தரிசித்துவிட்டு அயர்லாந்தின் தலைநகராகும் டப்ளின்நகர் சென்று அரசியற்றலைவராகும் டீவலேராவுடன் பேட்டி கண்டு பேசுவாராம்.

## அராஜகக் குழப்பங்கள்

இந்தியாவில், பிரதானமாக வங்காளத்தில் அதிகமாகக் காணப்படும் அராஜகக் குழப்பங்களையும் செய்கைகளையும் குறித்து வங்காள அரசினர் ஓர் அறிக்கை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அரசினர் எத்தனைசட்டத்தைப் புதிதாக இயற்றினும் அராஜகக் குழப்பங்களை நிற்பாட்டுவது கஷ்டமென அவ்வறிக்கையில் கூறப்படுகிறது. இந்தியர் மனமாற்றமடையினன்றிக் குழப்பங்கள் அற்றுப்போகாவாம். இவ்விஷயத்தை மகாத்மா முதலிய தலைவர்கள் முன்பு பன்முறை எடுத்துக்காட்டியும் அரசினர் இப்போதாவது அறியவந்தது பெருங்காரியமாகும். 1935-ம் வருடத்தில் 15 அராஜகச் செயல்கள் நடந்ததாகவும், அராஜகர்கள் இருவரைக் கொன்றதாகவும், அவர்களிலும் இருவர் கொலையுண்டதாகவும் கூறப்படுகிறது. இதுவரையில் அராஜகத்தில் ஈடுபட்டதாகக் கைதியாக்கப்பட்டுச் சிறையில் இருப்போர் தொகை 3230 பேராகும். 1934-ம் ஆண்டுவரையும் அராஜகர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளின் தொகை 234 ஆகும். முன்னிருந்ததிலும் அராஜகம் எவ்வளவோ குறைந்துவருவதாகவும், அதற்குக்காரணம் விலிஙடன் பிரபுவின் திடமான அரசியலேயெனவும் கூறுகின்றனர். இதை நாம் முற்றாகநம்பவியலாது. மகாத்மா அஹிம்சையைக் கைக்கொள்ளும்படி பன்முறையும் நினைப்பூட்டி வந்தமையேயென்பதே எமது அபிப்பிராயம். அரசினரின் அடக்குமுறை அராஜாகத்தைச் சிறிது நேரத்துக்கு அமர்த்திவைக்குமேயன்றி முற்றாக நீக்குமா? அரசினர்இன்னும் இந்தியரை விளங்காதிருப்பது நூதனமாகின்றது.

## சமாதானத்தை நாடவேண்டியதே

அடுத்த காங்கிரஸ்மகாசபை லக்கோ நகரில் கூடுவதாகமுன்னரே முடிவுசெய்யப்பட்டது யாவருக்கும் தெரியும். உபசரணைச்சபையினர்க்கிடையில் கலகமேற்பட்டதால் அங்கே மகாசபை கூடுதற்குவேண்டிய ஒழுங்குகள் செய்யப்படாதிருக்கின்றன. இப்போது இருகட்சித் தலைவர்களும் வேறு சிலரும் சேர்ந்து ஒற்றுமையை நாட முயற்சிசெய்கின்றனராம்.

இவ்விஷயமாக காங்கிரஸ் தலைவர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தை வேறு மாகாணத்தில் இனிவைப்பது முடியாத விஷயமென்றும், அற்ப விஷயத்தில் இரு கட்சிகள் தோன்றி ஐக்கிய மாகாணத்தின் நற்பெயருக்கு பங்கம் விளைப்பது சரியல்லவெனவுங் கூறுகின்றார். எப்படியாவது லக்கோ நகரில் கூடத்தான் வேண்டுமென்றும் குறிப்பிடுகிறார். காங்கிரஸ் தலைவரின் சொல்லைச் சிரமேற்கொண்டு இருகட்சித்தலைவரும் இணக்கமடைந்து தேசநலத்தை நாடுவாராக.

# சுன்னாகம் சந்தையில் மாகாணத் தலைவர்.

## நேரிற்கண்ட அனுபவம்.

### மாகாணத் தலைவரின் சிரத்தை.

சுன்னாகம் சந்தையில் நடைபெற்றுவந்த சீர்கேடுகளைக்குறித்துக் கிளர்ச்சிசெய்ததன் பயனாகச் சென்ற திங்கட்கிழமை காலை 9 மணியளவில் வடமாகாணத் தலைவர் திரு. டைசன் துரையவர்கள் ஷெ சந்தைக்கு விஜயம் செய்தார். அச்சமயத்தில் காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. சு. நடேசபிள்ளையும், வேறு சிலரும் சந்தையின் நிலைமையை மாகாணத்தலைவருக்கு விளங்கவைத்ததுடன், சந்தையில் வியாபாரஞ் செய்பவர்களுக்குள்ள கஷ்டநஷ்டங்களை நேரில் காணும்படியும செய்தனர்.

### மாகாணத்தலைவரின் பதில்.

சந்தையில் புறம்பாக விடப்பட்டிருக்குமிடத்தில் உணவுப்பொருள்களைவைத்து விற்பவர்கள் வாடகை கொடுக்கவேண்டியதில்லை யெனவும், வெளிநிலத்தில் ஒரு சதுரயார் நிலத்துக்கு நாளொன்றுக்கு ஒரு சதமே வரியாகக் கொடுக்கப்படலாமெனவும், சந்தைக் கட்டிடத்திற்குள் இரண்டு சதுரயாருக்கு நாளொன்றுக்கு 5 சதம் கொடுக்கப்படவேண்டுமெனவும் விதியிருப்பதால், அதற்கு மேலாக வரி அறவிடவோ, வேறுவிதமான கஷ்டங்கள் செய்யவோ கூடாதெனவும், அப்படிச் செய்பவர்கள் மீது சட்டப்படி வழக்குத் தொடரலாமெனவும் மாகாணத் தலைவர் கூறினர். குத்தகைக் காரரும் மற்றையோரும் செய்யும் அநீதிகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் புறம்பான ஒருவரை மார்க்கட்கீப்பராக நியமிப்பதாகவும், வண்டிப்போக்குவரத்துகளை ஒழுங்கான முறையில் நடைபெறச் செய்வதற்காகச் சந்தை நாட்களில் பொலிஸ்காவல் வைப்பதாகவும் வாக்களித்தனர்.

—நமது நிருபர்.

# புங்குடுதீவில் ஸ்தல சுயாட்சி மந்திரியார்

## பொதுசனங்கள் எடுத்துரைத்த குறைகள்

### போக்குவரவு வசதியின்மையால் ஏற்படுங் கஷ்டங்கள்

இலங்கை அரசாங்கசபையில் ஸ்தலச் சுயாட்சி மந்திரியாராக விருக்கும் (Minister of Local Self Government) C. பத்துவான்றுவோ யாழ்ப்பாணம் சென்றவாரம் வந்து பின் அங்கிருந்து புங்குடுதீவு சென்று இருநாட்களை அங்கே கழித்தனர். சென்ற சனிக்கிழமை (9-11-35) அவருக்கு ஒரு உபசாரணைப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அப்போது புங்குடுதீவு மகாசன சபைத் தலைவராகும் திரு கே. ஜோபுபிள்ளை அக்கிராசனம் வகித்தனர். கிராமச் சங்கத் தலைவராகும் திரு. வி. பசுபதிப்பிள்ளை மந்திரியாருக்கு மாலைபிட்டு அவர்க்கோர் பூஞ்செண்டும் அளித்தனர்.

அக்கிராசனர் முதலாவதாக மந்திரியாருக்கு வந்தனம் கூறினர். புங்குடுதீவின் சரித்திரத்தில் ஒரு மந்திரியாரை அவ்வூரவர்கள் வரவேற்றது இதுதான் முதன்முறையென்றனர். நேரே மந்திரியார் விஷயங்களைத் தாமே பார்த்து விஷயங்களை அறியக்கூடியதாகவிருந்ததும் இம்முறைதானென்றனர். மந்திரியார் வரவால் புங்குடுதீவு வாசிகளுக்கு இதுவரையும் இருந்த குறைகள் நீங்குமென்றும் எடுத்துரைத்தனர். திரு கே. அம்பலவாணரவர்களால் வாசிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்திலும் பாலத்தையும் றோட்டுகளையும் குறித்தே விசேஷமாகக் குறிக்கப்பட்டிருந்தது. கிராமச்சங்கத் தலைவரும் இவ்விஷயங்களை யொட்டியே பேசினர். சாவகச்சேரிக் கலாசாலைத் தலைமை ஆசிரியராகும் திரு ஜே. சீ. அமரசிங்கம் அவர்கள் மிகத் திறமையாக எத்தனையோ நியாயங்களுடன் பாலம் விரைவில் கட்டவேண்டிய அவசியத்தை உறுதிப்படுத்தினர்.

மந்திரியார் இறுதியில் கூறியதாவது:—"இன்று காலை யான் பயணஞ் செய்யுங்கால் புங்குடுதீவு வாசிகள் இடைவிடாது வாதாடிநிற்பது சரியென்பதையறிந்தேன். ஒரு பாலம் அவசியம் அமைக்கப்படவேணடும். போக்குவரவு வசதி எல்லாவற்றிற்கும் முன் ஏற்படுவது சரிதான். இக்குறையை இதுவரையும் அரசினர் கவனியாதிருந்தது பெருங்குறையே. நான் யாழ்ப்பாணத்தவர்களுக்கு அந்நியனல்ல. எனது ஊழியம் வேண்டப்படும்போதெல்லாம் எனது கடமையை இயற்ற நான் ஆயத்தம்.

மேலும் 25 சதுரமைல் விஸ்தீரணமுள்ள இத்தீவில் போதிய தெருவீதிகள் இருக்கவேண்டியது அவசியம். இப்போது பத்துமைல்களுக்கே வீதிகள் உள. இத்தீவின் மேற்குப் பக்கங்களிலும் கிழக்குப் பக்கங்களிலும் வீதிகள் இல்லை. வீதிகளின்றி இதுவரையும் இத்தீவிலிருப்போர் நடமாடக்கூடியதாயிருந்தது பெரும் நூதனமாகும். இவ்வூரில் அவசியம் அமைக்கப்படவேண்டிய வீதிகளின் திட்டமொன்று சமைத்து மாகாணத்தலைவர் மூலமாக எனக்கு அனுப்பினால் நான் ஏற்றதைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன்."

# கலம்பகம்

டாக்டர் வி. எல். காட்டியல் என்னும் இந்தியர் லண்டனைச்சேர்ந்த பின்ஸ்பரி நகர சபையின் உதவிமேயராகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கிறார். இவ்வித பதவியில் நியமனம்பெற்ற முதல் இந்தியர் இவரேயாவர்.

o o

வைத்தியசகாயம் பெறவேண்டிய அநாதைகளை உடனுக்குடனே சமீபத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்புமாறு வைத்திய-சுகாதாரப் பகுதித் தலைவர் வைத்திய உத்தியோகத்தருக்கு ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறாராம். நோயாளிகளை வைத்தியசாலைக்கு அனுப்பும் செலவை அரசினரே கொடுப்பாராம்.

o o o

இலங்கை அரசினரின் மலேரியா நிபுணரும், சமீபத்தில் இவ்வியாதியைப்பற்றி இலங்கையில் ஆராய்ச்சிசெய்தவருமாகிய கர்னல் வி. ஏ. ஜில் என்பவர், லண்டன் இலங்கைச் சங்கத்தின் ஆதரவில், றப்பர் பயிரிடுவோர் சங்க மண்டபத்தில் வருகிற 25-ந் தேதி தமது ஆராய்ச்சிகளைப்பற்றி ஒரு பிரசங்கஞ் செய்வாராம்.

o o o

அபிசீனிய அரசினர் துருப்பினரின் உபயோகத்திற்கென 80 லட்சம் யார் துணி அனுப்பும்படி, லங்காஷயருக்கு அறிவித்திருக்கின்றனராம்.

o o

பிரிட்டிஷ் பொருள்களைப் பகிஷ்காரஞ்செய்யும்படி அர்ஜண்டினவிலுள்ள 15 லட்சம் இத்தாலியர்களுக்கும் "அர்ஜண்டினசபை"யார் உத்தரவிட்டிருக்கின்றனராம்.

o o

பெக்தோட்டை எனனுமிடத்தைச் சேர்ந்த மரணமனகே எல். பி. சிங்கோ என்னும் வாலிபன் அனுமதிபெறுது ஐந்து தோட்டாக்கள் போட்ட சுழல் துப்பாக்கியை வைத்திருந்தானெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 15 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றுனும்.

o o

தெகிவலையைச்சேர்ந்த எம். ஏ. நோமிஸ் சில்வா என்பவர் தனது மோட்டார் பஸ்ஸைப் பெலங்குறைந்த டயர்களோடு உபயோகித்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 25 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o

சர்வதேசப் பெண்கள்மகாநாடு 1936ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 5-ந் தேதிவரை கல்கத்தாவில் நடைபெறுமாம்.

o o o

சில்வர்லைன் கம்பெனிக்குச் சொந்தமான "சில்வர்ஹேசல்" என்னுங் கப்பல் லுஸான் தீவுக்கப்பால் ஒரு பாறையில் மோதி இரண்டாகப் பிளந்துவிட்டதாம்.

o o o

கனடாவைச் சேர்ந்த ஆரஞ்ஜில்லாவிற்குச் சமீபமாகவுள்ள ஒரு சிறு நதியில் 47 அடி நீளமும் 16 அடி அகலமுமுள்ள பாலமொன்று ஆணிகள்கொண்டு பூட்டப்படாது மின்சாரசக்தியினுல் பொருத்தப்பெற்றிருக்கிறதாம்.

ஒரிசாவிலுள்ள பிர்மராமச்சந்திரபுரி என்னும் கிராமத்தில் 160 வயதுடைய ஒரு பெண் வசித்துவருகிருளாம்.

o o o

தென்னுபிரிக்காவைச்சேர்ந்த கேப் மாகாணத்திலுள்ள ஒரு பசு, கோழி முட்டை முதலியவற்றை விரும்பித் தின்றுவருகிறதாம்.

o o

ஐரோப்பாவிலுள்ள பெரியநதியாகிய ரைன் நதியின் குறுக்கே 31 பெரிய பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவாம்.

அமெரிக்காவில் 60,000 குருடர்கள் இருக்கிறார்களாம்.

o o

ஹங்கேரியிலுள்ள கமக்காரர் சந்தையில் பொருட்கள் விலைபடும் விகிதத்தை அறிந்து வருவதற்குப் புறாக்களை உபயோகித்து வருகின்றனராம்.

o o o

நார்பேக் என்னுமிடத்தில் 12 வயதுடைய ஒரு சிறுவன் 268 றுத்தல் நிறையுடையவனுயிருக்கிறானும். அவனது உயரம் 5 அடி 3 அங்குலமாம்.

o o o

பிரிட்டனில் புஷ்பங்கள் விற்கும் வேலையில் ஒரு லட்சம் பேர் ஈடுபட்டிருக்கின்றனர். அங்கே ஒரு வருடத்தில் ஒரு கோடியே நாற்பது லட்சம் பவுண் பெறுமதியான புஷ்பங்கள் விலைபாகின்றனவாம்.

o o o

சிலாபத்தைச்சேர்ந்த கொஸ்வாடியா என்னுந் தோட்டத்திலுள்ள ஒரு குடும்பத்தினரான நால்வரைச் சென்றமேமீ 18உ இரவு கொலைசெய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த குணசிங்க ஆராய்ச்சிகே பொடி அப்பு என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பெற்றதாம்.

o o o

பாணந்துறையில் புதிதாக ஓர் வைத்தியசாலைக்கென இரண்டு அடுக்கு மெத்தைக் கட்டிடமொன்று அமைப்பதென்றும் அதற்கென 1938ம் ஆண்டிற்குள் 325500 ரூபா செலவுசெய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

புறக்கோட்டையைச்சேர்ந்த ஆட்டுப்பட்டித்தெருவில் வசித்த இராசமணி என்னும் பெண்ணுக்கு பிளேக் நோய் காணப்பட்டதால் அவள் தொற்றுநோய் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டாளாம்.

o o o

கொழும்பு நகரில் கோடைகாலத்திலும் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்படாதிருக்கும் பொருட்டு ஓர் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

சென்ற ஞாயிற்றுக்கிழமை வெருவலையைச்சேர்ந்த பின்ஹேனு என்னுங் கிராமத்திலுள்ள எஸ். யோன்சிங்கோ என்பவர், தனது மகளின் விவாகத்திற்குச் சமுகமளிக்க மறுத்த தன்னுடைய இளைய சகோதரனைக் கத்தியாற்குத்திக் கொன்றுவிட்டாராம்.

## அரசாங்கசபையாரின் கடைசிக்கீர்த்தனம்

### விளையாட்டு விளையாட்டாகவே முடியும்

டிஸம்பர்மாதம் 7-ந் திகதியுடன் அரசாங்கசபை கலைக்கப்படுமென முன்னரே அறிவிக்கப்பட்டது. அரசாங்கசபையில சென்ற நாலரைவருடமாக அங்கத்துவம் வகித்து ஆநந்தக் கூத்தாடிய அங்கத்தவர்கள் இப்போது பிறுஸல் கொண்டாடப்போகிறார்களாம். டிஸம்பர் மாதம் 6-ம் 7-ந் திகதிகளில் அங்கத்தவர்கள் கொண்டாட்ட நாட்களாகக் கருதப்படும். சிலர் போர்வீரர்களுடன் கிறிக்கற் பந்தாட்டம் நடத்தப்போகிறார். சிலர் ரெனிஸ் அடிக்கப்போகின்றார். இவைமுடிந்தபின் விருந்துக் கொண்டாட்டம். இத்துடன் அரசாங்கசபையில் முதலாவது பருவம் முடிவடையும், அங்கத்தவர்களின் நடமாட்டமும் பரிமளிப்புங் குறைந்துவிடும்.

தேசத்தில் அநேகர் ஏழைகளாய் நேரத்துக்கு உணவின்றி வருந்த அரசாங்கசபையினர் விளையாடுவதும் விருந்துகொண்டாடுவதும் முறையல்லவென ஒரு அங்கத்தவர் கூறினர். இதைக்கேட்டவுடன் யாவரும் சத்தமிட்டு அவரை இருக்கச்செய்தனர். கிறிக்கெட் பந்தாட்டத்துக்குத் தொறிற்கட்சித் தலைவர் திரு. A. E. குணசிங்கா அவர்கள் தலைவராகத் தெரியப்பட்டிருக்கிறார்.

விழுந்து உழக்கி யனுபவத்தை அனுபவித்தஅங்கத்தவர்க்கு ஆநந்தக் களிப்புவேணுந்தான். என்செய்வது?

## தபாற்கந்தோர் தலைவி ஏமாற்றப்பட்டமை

சென்ற 13-ம்உ காலியிலிருந்து 20 மைலுக்கப்பாலுள்ள தெலியவில்லா என்னுங் கிராமத்திலுள்ள தபாற்கந்தோரில் ஒரு வெள்ளையுடுப்பணிந்த இளம்வயது வாலிபர் ஒருவர் ஒரு கையில் பச்சைப் பென்சிலும் மற்றக்கையில் ஒரு கட்டுக் கடதாசியுடனும் சென்று தாம்கணக்குப்பரிசோதனைத் தலைவர் எனப் பாசாங்குகள் செய்து புத்தகங்களையும் பணத்தையும் பரிசோதிப்பதற்காகக் கொண்டுவருமாறு கேட்டனர். தபாற்கந்தோர் தலைவி புத்தகங்களையும் சேர்ந்திருந்த 200 ரூபாயையும் அவரிடம் கொடுத்தனர். கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கையில் தலைவியைத் தண்ணீர் குடிக்கத் தருமாறு அவர் கேட்டனர். உடனே அப்பெண் தண்ணீர் கொண்டுவருமாறு உட்சென்று தண்ணீருக்குப் பதிலாகத் தேனீர் பாகம்பண்ணிக்கொண்டு வெளியேவந்து பார்த்தனர். இதற்கிடையில் அப் போலிக்கணக்குப் பரிசோதகர் பணத்தை எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டனராம்.

தலைவி வேறு ஆட்களின் உதவியுடன் விசாரணை செய்தவிடத்து ஒரு வெள்ளை உடை அணிந்த வாலிபன் தபாற்கந்தோரிலிருந்து புறப்பட்டு மாத்துறைப்பக்கமாக பேபிஒஸ்றின் காறில் மிக வேகமாகச் சென்றதைத் தாம் கண்டதாகக் கூறினராம்.

பொலிசாருக்கு இதுவிஷயம் அறிவிக்கப்பட்டிருக்கின்றதாம். கடிதங்கந்தோர்ப் பகுதியும் இதனைப்பற்றி விசாரணை செய்து வருகின்றதென அறிகின்றேம்.

## ஆடு மாடுகட்கு ஏற்ற ஓர் உணவு

ஆடு மாடு முதலியவற்றின் உணவை அதிகரிப்பிக்கும் நோக்கமாகக் கமத்தொழிற் பகுதியார் குதிரைப்புல் (Guinea grass) நாற்றுக்களின் விலையைக் குறைத்து 100 நாற்று பதினைந்து சதமாக்கி யுள்ளார்.

இவ்வினைப்புல்லைப் பாழ்நிலங்களில் நட்டு விருத்திசெய்து ஆடு மாடு குதிரை முதலியவற்றைப் போஷிக்கத்தக்கதாயுள்ள இந்த அருந்தருணத்தை இழந்து விடாதீர்கள். நாற்றுக்களை யாழ்ப்பாணம் பரிசோதனைத் தோட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் இது இலகுவாக உற்பத்தி செய்யக்கூடியதாகும் 2 × 3 இடைவெளிக்கொன்றுக ஒரு குழியில 3, 4 நாற்றுக்கள் நடலாம் பசளை எவ்வளவிற்கு அதிகரிக்குமோ அவ்வளவிற்கு வளர்ச்சியும் பயனும் அதிகரிக்கும். கமக்காரர் தோட்டங்களிலுள்ள பெருவாய்க்கால் ஓரங்களில் இப்புல்லை நாட்டுதல் இலகுவாக விருத்தி செய்தற்கு ஏதுவாகும். அதிகம் நெருக்கியில்லாத பனந்தோட்டங்களிலும் இது நன்றாக வளரும்.

## மாடுகேளின் பிரதி விருத்திக்கு ஒழுங்குகள்.

யாழ்ப்பாணத்திலுள்ள நாட்டுப் பசுக்கள் மூலமாக நல்லினமாடுகளை உற்பத்தியாக்குவதற்கு அவற்றோடு அந்நிய தேசத்து நல்லினக்காளைகளை சேரவிடுதல் உத்தமமாகும். யாழ்ப்பாணப் பரிசோதனைத் தோட்டத்தில் இரு அந்நியநாட்டு நல்ல இனக்காளைகளுண்டு ஒன்று பால் அதிகம் தரும் இனமாகிய யேசி (Jersey) இனத்தைச் சேர்ந்ததாகும் மற்றையது இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மங்கமரியாகும்.

இந்திய மங்கமரியின் சேர்க்கை ஒன்றுக்கு 3. ரூபா
யேசியின் .... 5. ரூபா

இன்னும் தேவையான விபரங்களை பரிசோதனைத் தோட்ட அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிறன்மனைவியை யிச்சிக்குந் தன்மை பெரியோரிடத் தில்லை.

## கடிதம்.

### எங்கள் தேசியக் கல்வி முறை

"ஈழகேசரி"ப் பத்திராதிப ரவர்கட்கு:

ஐயா!

எங்கள் நாட்டுக்கல்வி தேசீய முறையில் கற்பித்தற்பொருட்டு அதை ஏற்ற முறையில் வகுத்துச் சீர்ப்படுத்தக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர்கள் இதுவரையும் கவனியாது விடப்பட்டனர். டொனமூர் அரசியற்றிட்ட அரசியலில் யாவர்க்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கின்றமையின் நாங்கள் கலவி முறையில விரும்பிய மாற்றங்களை இலகுவிற் கொண்டுவரலாம். இன்னொரு துக்கமான காரியமொன்றுண்டு. அதாவது, ஆங்கிலங் கற்று மகிமையடைந்தோர் தேசபாஷை விருத்திக்கு மாறாயிருக்கின்றனரேயன்றிச் சார்பாக இருக்கக்காணோம். சமீபத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்புக் கொண்டாட்டத்தின் தலைமையை வகித்த குலரத்தினு என்பவரும் பின்னர் கூறிய வகுப்பினைச் சேர்ந்தவர். ஆகையால் தேசீயக்கல்விக்கு மற்றையோர் முன்வந்து உழைப்பாரென எண்ணுவதெல்லாம் வீணாகும். ஆசிரியர்களதும் பெற்றோர்களதும பார்வைக்குப் பின்வருந் திட்டத்தைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்:—

(1) இரண்டுவிதமான தேசபாஷை வித்தியாசாலைகள் இருக்கலாம். ஒன்றில் நடுத்தரக்கல்வி கற்பிக்கபபடவேணடும். மற்றதில் உயர்தரக்கல்வி கற்பிக்கப்படவேண்டும்.

(2) சாதாரண நடுத்தரக்கல்வி கற்பிக்கும் வித்தியாசாலைகளில் ஏழாந்தரம் முடியக் கற்பிக்கப்படவேண்டும். இவ்வித்தியாசாலைகளில் நான்காம்வகுப்பிலிருந்து ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதம் கறபிக்கப்படவேண்டும.

(3) உயர்தரக்கல்வி கற்பிக்கப்படும் வித்தியாசாலைகளில் ஏழாந்தரத்துக்கு மேல் மறறைய வகுப்புகட்குரிய கல்வி கறபிக்கப்படவேண்டும. அறிவுக்குரிய உயர்ந்த கல்வியிடம் பெறவேண்டும. ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதம் கட்டாயபாடமாக வேண்டும். பல்வேறு சாஸ்திர முறைகள் தேசபாஷையில் காலந்தாழ்க்காது மொழிபெயர்த்து அச்சிடப்படவேண்டும்.

(4) தமிழ் அல்லது சிங்களத்தில் ஏழாம்வகுப்பிற் பரீட்சை கொடுத்துச் சித்தியெய்தாத மாணவரை ஆங்கில வித்தியாசாலையில் ஒருபோதுஞ் சேர்க்கப்படாது. ஆங்கில வித்தியாசாலைகள் பட்டங் கொடுக்கும் வகுப்புவரையும் கலவி கற்பிக்கபபடவேண்டும். சில ஆங்கில வித்தியாசாலைகள் போதுமானவை. ஆனல உயர்ந்த அந்தஸ்துள்ளயுடையதாக இருக்கவேண்டும. ஆரம்பத்தில் ஆங்கில வித்தியாசாலைகளில் தேசபாஷைமூலமாகவும், பின் ஆங்கிலபாஷைமூலமாகவும் கல்வி கற்பிக்கபபடவேண்டும. ஆங்கில வித்தியாசாலையில் 7 வருடத்துக்கும் பததுவருடத்துக்கு மிடையில் கல்வி கற்கலாம. முதல் இரண்டு வருடங்களில் ஆங்கிலததை விளங்கக்கூடியதாகக் கற்கவேணடும. ஆங்கில விததியாசாலைகளில் தமிழ் அல்லது சிங்களம் கட்டாய பாடமாகவேண்டும.

(5) தேசபாஷையில் உயர்ந்த கல்வி கற்பிககப்படும் வித்தியாசாலை அல்லது ஆங்கில வித்தியாசாலையில் கலவி கற்காதவர்கட்கு ஆறுமாதங்கட்குத் தொழில்முறைக் கலவி கறறுக் கொடுக்கப்படவேண்டும். கைத்தொழில கைததொழில் முறைகளும் பயிற்றலாம.

(6) உயர்தரக்கல்வி கற்றற்கும் உபகாரப் பணம பெறுதற்கும், உததியோகம் பெறுதற்குப் பரீட்சை கொடுத்தற்கும் அரசினர் தறபோதிருக்கும் வயதெல்லையை 18 லிருந்து 23 வரையும உயர்த்தவேண்டும்

(7) உயர்தர தேசபாஷா வித்தியாசாலைகளில் அல்லது ஆங்கில வித்தியாசாலைகளில் கல்வி கற்ற மாணுக்கருக்கும், உத்தியோகத்துக்கும் ஆட்களைத் தெரியும் சோதனைகளை எடுக்க உத்தரவு அளிக்கப்படவேண்டும். இப்படியிருக்காவிடின் தமிழ்ப்பாஷையை ஆவலோடு ஒருவரும் கற்க மாட்டார்.

(8) ஈற்றில் எல்லா ஆங்கில வித்தியாசாலைகளையும் நிற்பாட்டி அவ்வித்தியாசாலைகள் இருந்த இடத்துக்குத் தேசபாஷை வித்தியாசாலைகள் ஏறபடுவதே நோக்காகவேண்டும். இவ்விததியாசாலைகள் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலவித்தியாசாலை மாதிரியாகவும், ஜெர்மனியிலுள்ள சர்வ வித்தியாசாலைகளும்போல இருக்கவேண்டும். இந்நிலைமையைச் சீரடையச்செய்வது எங்கள் கடன்.

(9) தேசபாஷை கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்கள் நிலைமையைச் சீர்திருத்தமடையச்செய்வது அவர்கள் கடன். பெற்றோரும் ஆசிரியரும் சேர்ந்து கிளர்ச்சிசெய்தால் தேசீயக்கல்வி கட்டாயம் படிப்பிக்கப்படுவதாகும். நோக்கம் யாதுமின்றித் தமிழ் வித்தியாசாலையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. இத்திட்டம் சில நன்மையையாவது கூட்டிவையாதா?

யாழ்ப்பாணம், 4-11-35. } இங்ஙனம், C. S. இராசரத்தினம்.

## பாலத்தைக் குறித்துப் பிரச்சினை

### கொழும்பு யாழ்ப்பாண வாலிபரின் அபிப்பிராயம்

#### வடமாகாண அங்கத்தவரின் ஏற்காதசெயல்

கொழும்பு — யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற மாதம் 26-ந் திகதி கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது யாழ்ப்பாணத்துடன் பாலத்தால் அவசியம் இணைக்கப்படவேண்டியது புங்குடுதீவா? பூநகரியா? என்பது பற்றி விவாதிக்கபபட்டது.

வடமாகாணப் பிரதிநிதிகள் சமீபத்தில் அரசாங்கசபையில், பாலங் கட்டும் விஷயத்தைக்குறித்து வெளியிட்ட அபிப்பிராயங்கள் ஆட்சேபிக்கப்பட்டன. இவர்கள் மந்திரிமார், அபிப்பிராயத்தை (வேலணைக்கும் புங்குடுதீவுக்குமிடையில் பாலம் கட்டவேண்டுமென) எதிர்த்து நின்றதை யாவரும் கண்டித்தனர். கூட்டத்தில் சமுகமளித்தோர் தொகை 600. அரசாங்கசபை அங்கத்தவர்களாகும் ஸ்ரீமதி நேசம் சரவணமுத்து, திரு. G. G. பொன்னம்பலம், திரு. A. மகாதேவா, திரு. நெவின்ஸ் செல்வத்துரை ஆகியவர்களும், வீரகேசரிப் பத்திராதிபராகிய திரு. இராமசுவாமி ஐயங்காரும் மேடையில் உட்கார்ந்தனர். திரு S. T. கனகசபையவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தவரையொட்டிய் வேறு அநேக விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. இவைகள் யாவற்றிலும் புங்குடுதீவுக்கும் வேலணைக்குமிடையில் அமைக்கப்படவேண்டிய பாலத்தைக்குறித்து எழுந்த விவாதம் மிகவும் உக்கிரமாக நடைபெற்றது.

புங்குடுதீவு, நயினதீவு, நெடுந்தீவு என்னும் மூன்றுதீவுகளிலும் வசிக்கும் 25000 சனங்கட்கு மிக அவசியமாகும் பாலம் கட்டவேண்டுமென்பதற்கு மாருக, பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் என்னும் மூன்றுபகுதிப் பிரதிநிதிகள்

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.)




கதைப்பகுதி.

# மந்திரவாதியின் மகள்

"துகிலிகை."

[பதினெட்டாம் நூற்றூண்டின் இடைப்பகுதியைக் காலமாகக் கொண்டு இக்கதை எழுதப்பட்டது.]

## III

குமாரசாமி முதலியார் போதிய செல்வாக்குடையவர் என்பதும் மந்திரநூற் பயிற்சியில் இணையற்றவர் என்பதும் மாந்தீவில் தன்னோடொத்தவர்கள் இலர் என்னும் செருக்குடையர் என்பதும் நாராயணன் நன்கு அறிவான். தனக்கு மருக்கொழுந்தைத் தருவதற்கு அவர் எக்காரணங் கொண்டாயினும் ஒருப்படார் என்பதும் அறிந்ததே. இனிச்செய்யவேண்டிய யாவற்றையும் தன் தாய் தந்தையருடன் யோசித்தே செய்தல் வேண்டுமென அவன் எண்ணினான்.

அவன் தந்தையார் குருநாதபிள்ளை என்பார் நிலம்புலம் அதிகம் உடையவரல்லர். அவருக்கு அடிமை குடிமை கிடையா. அவர் தயவால் அங்கு வாழ்பவர்களும் இலர். அங்குள்ளோர் முக்கியமானதெனக் கருதிப் பயிலும் மந்திரவித்தையும் அவரறியார். அவர் தனக்குள்ள சிறு நிலத்திற் பயிர் செய்து வீண் ஆரவாரமின்றி முறையாக வாணாளை யோட்டுபவர். அவர் புதல்வன் நாராயணனும் பெரும்பாலு மவரியல்பினன். இவன் அன்பூற்றெடுக்கும் உள்ளத்தான். அந்நாள் மக்களுள் இவன் ஒரு தனிமகன். இச்சிறப்புகள் இயற்கையிலேயே இவனுக்கு அமைந்திராவிடில் செல்வந்தர் குமாரரெல்லாம் வாயூறநின்ற மருக்கொழுந்து இவனைக் காதலிக்கக்காரணந்தான் என்ன? நல்லாரை நல்லாரன்றோ உவப்பர்.

நாராயணன் இல்லம்போந்ததும் தன் அன்னையிடம் உற்றதெல்லாம் உரைத்தனன். அவ் அம்மையார் தன் நாயகனிடம் கூறினாள். குருநாதபிள்ளை உச்சியிற் கைவைத்து, "ஐயோ! என்குடி பாழ்பட்டதே! ஆ! என் மகனே! நீ துஞ்சுபுலி இடறிய சிதடன் ஆயினையே! இனி யாம் உய்வதற்கு வழியுமுண்டோ! என்னருமைக் குமாரனே! அவனியல்பு நீ கேட்டறியாததா? ஒரு மணவிழாவில் தன்னெதிரே தலைப்பாகை யணிந்து நின்றமைக்காகச் சாத்தூர்க் கண்ணன் என்பானை மூன்றுநாளில் இந்நிலவுலகினின்றும் குடியெழுப்பிய குமாரசாமி முதலியாரன்றோ! தன்னினும் பார்க்க அதிக நெல் விளைவித்துத் தன் புகழை மழுக்கினான் எனப் பேரம்பலம் என்பானையும் அவர் புதல்வர்களையும் பித்தராகச்செய்து பிச்சைக்கனுப்பிய பெருமை இவரைச் சேர்ந்ததன்றோ! நெருப்பெனத் தெரிந்திருந்தும் அதனைத் தொடுவாருளரோ! அவர் இதுவரையில் என செய்யத் துவங்கினரோ? யாரறிவார்?" எனக் கண்ணீர்விட் டாற்றினார்.

"என் அருமைத்தந்தாய்! யான் செய்த தவறுதான் என்ன? ஒரு கட்டழகி என்னைக் காதலிக்கின்றாள்; யானும் அவளைக் காதலிக்கின்றேன். இஃது ஒரு குற்றமா? இருவர் உணர்ச்சியும் ஒத்தமையால் நிகழ்ந்த செய்திக்கு யாா என்செய்யலாம். ஒரு பெண்ணை வலு கட்டாயப்படுத்தினன்றோ யான் குற்றவாளி?" என்றான் நாராயணன்.

"நீ குற்றவாளியல்லன் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். குமாரசாமிமுதலியார் ஒப்புக்கொள்வாரா? தன் குலதெய்வத்துக்கு உன்னை உடனே பலியாக்குவாரென்பது திண்ணம். நீ இறந்தொழிவதாயின் யாமும் உன்பிறகே போவதன்றி இங்கிருந்து சீரழிவோமெனக் கருதாதே. நாமெல்லோரும் உய்யவேண்டுமானால் உடனே சென்று அப்பெண்ணரசியைக்கண்டு அவளை மணப்பதினால் உனக்குண்டாகுந் துன்பத்தைப் பற்றிக் கூறு. உயிர்ப்பிச்சையளிக்குமாறு மன்றாடு. 'சிறியேனாகிய என்னை ஒருபொருளென மதித்ததற்காக ஆயிரமுறை தொழுகின்றேன்' எனச் சொல்லு. பின் உங்கள் நிகழ்ச்சியை முதலியாரவர்கட்குக் கூறாதிருக்குமாறு கேள். அவள் அதற்கு உடம்படுவாளேல் சத்தியம் பெற்றுவருதல் நல்லது" என்றார் குருநாதபிள்ளை.

"ஒருத்தி என்னைக் காதலிக்கின்றாள். அவள் அரசியானாலென்? அடிமையானாலென்? யானும் உடம்படுகின்றேன். பின்னர்த் துன்பங்களின் தோற்றங்கண்டு அம்மங்கையிடம்சென்று 'யான் உன்மீது வைத்த காதலைக் கழற்றிக்கொள்ள விரும்புகின்றேன்; நீயும் இங்ஙனமே செய்துகொள்வாயாக' எனக் கூறுதல் எவ்வளவு இழிந்தசெயல்—ஆண்மையற்றசெயல். சதையைத் துண்டு துண்டாக்கினும் என் எண்ணம் சாயுமா? அம்மங்கைநல்லாள் காட்டும்வழி எதுவோ அதுவே யான் செல்லும்வழி. அவ்வழி கரடு முரடான கற்கள் நிறைந்த கானகவழியாயினும் சரி, அரசகுமாரர்வாழ் அரண்மனைக்குச்செல்லும் மலர்வீதியாயினுஞ்சரி, என்னைப் பெற்று அன்பொடு வளர்த்த பெருந்தகையீர்! இச்செய்தியில் உங்கள் சொற் கடவாது நடக்க முடியாது. மன்னிக்கவேண்டும், மன்னிக்கவேண்டும்" என்றான் நாராயணன்.

"ஆ! மகனே! அப்பெண்ணை மணந்துகொள்வதென்பது மரணத்தையே மணந்துகொள்வதாகும். அப்புல்லிய கொலைத்தொழிலாளன் புதல்வியை மறந்து உன்னை நம்பியிருக்கும் உன் ஏழைப் பெற்றோரைக் காப்பாற்று. உங்களிருவரின் உள்ளப்பாங்கை அறிந்தவன்றே அம்முதலி உன்னைக் கொன்றுவிட்டு அப்பெண்ணை இன்னொருவனுக்கு உரிமையாக்கி விடுவான். இதுதான் நிகழும் செய்தி. வேறொன்றுமில்லை. செல்வம் செல்வாக்குப் படைத்த குமாரசாமிமுதலியாரின் மருகனாகி இன்ப வாழ்க்கை நடத்தலாம் எனக் கொஞ்சமும் எண்ணாதே' என்றார் குருநாதபிள்ளை.

"யான் என்செய்வேன்! காதல் செய்தபெண்ணை யான் கைவிடேன்" என்றான் நாராயணன்.

"என் உயிரே! தந்தை சொல்வதைத் தட்டாதே. எங்களைத் துன்பக் காட்டிடைத் தனித் தலையவிட்டுப் போகக்கூடிய வழியை மேற்கொள்ளாதே எனக்கூறி ஆரத்தழுவி யழுதாள் அன்னை. நாராயணனும் மொகுமொகென இருவிழிநீர் முத்திறைப்பப் புலம்பினான். பின்னர் அவன் தாயாரின் நாடியைத் தைவந்து, "அம்மா! யான் வீரத்துடன் இறந்தால் உங்கட்கு அளியாப்புகழுண்டு. அப்போது நீங்கள் துன்புற்றாலும் பெருமையுண்டு. நான் உயிருடன் இருக்கக் கள்ளமற்ற பெண்ணொருத்தி கலங்கலாமா? இஃது உங்கட்கும் எனக்கும் தீராவசையையன்றோ? இன்னும், ஒருவனும் ஒருத்தியும் தன்னிச்சைக்கு மணஞ் செய்துகொண்டால் யாருக்கென்ன? என்னைக் கொலைக்குற்றவாளியாகக்காண அவருக்கென்ன அதிகாரம் இருக்கின்றது? மாட்சிமிக்க நம் ஒல்லாந்த அரசினர்க்கு யானும் அவரும் ஒருதன்மையரே. அரசினரின் பாதுகாப்பை யான் பெற்றுக்கொள்ளின் என்னுயிரை நீக்க முனையும் முதலியார் முதலாவது தன்னுயிரை நீக்கவேண்டிவருமே" என்றான்.

"மகனே! நீயறியாது கூறுகின்றாய்? அம்முதலி கத்திகொண்டும் தடிகொண்டுமா மாற்றலரை யடக்குகின்றான். அவனுக்கு நிகரான மந்திரக்காரர் யாண்டேனும் யாரேனும் உளரோ? யாவரும் ஊனும் கள்ளும் படைத்துப் பலநாள்முயன்று அழைக்கவும் வாராத பேய்கள் வெற்றுரை வழங்கினும் அவன் முன்னிலையில் தெண்டனிட்டு நிற்குமே. மாட்சிமிக்க ஒல்லாந்த அரசு எனக் கூறுகின்றனை மகனே! வேற்றரசு வந்த அன்றுதான் நம்போல்வார் இன்னலுற்று வாடத்துவங்கினர் என்பதனை நீயறியாததேன்? இன்று நாம் நம்முன்னோரின் நல்ல கொள்கைகளைக்கூடப் பின்பற்றி நடக்க முடியாதவர்களாயிருக்கின்றோம். இறந்தவர் உடம்பைச் சுட்டுச் சாம்பராக்குதல் நம் ஒழுக்க முறையாகவிருப்பவும் ஒல்லாந்தர்கள் நிலத்துட் புதைக்குமாறு கட்டளையிடுகின்றனர், இவ்வரசு ஒழிந்து நம் அரசு நிலைபெறுமாயின் பில்லி சூனியத்தால் ஏழைகளை நசுக்கும் குமாரசுவாமி முதலியார் போன்றவர்கட்கு இவ்வளவு செருக்கு ஏற்படுமா? இன்றைக்கு நாம் அரசினரிடம்சென்று என்னைக்கொல்ல அவர் பேயேவினர், இவர் பேயேவினர் என முறையிடுவோமாயின் அவர்கள் என்செய்வார்கள்? உடனே 'அஞ்ஞானிகள்' எனப் பகிடிபண்ணியன்றோ அனுப்புவர்? அந்நிய அரசு நிலைத்தவன்றே யாம் பேய்காரர்க்கு அஞ்சி வாழவேண்டியவர்களானோம். அந்நிய அரசு பேயரசு. ஆகையால் குமாரசாமி முதலியாரிடமிருந்து நாம் எவ்வழியானும் தப்பித்துக்கொள்ள முடியாது. உன்னை மேலுலகுக்கு வழிவிட வந்துநிற்கும் மங்கையை இன்றே மறந்துவிடு" என்றாள் அன்னை.

தன் தாய் தந்தையர் துன்புறுவதைக்கண்ட நாராயணன் அவர்களை வருத்த மனமிலனாய், "சரி உங்கள் சொற் கடவாது நிற்கின்றேன் வருந்தாதீர்கள்" என்றான். குருநாதபிள்ளைக்கும் மனைவிக்கும் தங்கள் இறந்த புதல்வன் பிறந்ததுபோலாயிற்று.

(தொடரும்)

## விநோதம்.

ஓர் ஜட்ஜி: (வாதியை விசாரிக்கும்போது) "உன்னை அவன் அடித்ததற்குச் சாட்சி உண்டா?"

வாதி: "சண்டைநடக்கும் நேரம் எனக்குத் தெரியாமற்போய்விட்டது சார். தெரிந்திருந்தால் முன்னரே ஓர் சாட்சியைத் தேடிவைத்திருப்பேன்."

* * *

மாஜிஸ்டிரேட்: (ஜலபாதைக்குப் போனவனைப் பார்த்து) "நீ ஏன் தெருவை அசுசிப்படுத்தினாய்?"

குற்றவாளி: "இன்னும் ஒரு ரூபாய் சேர்த்துக் கட்டிவிடுகிறேன். நான் வெளியிற்போனவுடன் மறுபடியும் ஜலபாதைக்கு வந்துவிடும்."

* * *

புருஷன்: அடி வெட்கமற்றவளே! உன்னை உதைக்கிறேன் பார் என்று தன் வலதுகாலைத் தூக்கினான்.

மனைவி: தாங்கள் உதைப்பது வாஸ்தவம். தயவுசெய்து இரண்டுகாலையுந் தூக்கி உதைத்தால் மிகவுஞ் சந்தோஷம்.

* * *

ஒருவன் குடித்துவிட்டுக் கண்டோர் இகழ உவாந்தி எடுத்துக்கொண்டு பிணம்போற் கிடக்கிறான். பலரும் அவனைப் பார்த்து நகைக்கின்றனர்—இகழ்கின்றனர்—இரங்குகின்றனர்.

ஒரு அசடன்: "ஆஹா? இது பேஷான கள்! எந்தப் புண்ணியவான் கடைக்கள்ளோ" என்று நாவில் நீர் சொட்ட நோக்கினான். அவனுக்குத் தெளிவு உண்டாகும்வரை காத்திருந்தான். தெளிந்தவுடன் இடத்தைக் கேட்டுக்கொண்டுபோய் வயிறாரக் குடித்து அவன் கதியை அடைந்தான்.

* * *

கிழவனார்: "அடே பேரா! அந்தப் பள்ளிக்கூடப் பையன்கள் என்னமோ ஒரு கயிற்றைப் பிடித்து இழுக்கிறான்களே, அதென்ன?"

பையன்: அது அப்பா ஓர் விளையாட்டு, "டக்-ஆவ்-வார்" என்று சொல்லுவார்கள்.

கிழவனார்: சுத்த பைத்தியகாரன்கள். ஒரு கத்தி சொல்வது கேளாதா? இதற்கு இவ்வளவு கஷ்டமேன்?

க. சே. சோமசுந்தரஜயர்

திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)
அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000
ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.
வேண்டிய இடங்களில்
கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.
இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
வ. சோமசுந்தரம், காரியாதிகாரி
(30) 18-11-34—11-35

பிறன் மனைவியை யிச்சிக்கும் மூடரைப்போல்பவ ரில்லை.

# சிவனடியார் பெருமை.

(ஆசிரியர், திரு. ஆ. காசிப்பிள்ளை அவர்கள், மறவன்புலோ.)

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார், எம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை, உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற், புணராமை கேளாம் புறம்"

அன்பேயுருவா யமர்ந்த அறிவின் மிக்கீர்! சிவனடியார் பெருமையை எடுத்துக் கூறுதல் சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய எம்போன்றவர்க் கியலாதாயினும்,

"அருளினீர் மைத்திருத் தொண்டறிவரும், தெருளினீரிது செப்புதற் காமெனில், வெருளின் மெய்ம்மொழி வானிழல்கூறிய, பொருளினுது மெனப்புகல் வா மன்றே"

என்னும் பெரியோர் வாக்கைக் கடைப்பிடித்து எனது பேரவா பெருகியெழுதலின் எங்கும் வியாபியாயுள்ள இறைவன் என் உள்ளத்தே நின்று உணர்த்தச் சொல்கின்றேன்.

கடவுளாற் படைக்கப்பட்ட பல்வகைப் பிறவிகளிற் சிறந்ததான இம் மானிட தேகமெடுத்ததின் நோக்கம் பேரின்பவீடடைவதேயாம். அதனையடையப் பல வழிக ளிருப்பினும் அவற்றுள் பக்திநெறியே சிறந்தது. அதுவே பகவானைப் பிடிக்கும் வலையாகுமென்பது "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்னு மடியான் அறியக்கிடக்கின்றது.

இவ்வாறாய பக்தி மார்க்கத்தை அடைந்தோர் பெருமையை உலகத்தில் பெரியது எதுவெனக் கேட்ட குமாரக்கடவுளுக்கு ஒளவைமூதாட்டி கூறியபின் கூற்றானறியலாம்.

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவன மோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகட லோகுறு முனிகையி லடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும்பெரிதே."

இன்னும் சம்பந்தசுவாமிகளும் திருமணப் பதிகத்து,

"நல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்தில்
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்
நல்லூர்ப பெருமணம் மேய நம்பனே." [டர்

எனக் கூறிய கூற்றானும் சிவனடியார் பெருமை யாவற்றினும் பெரிதென்பது அங்கை நெல்லிக் கனியாமன்றோ. மேலும் இக்கருத்துப்பற்றியே சிவனடியார் சரிதங்களைக் கூறுந் திருமுறைக்குப் பெரியபுராணமெனப் பெயரிட்டிருக்கின்றனர்போலும்.

அடியார்களைச் சாதி குலம் நோக்காது அவனாகவே பாவித்து வழிபட்டவரின் சித்தியெய்தலாம் என்பதனை,

"சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே,"

எனத் திருமூலரும்,

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

எனத் தாயுமானசுவாமிகளும் கூறியுள்ளார்கள்.

சிவனடியார்களிற் சிறந்த அறுபான் மும்மை நாயன்மார்களில் சிலர் அடியார்களி னின்னருள்பெற்றே அரன் திருவடிநீழலை அடைந்தனர் என்பது அந்நாயன்மார்களின் சரித்திரத்தை உற்றுநோக்குவோர்க்குப் புலனாகும். காய் கதிர்க் கதிரவன் அகிலமெங்கும் பிரகாசிப்பினும் காந்தக் கல்லினிடம் மிகுந்து மிளிர்வதுபோன்று கடவுள் எல்லோ ரிருதயத்தினுமிருந்து வாழ்தல் உண்மையேயாயினும் அன்பரகத்தே அன்புமயமாக உகப்பிற்கேற்ற இடமாகக்கொண்டிருக்கின்றார் என்பதை நம் சிவஞானச் செல்வராகிய தாயுமானசுவாமிகளும்,

"அண்டமுடி தன்னிலோ பகிரண்ட!மதனி
அலரிமண்டல நடுவிலோ [லோ
அனனடுவிலோ வமிர்த மதிநடுவி லோவன்
அகமுருவி மலர்கவித் [பர்
தெண்டமிடவருமூர்த்திநிலையிலோதிக்குத்
திகந்தத்திலோ வெளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ
கண்டபலபொருளிலோகாணுதநிலையெனக்
கண்டு நியமதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னி
கருவிகா ணங்களோய்ந்த [லோ
தொண்டர்க ளிடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற் குளவுபுகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே."

என, பக்தனுக் கனுக்கிரககாரணமாக அவசரபேதங்களாக எழுந்தருளும் இடங்களைக்கூறி முடிவில் இறைவனுக் குகந்தவிடம் எதுவெனபதையும் கூறியுள்ளார். இன்னு மடியார்கள் ஏதேனும் பிழையியற்றிப் பிறவித்துன்பத்துக்குள்ளாகாமல் காக்குமாறு அவர்களைத தண்டித்து நல்வழிப்படுத்தியிருக்கிறார் என்பது. சுந்தரர் சங்கிலியாரிடதனுச் செல்வதில்லை என்று நம் பரமன் முன்னிலையில் சத்தியம் செய்து கொடுத்து அதனினின்றுந் தவறியபொழுது கண்பார்வை நீங்கியமை போதிய சான்றாயமைகின்றது.

இன்னு மடியார் நம் பரமனுக்கு யாதாயினுந் தீங்கிழைத்து அவர் சன்னிதானத்திலநின்று கண்ணீர் சொரிவாராயின் மன்னிப்பும் அளவிலா இன்பமும் அடைவார் என்பது இராவணன் கயிலாயம் பெயர்த்தபொழுது எம்பெருமான் விரலா லழுத்தச் சிரமும் தேகமும் மலையிடைப்பட்டு வருந்தியபொழுது அவன் யாழ் வாசித்துச் சந்தோஷிக்கச்செய்து வாழுமாயுளும் பெற்றமையே சான்று.

இன்னும் நமது அறிவாளி அந்தணன தமமடியார்க்கெல்லாந் துன்பம் வந்துழி தாமேமுன்னின்று துன்பமொழிப்பன் என்பது. சுவிஞனுக்காக நளளிருளில் தூதுசென்றதாலும், மாணிக்கவாசகருககாக நரியைப் பரியாக்கியதாலும், பிரம்படிபட்டதாலும், வந்திக்கு மண்சுமந்ததாலு மறியக்கிடக்கின்றது. திருத்தொண்டத் தொகையுள் ஆங்காங்கு காணப்படும் "அடியார்க்கடியவன்" என்னுஞ்சொற்றொடரானுந் தொண்டர்தம் பெருமை யெத்தகையதென்பது சிந்தையு மனமும் செல்லா நிலைமைக்கண் அறியக்கிடக்கின்றது. ஆகவேநாமெல்லோருஞ் சிவனடியாரைப் பரமனெனவே மதித்துப்பணிசெய்வோமாயின் பேரின்ப வீடடைவோமென்பது மேற்கூறியவிஷயங்களான் கூறாதேயமையும்.

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 2, காட்சி 1.

இடம்—காமியவனம்

(பஞ்சபாண்டவரும் துரோபதியும் இருக்கின்றனர். வேதவியாசர் வருகின்றார்.)

வேத. வி:— (தமக்குள்) ஆ! கேவலம், மின்னலைப்போற் றோன்றி மறைகின்ற இப் புன்குரம்பையாகிய உடலத்தை உண்மையென்றெண்ணி எத்தனை கோடி மாந்தர் மதியிழந்திருக்கின்றனர். கட்புலனுக்கு மெய்யெனத் தோன்றி இன்பத்தைப் பயக்கும் இம்மாயையின் காட்சிமுற்றும் உள்ளவாறு பண்டமற்று ஒழியுமன்றோ! அண்ட வடிவினதாய இம்மகிதலமும், அதன்கண் அமைந்துள சராசரப் பொருள்கள் யாவும் சூனியமாந் தன்மையன என்பதை உணர்வாரில்லை. அறிவுக் கண்கொண்டுநோக்குமிடத்து இப்பொழுதே உண்மையன்றென விளங்கும். கனவினுலகம் எந்த முதற்பொருளாலாயதோ, அப்பொருளாலேயே எமது உடலமும் அமைந்துள்ளது. பானைக்கும் மண்ணுக்கும் யாது சம்பந்தமோ, அத்தகைய சம்பந்தமே நமது தேகத்திற்கும் மாயைக்குமுண்டு. நமது ஆயுளோ தூக்கமெனும் ஓர் வரம்பையெட்டி முடிவுறும் பெற்றியது. இது இவ்வாறாக, மக்கள் நிலையில் பொருள்களை நிலையுளவென்று மதித்து வாணாளை வீணாக்குகின்றனர். நிற்க, (ஐவரையும் பெண்ணையும் கண்டு) அதோ ஐந்து அரசிளங்குமாரும் ஓர் அரசிளங்குமரியும் இருக்கின்றனர். பஞ்சபாண்டவரும் துரோபதியும் போற் றோற்றுகின்றனர். (அணித்தாகச்சென்று) ஆம், அவர்கடான். ஏ பாண்டுபுத்திரரே! ஏ யாகசேனன் பெறு வேள்வியிற்றையலே! நீவிர் இந்திரபுரத்தை நீத்து இந்தக் காமியவனத்துக்கு எதற்காக வந்தீர்கள்? இஞ்சிதின்ற குரங்குகள்போல முகவாட்டத்தோடு இருப்பதற்குக் காரணம் யாது?

தருமர்:— முனிநாதா! "கும்பிடப்போனவர் தலையில் கோயிலிடிது விழ்ந்தது" போலச் "சர்ப்பகேதனன் செய்த வஞ்சனையாற்கானுறை வாழ்க்கையை நாமடைய நேர்ந்ததென்றறிகுவீராக.

வீமன்:— பெருந்தவ முனிவ! 'நன்மை செய்யப்போனவர்க்குக் கண்மம்வந்து சேர்ந்தது' போல வெம்பணிக் கொடியோன் சூழ்ச்சியால் நாமிந்தக் காட்டையடைந்தோ மென்றறிவீராக.

அரிச்:— முனிபுங்கவ! "சாந்துப்பெட்டியென்று நம்பப் பாம்புப் பெட்டியானது" போலப் பெரியதந்தை அழைத்தனரென்றெண்ணிப் புதுமாளிகை பார்க்கச் சென்றமையின், எமக்கு இவ்விதமான இடுக்கண் நேர்ந்ததென்றறிவீராக.

நகுலன்:— மேலாந் தவத்தோய்! "புண்ணியத்துக்காய்க் கிணறு வெட்டப் பூதம்வந்து புறப்பட்டது" போலச் செய்ந் நன்றியற்ற நாகக்கொடியோனின் வஞ்சனையால் எமக்கு இவ்வகையான இன்னலேற்பட்ட தென்றறிவீராக,

சகாதே:— பெரியீர்! "பிள்ளையார் பிடித்து வைக்கப் பெருங் குரங்காய் மாறினது' போலப்பெற்ற பிதாவின் துணைவனென்று மதித்துப் பெரிய தந்தையிடம் செல்லப் பேதமையாய் முடிந்ததென்றறிவீராக.

துரோபதி.— (கரம் விரித்துக் கண்ணீர் பெருக்கி) சுவாமி! இந்த "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்." கண்ணிலா அருளிலிதன் காதற் குமரன் எனக்குச் செய்த கேடுகளைத் திங்களுள்ளமட்டும் மறப்பதென்றால் முடியாதையா. தவத்தின் முதல்வ! எனது குறைகளைத் தண்ணளியோடு தாங்கள் கேட்க யான் இயம்ப வேண்டுமாயின், ஐந்து பனையோலையிற்றானும் எழுதியடங்கா. அம்மட்டோ! ஏழுநாட் கழியினுமியம்பி முடியாவென்றறிகுவீராக:

வேத வி:— ஏ பாண்டு புத்திரரே! ஏ துரோபதியென்னும் நங்காய்! நிகழ்ந்தனவனைத்தையும் நீவிர் கூறுவதும் யான் கேட்பதும் கொடிது; பாவம். கிடைக்கப் பெறாத தாயர் பாகத்தினும் கொடிய பகையானது இனிதேயன்றோ! "வழுவழுத்த உறவினும் வயிரம் பற்றிய பகைமை நன்று' என்றல்லவா முதுமொழியுங் கூறுவர். அவாவினுக்குமோர் எல்லையுண்டா? மேலும்.

"நீவிரோ யல்லமுன்னூஏ் நிலமுழு
தாண்டநேமி, நாவிரி கீர்த்தியாளன் நள
னெனும் நாமவேந்தன், காவிரி யென்
னத்தப்பாக் கருணையான் சூதிற்றோற்றுத்,
தீவிரி கானஞ்சென்ற காதைநுஞ் செவிப்
படாதோ!"

உமக்கு மாத்திரம் இன்னனங் கெடுதிகளேற்பட்டதாகக் கருதாதீர்கள். முன்னாளிற் பூமி முழுவதையும் ஒரு குடைக்கிழாண்டவனாகிய நளன் என்ற நாமவேந்தன் சூதினால் அரசபதவியை முற்று மிழந்து கானுறை

## பாலத்தைக் குறித்துப் பிரச்சினை.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியவை மிகவும் ஆச்சரியத்தை விளைப்பதாக அக்கிராசனர் நியாயங்களுடன் கண்டித்தனர். மேலும் மேற்படி பிரதிநிதிகள் அறியாமையாலேயே தவறாகக்கூறநேர்ந்ததென்றும், விஷயங்களை நன்கறிந்தபின் இனியாவது தமது அபிப்பிராயத்தை மாற்றுவாரெனத் தாம் கருதுவதாகவும் அக்கிராசனர் கூறினர்.

இப்போது கொழும்பு—யாழ்ப்பாண வாலிப சங்கத்தினர் எடுத்து உண்மையை விளக்கியதுபோல் வேறு சபைகளும் விஷயங்களை நன்கு விளக்கி அபிப்பிராயங்களை வெளியிடின் அது அரசாங்கசபை அங்கத்தவர்க்குப் பெரிதும் உதவியாகும்.

ஈற்றில் பின்வரும் தீர்மானம் யாவராலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"இக்கூட்டம் புங்குடுதீவு வேலணைப் பாலவிஷயமாக, பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் என்னும் பகுதி அங்கத்தவர் கூறியவற்றை முற்றாக எதிர்க்கிறது. போக்குவரவு மந்திரிசபையினர் வெளியிட்ட அறிக்கையை இச்சபை அங்கீகரிக்கிறது. அவ்வறிக்கை வேலணை—புங்குடுதீவுப்பாலம் அவசாம் கட்டப்படவேண்டும் என்பதே. இவ்வறிக்கையை அரசாங்கசபையினர் அங்கீகரித்து மேற்படி பாலத்தை அமைக்க முற்படுவாராக."

## புத்தூரில் அடித்துக் காயப்படுத்திய வழக்கு.

யாழ்ப்பாணம் 12.

யாழ்ப்பாணம் பொலீஸ்கோட்டில் பொலீஸ் நீதிபதி திரு. K. ஆழ்வாப்பிள்ளை முன்பாக சென்ற சித்திரை மாதம் 4-ந் திகதியளவில் புத்தூர் வாசிகளாகிய (1) S. பூதத்தம்பி, (2) K. நாகன், (3) K. சின்னவன் முதலியவர்களுக்கு எதிராக மட்டுவில் வாசியாகிய S. வேலுப்பிள்ளை என்பவரால் தன்னை அடித்துக் காயப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இன்று தீர்ப்புக்கூறப்பட்டது.

நீதிபதி 1-ம் எதிரிக்கு ரூபா 100 அபராதமும், 2-ம், 3-ம் எதிரிகளுக்குத் தனித்தனி 25 ரூபா அபராதமும் விதித்தார்.

## உபசரணை மகாநாடு.

வடமாராட்சிப்பகுதிக்குச் சமாதான நீதிபதியாக நியமனம்பெற்ற வழக்கறிஞர் ஸ்ரீமான் இ. தாமோதரம்பிள்ளையவர்களை வரவேற்புபசரிக்கும் பொருட்டு உடுப்பிட்டி வாசிகளால், 1935-ம் ௵ கார்த்திகைமீ 9௳ சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு உடுப்பிட்டி ஆங்கில பாடசாலையில் ஒரு வரவேற்பு மகாநாடு கூட்டப்பெற்றது.

அத்தருணம் அதற்கென முன் செய்திருந்த ஒழுங்குப்படி ஷ்டி பெரியாரை அவரது இல்லத்திலிருந்து மேளதாள வாத்தியத்துடன் நன்கு அலங்கரிக்கப்பட்டு நறுமணங்கமழ்ந்துகொண்டிருந்த மோட்டோர் இரதத்தில் ஷ்டி பாடசாலைக்கு அழைத்து வந்தனர்.

வரவேற்புக்காரியதரிசி ஸ்ரீமான் வே. இ. இரத்தினம் ஆசிரியர் வரவேற்புப் பத்திரத்தை வாசித்துக்கொடுத்ததோடு ஸ்ரீமான் G. G. பொன்னம்பலம் M. S. C. அவர்களை இம் மகாநாட்டுக்குத் தலைவராகவும் பிரேரித்தனர். சபையார் சர்வசம்மதமாய் ஒப்புக்கொண்டனர்.

தலைவர்க்கும், ஷ்டி பெரியார்க்கும், பிரசாரகர் ஸ்ரீமான் ஆ. நாகநாத முதலியார் அவர்களுக்கும் பூமாலைகள் அணியப்பெற்றபின் வரவேற்புக் காரியதரிசியால், உபசரணைப்பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

தலைவர், 'பிரசாரகர் சமாதான நீதவானைப்பற்றிய மெய்மொழி உபசரணைகள் கூறியபின், திருவாளர், திக்கம் செல்லையாபிள்ளை, வல்வெட்டி ஆசிரியர் S. கிருஷ்ணபிள்ளை, உடுப்பிட்டி ஆசிரியர், P. வேலுப்பிள்ளை என்போர் குறிப்புரை கூறினர்,

தேவாரபாராயணத்துடன் சந்தனம், பன்னீர், தாம்பூலம் வழங்கப்பெற்று மகாநாடு இனிது நிறைவெய்தியபின் மறுபடியும் ஷ்டி பெரியாரை அவரது இல்லத்துக்கு இடையிடையே வாணவேடிக்கைகளுடனும் அழைத்துச்சென்றனர். —கடித.

---

வாழ்க்கையை அடைந்த காதையை நீவிர் கேட்கவில்லையா! ஆபின், ஏ தருமபுத்திர! பற்குணனென்பான் இப்பொழுதே சென்று சிவபிரானைக் குறித்துத் தவம் புரிந்து, அப்பெருமானிடம் பாசுபதம் பெற்றுவரவேண்டும். அன்றி நமது பகைவரை வெற்றியடைவது இயலாததாகும்.

தருமர்:— (பார்த்தனை விளித்து) ஏ மகபதி மைந்த! எம்பி! எமது குருவின் கட்டளைக்கிணங்க வெள்ளிமலைச் சாரல் சென்று குன்றவில்லானைக் குறித்துத் தவம்புரிந்து திருவருள் பெற்று வருவாயாக.

(அருச்சுனன் குருவையும் தமையனையும் வணங்கினன். வியாசமுனிவர் அவன் செவியில் மந்திரோபதேசஞ் செய்தனர். நன்முகூர்த்தம் பார்த்து வெள்ளியங்கிரிச்சாரலிற் சென்றடைந்தனன்.)

காட்சி முடிகிறது.

---

# என்காலம் போய்விட்டது. (6)

(முருகரம்மான் எழுதுவது.)

### கதிர்காம யாத்திரை

கதிர்வேலாயுதசுவாமி கனவில் தோன்றி விடைதந்த வருடங்களிலேயல்லாது மறுவருடங்களில் நான் கதிர்காமம் போனதே கிடையாது. ஆனால் இக்காலத்தில் கறுப்பன்முதல் கறுவாக்காட்டுத் துரைச்சாணி ஈறுகப் பணச் செலவுள்ளவர்கள் எவரும் போகக் காண்கிறோம். கோயிலுக்குப் போவதைத் தடுப்பாரெவருமில்லை. ஆனால் இவர்களிற் சிலர் அங்கே செய்யும் அக்கிரமங்கள் பலவுள. அவற்றுட் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நான் முதன்முறை சென்றபொழுது உத்தாவின்மேல் கால்நடையாகவே சென்றேன். எனது நண்பரொருவர் புகையிரதமார்க்கமாய் மாத்துறைவரையில் சென்று மிகுதித்தூரத்தைக் கால்நடையாகவே நடந்தார். நான் இரண்டாம்முறை சென்றபொழுது சிலர் திசைமாறுவரைக்கும் புகைரதமும் பஸ்உம் மிகுதித்தூரம் கால்நடையாகவும் நடந்தார்கள். ஆனால் தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து நேரே மோட்டாரில திசைமாறுமைக்குச்சென்று அங்கிருந்து வைக்கோற்போர் மெத்தைபோட்ட வண்டிகளில் வெகு உல்லாசமாய்ப் போய்வருகிறார்கள. இதுமட்டுமா! செல்லக் கதிர்காமம் போவதற்குக்கூட வண்டியமர்த்திப் போய்வருகிறார்கள். கஷ்டமின்றிப் பெறும் இன்பம் அவ்வளவு சுவையுடையதாகாது. "பாடின்றிப் பட்டமில்லை" எனபதை இவர்கள் கேட்டும் அறியார்கள்போலும்.

### கதிர்காமமென்பதை மறந்துவிடுகிறார்கள்

சவுக்காரங்களைக் கங்கையில் கரைத்து விடுகிறார்கள். நாடகசாலைக்குப் போவார்போல் ஆண்களும் பெண்களும் கைகோத்து ஆங்கிலம்பேசிச் சரச சல்லாபஞ் செய்துகொண்டு வீதிகடோறும் திரிகிறார்கள். சிலர் புகைப்படம் பிடிப்பிக்கிறார்கள். சில பெண்கள் கைகளுக்கு வளையல்கள் போடுவித்து அழகு பார்க்கிறார்கள். அவைகளை விற்கும் மகமதியர்கள் "கொழும்பு வேல் உற்சவத்துக்கென்று ஆடர்செய்த வளையல்கள் அம்மா" என்று உரக்கக் கூவுகிறார்கள். அக்காலத்திலிருந்த "அரோகரா" சத்தம் இக்காலத்தில் அறவேகிடையாது. கங்கைக்கரையில் காசைவைத்துவிட்டு யார் ஸ்நானஞ்செய்யப்போவார்களென்று பார்த்திருந்து திருடிக்கொண்டுபோய்விடுகிறார்கள். "அரோகரா இது யாருடையபொருள் கங்கைக்கரையில் கிடந்தது" என்னும் சப்தங்களை காணவேகாணேம். பிரயாணச் சீட்டை, பஸ் சீட்டைப் போட்டுவிட்டோம் என்று பொய்வழங்கிப் பணஞ்சேகரிப்பார் பலர். எண்பது வயதுசென்ற வயோதிகர்களெல்லாம் அரோகராச் சப்தத்துடன் கதிரைமலையில் ஏறத் தடித்த சரீரத்துடனும் வெளுத்த உடையுடனும் துரைமகனும் துரைச்சாணியும் அரைமலைவரையில் ஏறிவிட்டுத் திரும்புவதையும் சிலர் அதுவும் செய்யாமல் சடையம்மா மடத்தினுள் அறை அமர்த்தி நன்றாகச் சாப்பிட்டு வேடிக்கைகளைப் பார்த்துவிட்டுத் திரும்புவதையும் காண்கிறோம். மாத்துறை அடைந்ததும் உருத்திராக்கமாலைகள் மாயமாகச் சட்டைக்குள் மறைந்துவிடுகின்றன. அதன்பின் சிவசின்னங்களையுங் காண்பதரிது.

### கரைச்சலில்லாக் கதிர்காமம்

சென்ற ஆடி உற்சவத்திற்கு நான் கடைசிமுறை சென்றேன். ஒரு மோட்டாரிரதம் ஐந்தாங் கட்டைவரையில் வந்ததைக்கண்டேன். மறுவருடங் கோவில்வரையில் செல்லுவார்களென்பதற் கையமில்லை. இன்னுங் கொஞ்சக்காலஞ்செல்ல நேரே ஆகாயமார்க்கமாய்ப்போய்க் கதிரைமலை உச்சியில் இறங்கினும் இறங்கலாம். அங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்கு முகத்தைக் காட்டி "ஐயோ தெய்வமே! நானும் வந்தேன். இந்த வந்தவர்களைப் பதியும் டாப்பில் என்பெயரையுங் குறித்துவிடுக" என்று சொல்லிவிட்டு உடனேயே திரும்பிச் சாப்பாட்டிற்கு வீட்டுக்கு வந்துவிடலாம். எவ்வளவு சுகமான பிரயாணம்? அத்துடன் சுவாமியையுங் கண்டதாகுது. ஒரு கரைச்சலுமில்லாமல் வந்துவிடலாம். இது கடவுளைப் பேட்டிகாண இலகுவான முறையாகும்

ஐயோ! எவ்வளவு பரிதாபம்! இப்பாவிகள் கொஞ்சமாவது சிரமமெடாது கோவிலுக்குப் போகவேண்டுமென்ற உலக ஒப்பனைக்காகவோ அல்லது வேறு சில இச்சைகளைவேண்டியோ டாப்புப் பதிவுநேரம் பார்த்துப் போய்விடுகின்றனர். உண்மையாக இவர்களின் ஊன் மாத்திரம் அங்கிருப்பதல்லாமல் உள்ளம் உள்ளபடி பதிவதில்லை. எப்படி அவர்கள் மனம் படியும்? உடம்பு கஷ்டப்பட்டாற்றான் கடவுளில் மனம்பதியும். சிவதொண்டர்கள் தங்களுடம்பை எத்தனை விதமாகக் கயக்குகிறார்கள்? இவையெல்லாம் கடவுளிடத்தே மனதைப் படியச்செய்வதற்காகவே. சுகமும் செல்வமுமிருந்தால் கடவுளை ஒருபோதும் நினைக்க மனம்வராது. கஷ்டப்பட்டுப் பல இடையூறுகளைக் கடந்து தெய்வத்தைத் தரிசிக்கும் ஆவலுடன் மெய்வருத்தமுறச் சென்றாலல்லவோ சொற்ப நேரத்திற்காயினும் தெய்வத்தின் மகிமைவிளங்கும். ஏனையா! இன்னுங் கொஞ்சக்காலஞ் சென்றால் இவர்கள் இவ்வளவு சிரமமும் எடுக்கமுடியாமல் வரும். அப்போது கதிர்காமக் கந்தன் தானே வந்து இவர்களைத் தரிசித்துக்கொண்டு போகலாமே!

---


# நாட்டு பொருள் அபிவிருத்தி(வரைவுளது)

மூலதனம் ரூ 30,000

ரூபா 100 கொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை
கரைச்சி நீர்ப்பாய்ச்சல் பகுதியில் நடந்துவருகிறது.

**பங்கு ஒன்றுக்கு ரூ 10- விகிதம்
பத்து மாதங்களில் கொடுக்கலாம்.**

பங்கு தொகை மொத்தமாக கொடுப்பவருக்கு
நூற்றுக்கு ஐந்து கழிவு.

நீர்ப்பாச்சல் பகுதிவேளாண்மை நாளேற வருவாய் ஏறிவருவது
தெளிவாயிற்று.

**அதிக ஆதாயந்தருவது! பங்குக்கு முந்துங்கள்!**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வ. சோமசுந்தரம்.
கந்தரோடை வித்தியாசாலை மனேஜர் சி. கந்தையா.
நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A
ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்.

ஆரம்ப கருத்தாக்கள் :—

Dr. சி. சுப்பிரமணியம் Retired Prov: Surgeon.
R. R. நல்லையா. J. P. யா. ந. ச. தலைவர்.
சி. முத்துவேலு J. P. கொக்குவில் கிராமச்சங்கத் தலைவர்.
K. தம்பிப்பிள்ளை, வித்தியாசாலை மனேசர், காங்கேயன்துறை
ஆ. மாணிக்கம். விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்த வரோதயக்கல்லூரி, கந்தரோடை.

(44) 10-11-35-4


---


## அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுச் சமுதாய (Lanka Benefit Co.,) நிறைவுவிழா விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

நிகழும் யுவவருஷம் கார்த்திகைமாசம் 7-ம்தேதி (22-11-35) வெள்ளிவாரத்தன்று எமது அ. இ. ஆ. ஏ. சீ. சமுதாயத்தின் இரண்டாவதாண்டு நிறைவுவிழாவை (மூன்றுவதாண்டுவிழா) நியாயவாதி திரு M. S. இளையதம்பி அவர்களின் தலைமையின்கீழ் கொண்டாட நிச்சயித்திருப்பதால் அவ்வமையம் சமுதாயத்தின்மீது அன்பும் அனுதாபமுமுள்ள அனைவரையும் தவறது சமுகந்தந்து சமுதாயத்தை ஆசீர்வதித்துச் சந்தோஷித்தேகுமாறு அன்புடனழைக்கின்றேம்.

இங்ஙனம்,

11-11-35 T. Sellathamby
யாழ்ப்பாணம் Manager
Lanka Benefit Co.,


---

## அபினுடன் அகப்பட்ட பொன்னுச்சி.

யாழ்ப்பாணம் 12.

மயிலிட்டி வாசியாகிய ச. பொன்னுச்சி என்னும் பெண்ணொருத்தி அபினுடன் பிரயாணப்படுகிறுள் என்ற செய்தியைக் கேள்வியுற்ற மதுப்பரிசோதகர்கள் N. T. இராமனுதன் D. S. நதானியேல்ஸ் இருவரும் நேற்றைய இரவு கொழும்புக்குச்செல்லும் புகைவண்டித்தொடரில் அம்மாதைச் சோதித்தபோது $1\frac{1}{2}$ ரூத்தல் அபினும் பொல்காவலைக்குச்செல்லும் பிரயாணச்சீட்டும் காணப்பட்டது.

இவளை நீதிபதி முன்னிலையில் விடுப்ப நீதிபதி வழக்கை வருகிற 5-ந் திகதிக்கெனத் தவணையிட்டு எதிரியாகிய பொன்னுச்சியைப் பிணையில்விடுத்தார். ந-தி.

Registered as a Newspaper. 13 Pages

# “The EELAKESARI”

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 17th November 1935, Sunday. { No. 19

## லங்கா பினன்ஸ் கம்பெனி

The
**Lanka Finance Company**
Stanley Street, Grand Bazaar
JAFFNA

காரியாலயம் :

ஸ்ரான்லி ஸ்றீட், பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | வகு. | ரூ. 1000/- | ரூ. 40/- | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | ,, | ,, 500/- | ,, 20/- | ,, | 25 | ,, |
| C | ,, | ,, 250/- | ,, 10/- | ,, | 25 | ,, |
| D | ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| E | ,, | ,, 75/- | ,, 3/- | ,, | 25 | ,, |
| F | ,, | ,, 100/- | ,, 10/- | ,, | 10 | ,, |
| FNC | ,, | ,, 250/- | ,, 10/- | ,, | 12½ | ,, |
| WC | ,, | ,, 250/- | ,, 5/- | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| தினசரி B1 & 2 | ,, | 100/- | ,, 1/- | ,, | | |

கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி
வேண்டிய விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினன்ஸ் கம்பெனி,
ஸ்ரான்லி ஸ்றீற், யாழ்ப்பாணம்.

(33) 22-9-35.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கேங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
**மூ. குமாரசாமிப்பிள்ளை கடையில்**

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும்
குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மூ. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினோம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவானி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபற்செலவு வேறு.


சிங்கப்பூர், பினங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon

25) 21-1-34.

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும்
விசேடமாக மதிப்புப்பெறும்
பவுண்மார்க் ஓடுகள்
இவைகளே.



இன்று
மதிப்புடன் அழகு மிளிரும்
உன்னத மாளிகைகளில்
வேய்வுபெற்றுள்ளன.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதேனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். **பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.**

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

## இந்திய வங்கி லிமிற்றெட்
**THE INDIAN BANK Ltd.**
[Incorperated in British India in 1907]

ஷை வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(9) 2-6-35.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு “திருமகள் நிலைய” த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் “தலையாட்டி” யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஷு நவம்பர் மீ 17-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.